விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 14 திங்கட்கிழமை (30.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 285

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# அமைச்சுத் தெரிவில் தொடரும் இழுபறி!

## கூட்டமைப்பு கட்சிகளிடையே குழப்பம்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களை தெரிவு செய்வதில் தொடர்ந்தும் இழுபறிநிலை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சியினர் சிலர் தமக்கு அமைச்சுப் பதவி கோரிவரும் நிலையிலேயே இறுதி தீர்மானம் எடுக்க முடியாதநிலை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.**

நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கட்சித்தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் மாகாண அமைச்சர்களை தெரிவு செய்வது தொடர்பாக முடிபெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் எந்த முடிபு எடுக்கப்படவில்லை.

வடக்கு மாகாண சபை அமைச்சர்கள் தெரிவு மற்றும் போனஸ் ஆசனங்கள் குறித்து இறுதித்தீர்மானம் எடுப்பதற்காக நேற்றைய தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் காலை 9 மணிக்கு யாழ் மார்ட்டீன் வீதியிலுள்ள இலங்கை தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் கட்சிக் கலந்துரையாடலும் ஊடக சந்திப்பும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும் அந் நேரத்தில் மாவை சேனாதிராஜா எம்.பி. உள்ளிட்ட ஒரு சிலரே அங்கு பிரசன்னமாகியிருந்தமையால் கூட்டம் பகல் 12 மணிக்கு பிற்போடப்பட்டது.

அப்போதும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட மாகாண சபை உறுப்பினர்கள் அங்கு பிரசன்னமாகவில்லை.

பின்னர் இறுதியாக யாழிலுள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் மாலை 5 மணிக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் கட்சி உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் சிலருடன் கலந்துரையாடல் ஆரம்பமானது.

சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் வரை நீடித்த இக் கூட்டத்தில் போனஸ் ஆசனங்களில் ஒன்று சுழற்சி முறையில் வழங்குவதென்ற தீர்மானம் மட்டுமே எடுக்கப்பட்டது.

அமைச்சு பதவிகள் தொடர்பில் கட்சித் தலை

20ம் பக்கம் பார்க்க

## கிழக்கு மாகாண அரசு சாதித்தது என்ன?

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்தை தற்போது ஆட்சி செய்துவரும் அரசு பதவிக்கு வந்து ஒரு வருடமாகிறது.

மக்களுக்காக பல பணிகளை தாங்கள் செய்துள்ளதாக அரசு கூறினாலும், ஆளும் கூட்டணியில் உள்ளவர்களே அரசின் மீது தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண சபையின் தற்போதைய அரசாங்கம் பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ள

20ம் பக்கம் பார்க்க

## இராணுவத்தை சேர்ந்தவர் ஆளுநர் ஆனால் பிரச்சினை ஏற்படும்!

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் ஆளுநராக இருக்கும் போது பரச்சினை ஏற்படும் தான். அவரினால் மக்களின் பிரச்சினைகளை அறியவும் வாய்ப்பில்லை என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

சிவில் சமூகத்தினைச் சேர்ந்த ஒருவர் வடக்கில் ஆளுநராக நியமிக்கப்பட்டாலே மக்கள் தமது பிரச்சினைகளினை வெளிப்படுத்த முடியும் என வும் அவர் தெரிவித்தார்.

20ம் பக்கம் பார்க்க

## ஆளுநருடன் இன்று கூட்டமைப்பு சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர் மட்டக் குழுவினர் இன்று காலை 10 மணிக்கு வடமாகாண ஆளுநர் அலுவலகத்துக்குச் செல்லவுள்ளனர்.

இதன்போது ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியையும் சந்தித்து கலந்துரையாடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் போது வடக்கு மாகாண சபையை அமைப்பது குறித்து கலந்துரையாட

20ம் பக்கம் பார்க்க

## மாகாணசபை அதிகாரங்களை எல்லை மீறி செயற்படுத்த முடியாது

### அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழர்களின் மேலாதிக்கம் உள்ள வடக்கு மாகாண சபை உட்பட இலங்கையின் ஏனைய மாகாண சபைகள் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை அதன் விருப்பங்களுக்கு அமைய அவற்றை கையாள முடியாது என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை உட்பட இலங்கையின் சகல மாகாண சபைகளும் அவற்றிற்கு இருக்கும் அதிகார வரம்பிற்குள்ளேயே செயற்பட வேண்டும்.

காணி அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்கே இருப்பதாக உயரநீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இதனால் வடக்கு மாகாணத்திற்கு காணி கட்டுப்பாட்டு அதிகாரங்களை கூட்டமைப்பு கோருவது வலுவற்றது.

மாகாணசபைகளுக்கு காணி அதிகாரங்கள்

20ம் பக்கம் பார்க்க

## அரசுக்கு வெளிநாட்டுக்கடன் 75 ஆயிரம் கோடி ரூபாய்!

### ஐ.தே.க. சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரசாங்கம் வெளிநாடுகளில் இதுவரை 75 ஆயிரம் கோடி ரூபாய் கடனை பெற்றுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் தயா கமகே தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார். தேசிய சேமிப்பு வங்கியில் 9 சதவீத வட்டிக்கு அரசாங்கம் 750 மில்லியன் ரூபாயை கடனாக பெற்றுள்ளது.



பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்காக 500 கோடி ரூபாய் செலவில் இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் மாநாடு முடிவடைந்த பின்னர் அமைச்சர்களுக்கு நெருக்கமான நண்பர்கள் உறவினர்களுக்கு வழங்கப்படும்.

அதேவேளை மாகாண சபைத் தேர்தலை கிரிக்கெட் போட்டியாக அரசாங்கம

20ம் பக்கம் பார்க்க


## பிரபா-ரணில் உடன்படிக்கை வரலாற்றுச் சிறப்பு மிக்கது

### விக்கிரமபாகு தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க செய்து கொண்ட சமாதான உடன்படிக்கை வரலாற்று சிறப்பு மிக்கது என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர டாக்டர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பரபாகரனுடன் ரணில் விக்கிரம



சிங்கசமாதான உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ரணில் விக்கிரமசிங்கவின் இந்த நடவடிக்கையானது மிகவும் தைரியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடும்போக்குடைய சக்திகளுக்கு அஞ்சும் தரப்பினராலோ அல்லது அச்சமுடையவர்களினாலோ இவ்வாறான நடவடிக்கை

19ம் பக்கம் பார்க்க

# போராளிகளின் தியாகங்களால் பெறப்பட்ட வடக்கு மாகாணம்

## துஸ்பிரயோகம் செய்ய வேண்டாம் என்கிறது ஈ.பி.டி.பி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையானது தமிழ் மக்களின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்து போராடிய அத்தனை போராளிகளினதும் தியாகங்களால் பெறப்பட்ட சிறந்த சந்தர்ப்பமாகும்.

அதனை வெறுமனே பதவிகளுக்கானதாகப் பார்க்காமல் எல்லாவற்றையும் இழந்து நிற்கும் தமிழ் மக்களின் வாழ்வை மீண்டும் தூக்கி நிறுத்துகின்ற வாய்ப்பாக எண்ணி செயலாற்ற வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் எடுத்திருக்கும் தீர்மானத்தை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியாகிய நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். மாகாண சபையை அர்த்தமுள்ள அதிகார அரசாக பாதுகாக்க வேண்டும் என்று தொடர்ந்து நாம் கூறி வந்திருக்கிறோம்.

வடக்கு மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கும் கூட்டமைப்பினர் பல்வேறு வாக்குறுதிகளை தமிழ் மக்களுக்கு வழங்கி இந்த வெற்றியைப் பெற்றிருக்கின்றார்கள். தற்போது மாகாண சபையின் அமைச்சுப் பொறுப்புகளை தமக்குள்ளே பகிர்ந்து கொள்வதில் முரண்பட்டு நிற்கின்றனர்.

தமிழ் மக்கள் வழங்கியிருக்கும் ஆணையானது, யாரும் பதவிச் சுகம் அனுபவிப்பதற்கோ, அதற்காக முரண்பட்டு மாகாண அரசை செயலிழக்கச் செய்து அதைக் கொச்சைப்படுத்துவதற்கோ வழங்கப்பட்டதல்ல என்பதை கூட்டமைப்பின் உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மாகாண சபையானது தமிழ் மக்களின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்து போராடிய அத்தனை போராளிகளினதும் தியாகங்களால் பெறப்பட்ட சிறந்த சந்தர்ப்பமாகும். அதை வெறுமனவே பதவிகளுக்கானதாகப் பார்க்காமல் எல்லாவற்றையம் இழந்து நிற்கும் தமிழ் மக்களின் வாழ்வை மீண்டும் தூக்கி நிறுத்துகின்ற வாய்ப்பாக எண்ணிச் செயலாற்ற வேண்டும்.

மாகாண சபையை பாதுகாப்பதற்கும், மேலதிகமாக அதனூடாகப் பெறுவதற்கும் நாம் அதிகமாகவே பாடுபடவேண்டியிருக்கும். அதற்காக தம்மை அர்ப்பணித்துச் செயலாற்ற வேண்டிய தருணம் இதுவாகும்.

இவ்வேளையில் முரண்பாடுகளைத் தவிர்த்து அதாவது மாவை சேனாதிராஜா அவர்கள் கூறுவது போல் அவரை பின்பற்றி இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வைக்கான வேண்டும் என்பதே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியாகிய எமது வலியுறுத்தலாகும்.

இதேவேளை காணி அதிகாரம் மாகாண சபைக்கு வேண்டும் என்பதே எமது விருப்பமாகும். மாகாண சபை அதிகாரங்களை அரசு முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென நாம் தொடர்ந்தும் கூறி வருவதன் நோக்கமும் அதுவேயாகும். மாகாண சபையைப் பாதுகாப்பதற்காகவும், 13ஆவது திருத்தச்சட்டத்தை பாதுகாப்பதற்காகவும் நாம் தொடர்ந்து உழைப்போம் என்றுள்ளது.


## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம்



T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

27.09.2013 முதல் 04.10.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(C-4959)



**காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு**

உடுவில் விவசாய திணைக்களத்திற்கு அருகாமையில் உள்ள 2 1/2 பரப்பு காணியும் கிணறுடன் வீடும் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு :


**0770152593, 0773460027**


# புலிகளை அழித்துவிட்டோம் என கூறும் அரசு தமிழக மீனவர்களை ஏன் தாக்குகிறது ?

## விஜயகாந் கேள்வி

இலங்கையில் விடுதலைப்புலிகள் இயக்கத்தை அழித்து விட்டோம் என்று கூக்குரலிடும் இலங்கை அரசு தமிழக கடலோர மீனவர்கள் மீது தொடுத்த தாக்குதல்களை இன்று வரை நிறுத்திக் கொள்ளவில்லை என தேமுதிக தலைவர் விஜயகாந் தெரிவித்துள்ளார்.

அவர்வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,



இலங்கை அரசு தொடர்ந்தும் மீனவர்களை தாக்கி வருகிறது. அதற்கு காரணம் இவர்கள் அனைவரும் தமிழர்கள் என்பதால் தான். கடந்த 30 ஆண்டுகளாக தமிழக கடலோர மீனவர்களை துப்பாக்கியால் சுட்டுக் கொல்வதும், தாக்குவதும் அவர்களின் உடைமைகளை பறித்துக் கொள்வதும் போன்ற அராஜக செயலை செய்த வண்ணம் உள்ளது.

ஆனால் தற்போது தமிழக கடலோர மீனவர்களின் தற்போதைய நிலை, அவர்களின் வாழ்வாதாரத்தையே கேள்விக்குறியாக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகபட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விசைப்படகு மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களில் மட்டும் சுமார் 34 விசைப்படகுகளும், சுமார் 180 மீனவர்களும் இலங்கை அரசினுடைய கடற்படையால் சிறைப் பிடிக்கப்பட்டு, இலங்கை சிறையில் குற்றவாளிகளாக அடைக்கப்பட்டு, அதில் பலர் விடுதலை செய்யப்பட்டும் உள்ளனர்.

இதுவே இலங்கை அரசு தமிழக மீனவர்கள் மீது எடுத்துள்ள மோசமான நடவடிக்கையாகும். ஆனால் இதையும் மீறி இலங்கை நீதிமன்றம் தமிழக மீனவர்களின் 5 விசைப்படகுகளை இலங்கையின் தேசிய சொத்தாக கருதலாம் என்று அத்துமீறி அறிவித்துள்ளது.

இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது. இச்செயல் இலங்கை அரசினுடைய சர்வதிகார போக்கிற்கு எடுத்துக்காட்டாக உள்ளது. இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார். (எ-8)


கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 1964 - 02 - 28

மறைவு 2013 - 09 - 26



அமரர் முருகுப்பிள்ளை நிர்மலன்

(பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் மு/கலைமகள் வித்தியாலயம்)

26/09/2013 அன்று இறைவனடி சேர்ந்த
எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்
முருகுப்பிள்ளை நிர்மலன் அவர்களுக்கு
எமது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலியை
காணிக்கையாக்குகின்றோம்.
அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின்
குடும்பத்தவர்களின் துயரிலும்
பங்கெடுத்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

- பாடசாலைச் சமூகம் -
மு/ கலைமகள் வித்தியாலயம்
முள்ளியவளை

(C-4262)



**உடனடி விற்பனைக்கு**

1. 10 KV ஜெனரேட்டர் டீசல் (விலை 110,000)
2. டீப்பிறீசர் 5 அடி (விலை 45,000)
3. கொம்ரேஸர் (ஐஸ்கிறீம் பாத்துக்குப் பூட்டுவது) (விலை 130,000)

தொடர்புகளுக்கு :

**0771573997**



**மனத்தளர்வா? தனிமையா? வாழ்க்கையில் வெறுப்பா?**

உங்களுக்காக நாங்கள் இருக்கின்றோம். உடனே அழையுங்கள். இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

**கைகொடுக்கும் நண்பர்கள்**

**021 222 8117**


# இலங்கையர் நால்வர் லண்டனில் கைது

(லண்டன்)

லண்டனில் திருட்டு கிரெடிட் அட்டையில் பண மோசடியில் ஈடுபட்ட இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தன்னியக்க கருவியில் பண மோசடி செய்த குற்றச்சாட்டின் அடிப்படையில் இலங்கை பிரஜைகள் நால்வர் பிரித்தானியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரித்தானியாவின் க்ளொஸ்டசெயர் பிரதேசத்தில் தொடர்ச்சியான தன்னியக்க கருவியில் பண மோசடி செய்துள்ளனர்.

குரொய்டன் தென் பகுதியை சேர்ந்த பஸீர் முஸ்தபா (வயது 21), அசோக் பாலசுப்பிரமணியம் (வயது 22), தங்கவேல் வேலாயுதம் (வயது 50) மற்றும் மிடில் செக்ஸ் பேனார்ட் காடன் பிரதேசத்தைச் சேர்ந்த குசலகுமார் சிதம்பரப்பிள்ளை ஆகிய நால்வருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த 23ஆம் திகதி கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் மீது பிரித்தானிய வங்கிகளில் வங்கி அட்டைகளின் மூலம் முறைகேடுகளை மேற்கொண்ட குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. (எ-11)

# இன்று ஒரு தகவல்

## சங்கீத சங்கடம்

எனக்கு மிகவும் வேண்டப்பட்ட ஒருவர் ஒரு நாள் என்னைத் தேடி வந்தார். "நான் நாதஸ்வரம் வாசிக்க கற்றுக் கொள்ளப் போகிறேன்!" என்றார்.

நான் பயந்தே போய்விட்டேன். ஏனென்றால் அவரைப் பற்றி எனக்கு நன்றாகவே தெரியும். அதனால் "உங்களுக்கு ஏன் இந்த விபரீத ஆசை! சங்கீதம் என்பது ஒரு சுகமான அனுபவம்! நாமும் கஷ்டப்பட்டு அதையும் கஷ்டப்படுத்த வேண்டாமே! என்றேன்.

அவர் அதை காதில் வாங்கிக் கொள்வதாகவேயில்லை. மிகவும் உறுதியுடன் இருந்தார். சரி... வேறு வகையில் அவரின் எண்ணத்தை மாற்றலாம் என்று நினைத்து, ஒரு நேயர் எனக்குத் தெரிவித்திருந்த ஒரு கதையை அவரிடம் சொன்னேன். ஒரு ஊரில் ஒரு கோயில் இருந்தது. அந்த கோயிலில் உள்ள தல விருட்சத்தில்(மரம்)ஒரு பிரம்ம ராட்சஷன் இருந்தான். அவன் ஒரு காலத்தில் பல பாவங்கள் செய்து சாபத்தினால் பிரம்ம ராட்சஷனாக மாறியவன்.

சாப விமோசனத்துக்காக அந்த மரத்தில் காத்துக் கொண்டிருந்தான். அவனுக்கு உருவம் கிடையாது. அதனால் கண்களால் அவனைக் காணவும் முடியாது.

அந்தக் கோயிலில் ஒருவர் தினமும் நாதஸ்வரம் வாசிப்பார். வாசிக்கிறார் என்றே சொல்ல முடியாது. ஊதுவார் அவ்வளவு தான்! முறையான பயிற்சி இல்லாதவர்.

தினமும் காலையிலும் மாலையிலும் வாசிப்பார். பிரசாதம் கொடுப்பார்கள். அதை வாங்கி சாப்பிட்டுக் கொண்டு மறுபடியும் வாசிப்பார். இப்படியே அவரது காலமும் போய்க் கொண்டிருந்தது.

ஒரு நாள் அவர் நீண்ட நேரம் வாசித்து விட்டு இரவு வீட்டுக்குப் புறப்பட்டார். அப்பொழுது அந்த மரத்திலிருந்த பிரம்மராட்சஷன் அவரிடம் போய் பரிதாபமாக பேசியது.

"இதோ பார்... என்னை நீ கண்களால் பார்க்க முடியாது. இருந்தாலும் நீ வாசிப்பதை தினமும் நான் கேட்டுக் கொண்டு தான் இருக்கிறேன். எனக்கொரு உதவி செய்வாயா?" என்று கேட்டது.

"என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டார் இவர். "இனிமேல் நீ வாசிப்பதை விட்டுவிட வேண்டும்! என்றது. "ஏன்அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டார் இவர்.

"நான் ஏற்கனவே ஒரு பாவம் பண்ணிவிட்டு சாபவிமோசனத்துக்காக காத்துக் கொண்டிருந்தாலும் சங்கீத ஞானம் உள்ளவன்தான்... நீ வாசிப்பது கொஞ்சம்கூட நன்றாக இல்லை. அபஸ்வரமாக இருக்கிறது!

என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை! இதே மாதிரி நீ தினமும் வாசித்தால் சாபவிமோசனம் கிடைக்க முன்பே நான் செத்துப் போனாலும் போய்விடுவேன்.

"இப்பொழுது உன் வாசிப்பைக் கேட்டு துரும்பாக இளைத்து விட்டேன்!" என்றது. "நீ சொல்வது சரிதான், நான் வாசிப்பதை என்னாலேயே சகிக்க முடியவில்லை! இருந்தாலும் இதை விட்டால் எனக்கு வேறு வழியில்லை! சாப்பாட்டுக்கே நான் இதைத்தான் நம்பியிருக்கிறேன். இதை விட்டு விட்டு என்ன செய்வது என்றார் அவர். " உனக்கு சாப்பாட்டுக்கு ஏதாவது வழி பண்ணினால் இந்த வாசிப்பை விட்டுவிடுவாயா?" என்றுகேட்டது அது.

"விட்டு விடுவேன்!" என்றார் இவர்.

அப்படியானால் நான் சொல்வதைக் கேள்! இந்த ஊர் ராஜாவின் மகளைப்போய் நான் பிடித்துக் கொள்கிறேன். தன்மகளுக்குப் பேய் பிடித்துவிட்டது என்று தெரிந்தவுடன் அந்த ராஜா ஊரிலுள்ள மந்திரவாதிகளையெல்லாம் கூப்பிட்டுப் பேய் ஓட்டுவார்! நான் யாருக்கும் அசைந்து கொடுக்காமல் இருந்து விடுகிறேன்.

கொஞ்ச நாள் கழித்து நீ அந்தஅரண்மனைக்கு வா. "நான் அரச குமாரிக்கு பிடித்திருக்கும் பைத்தியத்தை சரி செய்கிறேன் " என்று சவால் விடு. அதன் பின்னர் நாதஸ்வரத்தை வாசி நான் அந்தப் பெண்ணை விட்டு ஓடி விடுகிறேன்.

உடனே ராஜா உனது திறமையைப் பாராட்டி பொன்னும் பொருளுக்கும் நிறையக் கொடுப்பார். அதை வைத்துக் கொண்டு நீயும் உன் பரம்பரையும் சுகமாகக் காலம் தள்ளலாம்.! என்று யோசனை சொல்லியது.

இவரும்யோசித்துப்பார்த்து விட்டுசரியென்றுஒத்துக்கொண்டார்.

இந்தத்திட்டத்தின் படியே எல்லாம் நடந்தது. ராஜா நிறைய பரிசு கொடுத்தார். இவரும் நாதஸ்வரம் வாசிப்பதை விட்டு விட்டார்.

இந்தக் கதையை எதிரில் உட்கார்ந்திருக்கும் நண்பரிடம் சொன்னேன். அப்படியும் அவர் நாதஸ்வரம் கற்க வேண்டும் என்ற ஆசையை கைவிட்டதாகத் தெரியவில்லை.

சரி... இவரை எப்படி வழிக்குக் கொண்டு வரலாம் என்று யோசித்து பார்த்தேன். கடைசியாக ஒரு விடயத்தைச் சொன்னேன். அதைக் கேட்ட பின்னர்தான் "நான் நாதஸ்வரம் கற்கும் யோசனையை கை விடுகிறேன்!" என்று ஒத்துக் கொண்டார்.

நான் என்ன சொன்னேன் தெரியுமா? "நீங்க நாதஸ்வரம் வாசிக்க கற்றுக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்தால் நான் உங்களுக்கு உதவியாக தவில் வாசிக்கக் கற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்! என்றேன்" அவ்வளவுதான்! ஆள் அம்பேல்!

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# எமது வரம்பை மீறிய தூதுவன் எனக்கான பணியில் இப்போது இல்லை

## தயானை கடிந்து கொள்கிறார் மகிந்த

ஜெனீவாவுக்கான இலங்கையின் முன்னாள் ஐ.நா.வின் நிரந்தர பிரதிநிதி தயான் ஜயதிலகவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நேற்று முன்தினம் முதல் முறையாக வெளிப்படையாக விமர்சித்தார்.

தயான் ஜயதிலக அரசியல் அறிக்கைகளை வெளியிடுவதாகவும் அவர் தற்போது அரசசார்பற்ற நிறுவனமொன்றில் உறுப்பினராக இருப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

வெலிவேரிய பிரதேசத்தில் இராணுவத்தினர் நிராயுதபாணிகளான பொதுமக்கள் மீது துப்பாக்கச் சூடு நடத்திய சம்பவம் தொடர்பில இராணுவத்தின் மீது குற்றம் சுமத்திய தயான் ஜயதிலக அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்திருந்தார்.

அல்- ஜெசீரா தொலைக்காட்சியின் நேர்காணலின் போது, ஜனாதிபதியை நேர்கண்ட ஊடகவியலாளர் இது குறித்து அவரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி,

தயான் ஜயதிலக அரசியல் காரணங்களுக்காக அறிக்கைகளை வெளியிடுவதாக குறிப்பிடடார்.

அவர் உங்களது தூதுவர் அல்லவா என ஊடகவியலாளர் ஜனாதிபதியிடம் வினவியபோது.

ஆம், அவர் எனது தூதுவராக இருந்தவர் தான். ஆனால்தற்பொழுது அவர் மிகவும் பலமிக்க அரசசார்பற்ற நிறுவனத்தின் உறுப்பினர். இதனால் அவர்களுக்கு தனியான மதிப்பு உள்ளது என ஜனாதிபதி கூறினார்.

அதேவேளை எவரும் எக்கருத்தையும் தெரிவிப்பது ஜனநாயகம் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வெளிப்படையான கண்காணிபபுகள் இருக்கும் நிலையில், குடிநீர் கேட்டு ஆர்ப்பாட்டம் நடத்திய ஆயுதம் தரிக்காத சிங்கள, பெரும்பான்மை பௌத்த பொதுமக்களான ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் மீது இத்தகைய தாக்குதலை நடத்திய அரசாங்கம், போரின் இறுதிக கட்டத்தில் தமிழ் மக்களை எப்படி நடத்தியிருக்கும்? என தயான் ஜயதிலக முன்னதாக கேள்வி எழுப்பியிருந்தார.

அதேவேளை ஜனாதிபதியின் குற்றச்சாட்டு தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள தயான் ஜயதிலக, ஜனாதிபதியின் குற்றச்சாட்டு முற்றிலும் அடிப்படையற்றது எனவும் அவர் முறறாக தவறான தகவலையே வெளியிடடுள்ளதாகவும் தெரிவித்தார்.

மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் நான் அரசசார்பற்ற நிறுவனத்தின் உறுப்பினராக இருந்ததாகவும் அப்போது இலங்கையின் பல் இன நீதி மற்றும் சமத்துவத்திற்கான அரசசார்பற்ற நிறுவனத்தின் உறுப்பினராக செயற்பட்டு வந்ததாகவும் தயான் ஜயதிலக தெரிவித்தார்.

இந்த நிலையில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

தற்பொழுது நான் உள்நாட்டு அல்லது சர்வதேச நாடுகளை சேர்ந்த பெரிய அல்லது சிறிய அரச சார்பற்ற நிறுவனங்கள் எதிலும் தற்பொழுது உறுப்பினராக இல்லை என்பதைத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் கூறுகிறேன்.

அப்படி நான் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றில் உறுப்பினராக இருக்கின்றேன் என்றால், எந்த நிறுவனத்தில் நான் உறுப்பினராக இருக்கின்றேன் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன் என்றும் அவர் கூறினார்.

இலங்கையின் முன்னாள் இராஜதந்திரியான தயான் ஜயதிலக ஜெனீவாவுக்கான இலங்கையின் பிரதிநிதியாக பணியாற்றியதுடன், பிரான்ஸ் நாட்டுக்கான தூதுவராகவும் முன்னர் பணியாற்றினார்.

அரசாங்கத்திற்கும் அவருக்கும் இடையில் ஏற்பட்ட அரசியல் ரீதியான கருத்து முரண்பாடுகளை அடுத்து அவர் அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-140 | 90 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 80 |
| தக்காளி | 100 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 60 | 60 |
| கரட் | 50 | 60 | 80 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 160 | 100-110 | 160 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 90 |
| பாகற்காய் | 100 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | 80 |
| பயற்றங்காய் | 40 | 40 | 60 |
| லீக்ஸ் | 60 | 60 | 120 |
| பீற்றூட் | 10 | 20 | 30 |
| கறிமிளகாய் | 40 | 50 | 60 |
| முருங்கைக்காய் | 50 | 110 | 80 |
| போஞ்சி | 90 | 90 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 25 |
| தேசிக்காய் | 500 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40-50 | 35-45 |
| இராசவள்ளி | 60 | 60 | 120 |

## இராசி பலன்

30.09.2013
(புரட்டாதி 14, திங்கட் கிழமை)
சூரிய உதயம் 5.59 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 4.38 மணிவரை
பூசம் முற்பகல் 11.22 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
ஏகாதசி விரதம்

**மேடம்** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பெற்றோரின் ஆதரவால் பெருமைகள் காண்பீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க பிரியப்படுவீர்கள்.

**இடபம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரச வழியில் அனுகூலமுண்டு, நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், அந்நியர் சந்திப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், சுபகாரிய பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும், பேச்சில் கனிவு பிறக்கும், புதிய நட்பால் நன்மையுண்டு.

**கடகம்** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்களைத் தேடி வரலாம், பயணங்களால் பலனுண்டு, ஆழ்ந்த சிந்தையுண்டு.

**சிங்கம்** திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், தொழிலில் ஆக்க பூர்வமான மாற்றங்களைச் செய்ய முன் வருவீர்கள், பிதா சிந்தையுண்டு, முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**கன்னி** திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசம் தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், நண்பர்கள் சந்திப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்** அருமையான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதர்பாராத பண வரவுகள் வந்து சேரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** எதிர்பார்த்த காரியங்கள் நடை பெறலாம், ஆன்றோர் சந்திப் புண்டு, உடல் உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**தனுசு** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம்.

**மகரம்** சொந்தபந்தங்களின் வருகையுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கும்பம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் ஏற் பட்ட அச்சுறுத்தல் அகலும், புதிய பொருட் சேர்க்கை உண்டு.

**மீனம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் மேலோங்கும், தாழ்ந்த சுபாவமுண்டு, வியாபார விருத்தியுண்டு, புதிய தகவல்கள் வந்து சேரலாம்.

வளவன்

# 7.5 % பொருளாதார வளர்ச்சி?

## மத்திய வங்கி நம்பிக்கை

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளின்படி, 2013இன் 2-ம் காலாண்டில் பொருளாதாரம் 6.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது.
கைத்தொழில் மற்றும் பணிகள்துறை இரண்டும் இவ்வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களித்த வேளையில் வேளாண்மைத்துறை சுருக்கமடைந்தது.
கைத்தொழில்துறை அதன் வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணி 10.1 சதவீதமான வளர்ச்சியொன்றினைப் பதிவு செய்தது.

இதற்கு கட்டடவாக்கம், தயாரிப்பு, சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல், மின்வலு, வாயு மற்றும் நீர்த்துணைத்துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சி உதவியாக அமைந்தது. பணிகள் துறையில் ஏற்பட்ட 6.6 சதவீதமான விரிவாக்கம் முக்கியமாக மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துணைத் துறைகளிலிருந்து தோன்றியது.
மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத் துணைத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகள் இரண்டிலும் ஏற்பட்ட விரிவாக்கம் உதவியாக அமைந்தது. எனினும மோசமான வானிலை நிலைமைகளின் காரணமாக தேங்காய் மற்றும் இறப்பர் உற்பத்திகளில் ஏற்பட்ட முக்கிய வீழ்ச்சியினால் வேளாண்மைத் துறை 1.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்த வேளையில் நெல் மற்றும் ஏனைய உணவுப் பயிர்கள் போன்ற உள்நாட்டு வேளாண்மைப் பயிர்கள் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைவான அளவிலேயே உற்பத்தியைப் பதிவு செய்தன. இரண்டாவது காலாண்டில் ஏற்பட்ட வளர்ச்சியுடன் 2013இன் முதலரைப் பகுதியில் பொருளாதாரம் 6.3 சதவீத வளர்ச்சியை எய்தியது.
இந்நிலையில் 2013இற்காக எறிவு செய்யப்பட்ட 7.5 சதவீதமான வளர்ச்சி நனவாகும்போல் தோன்றுவதுடன் இதன்மூலம் பொருளாதாரம் நடுத்தர காலத்தில்அதன் சாத்தியமான வளர்ச்சிப் பாதையினை நோக்கிப் பயணிக்கும் என மத்திய வங்கி எதிர்வு கூறியுள்ளது.

# கொழும்புக்கான ஏர் ஏசியா விமான சேவை மீள ஆரம்பம்

மலேசியாவின் பட்ஜெட் விமான சேவை வழங்குநரான எயார் ஏசியா நேற்றுமுன்தினம் முதல் இலங்கைக்கான தனது விமான சேவைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

மாலைதீவுகளின் மாலே விமான நிலையத்தினூடாக இந்த சேவைகள் இலங்கைக்கு மேற்கொளளப்படவுள்ளன.

கடந்த மார்ச் மாதம் முதல் இலங்கைக்கான சேவைகளை எயார் ஏசியா விமான சேவை இடைநிறுத்தியிருந்தது. மலேசியாவுக்கும், இலங்கைக்கும் காணப்படும் விமான பயண தூரமான 3.5 மணித்தியாலங்கள் தமது பயண சேவைக்கு பொருத்தமானதாக காணப்படாததன் காரணமாக இந்த தீர்மானத்தை தமக்கு மேற்கொள்ள நேரிட்டதாக எயார் ஏசியா அறிவித்திருந்தது.

தற்போது மாலே விமான நிலையத்தில் தரித்து, தமது பயணத்தை மேற்கொள்ளவுள்ளமையால் இந்த சேவை தொடரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் எயார் ஏசியா குறிப்பிட்டுள்ளது.

பொதிகள் மற்றும் உணவு கட்டணமின்றி, எயார் ஏசியா கொழும்பு-கோலாலம்பூர் பயணச்சீட்டுக்கு 11 ஆயிரத்து 352 ரூபாவையும், மீள திரும்பல்களுக்கு 9, 285 ரூபாவையும் அறவிடுவதாக அறிவித்துள்ளது.

# ப.மு. சம்மேளனத்தின் புதிய தலைவராக டிகான்



பங்கு முகவர்கள் சம்மேளனத்தின புதிய தலைவராக டிஹான் தெடிகமகே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சொஃப்ட்லொஜிக் ஸ்ரொக் புரோக்கர்ஸ் லிமிடெட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக டிஹான பணியாற்றி வருகிறார்.

இதற்கு முன்னர் இவர் ஆசியா செக்கியுரிட்டீஸ் மற்றும் ஜோன் கீல்ஸ் ஸ்ரொக் புரோக்கர்ஸ் ஆகிய நிறுவனங்களில் 1987-ம் ஆண்டு முதல் பணியற்றிய அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

இவருக்கு முன்னர் சம்மேளனத்தின் தலைவராக ஆஷா பிலிப் செக்கியுரிட்டீஸ் லிமிடெட்டின் திமுது அபேசேகர நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடந்த வாரம் பங்குச்சந்தை

கொழும்பு பங்குச்சந்தை கட ந்த வாரம் ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த பெபேறுகளை பதிவு செய்திருந்தது.

குறிப்பிடத்தக்க அம்சங்களாக, டச்வுட் இன்வெஸ்மன்ட் பங்குகளை நாடாளுமன்ற உறுப்பினரான துமிந்த சில்வா கொள்வனவு செய்திருந்தமை மற்றும் கடந்த வெள்ளிக்கிழமையன்று சென்ரல் இன்வெஸ்ட் மண்ட் அன்ட் ஃபினான்ஸ் நிறுவனத்துக்கு எதிராக வைப்பாளர் ஒருவர் மனு தாக்கல் செய்திருந்தமை போன்ற விடயங்கள் இடம்பெற்றிருந்தன.

இவற்றுக்கு மேலதிகமாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள சந்தையில் பங்குகளைக் கொள்வனவு செய்வதில் கடந்த வாரம் பெருமளவு ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச சந்தை நடவடிக்கைகள் நிறைவடையும்பொழுது, அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 5 ஆயிரத்து 808.62 ஆகவும், S&P சிறிலங்கா 20 சுட்டி 3210.30 ஆகவும் அமைந்திருந்தன.

செப்டெம்பர் 23-ம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூ. 3,214,899, 733 அமைந்திருந்தது.

கடந்த வாரம் மொத்தமாக 39 ஆயிரத்து 536 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன. இதில் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 38 ஆயிரத்து 65 ஆகவும் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் ஆயிரத்து 471 ஆகவும் பதிவாகியிருந்தன.




# நிதிச் சுதந்திரமும் முதலீடுகளும்

நாம் அனைவரும் முதலீட்டுப் பிரியர்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. சில முதலீடுகளினால் நாம் கவரப்பட்டு முதலீடு செய்கின்றோம் அல்லது முதலீடு செய்ய உத்தேசித்துள்ளோம். எமக்குப் பரிச்சயமற்ற முதலீடுகளில் முதலீடு செய்யும்போது ஒன்றிற்கு இரண்டு தடவைகள் தகுதியானவர்களுடன் சாதக, பாதகத் தன்மைகள் பற்றி கலந்தாலோசித்து தீர்மானத்திற்கு வருதல் ஆரோக்கியமானதாக அமையும்.

முதலீட்டின் ஆரம்பத்தில் முதலீட்டின் நோக்கத்தினை தெளிவாகத் தீர்மானித்தல் முதலீட்டுப் பயணத்தினை வெற்றிகரமாக நிறைவேற்ற வழிவகுக்கும். அவ்வாறு அமையாவிடின் அது திசைகள் தெரியாத கப்பல் பயணமாக அமையும்.

உங்கள் முதலீடுகள் பெரிதாக அல்லது சிறிதாக, நீண்டகாலமாக அல்லது குறுங்காலமாக அமையலாம். எதுவாயினும் குறித்த நோக்கத்தினை அடையும் பாதையில் நாம் பயணிக்கின்றோமா என்பதனை காலத்திற்குக் காலம் உறுதிப்படுத்த தவறாதீர்கள். எதிர்பாராத விளைவுகளை எதிர்நோக்க நேரிடின் தந்திரோபாயங்களை மாற்றி முதலீட்டுப் பயணத்தினைத் தொடர முடியும்.

முதலீகள் பற்றி பல தெரிவுகள் மற்றும் பல மாற்றுக்கருத்துக்கள் இருப்பினும் உங்களின் முதலீடுகள் குறித்த காலத்தில் உங்களுக்கு பூரண நிதிச் சுதந்திரத்தினை பெற்றுத் தருகின்றதா என்பது பற்றிச் சிந்திக்க மறக்காதீர்கள். திட்டமிட்டு செலவினங்களைக் குறைத்து அல்லது காலம் தாழ்த்தி பணத்தினை சேமிக்க முடியும். அவற்றில் சிறு தொகையினை கிரமமாக முதலீடு செய்ய பழகிக் கொள்வதன் ஊடாக நாம் ஒவ்வொருவரும் நிச்சயமாக நிதிச் சுதந்திரத்தினை அடைந்து கொள்ள முடியும். இது ஓர் இலகுவான நடைமுறை.

உண்மையில் நிதிச் சுதந்திரம் என்பது எம்மிடமுள்ள சேமிப்புத் திரட்டினைக் கருதவில்லை என்பதனை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக ஒருவர் தனது மகளின் திருமணத்திற்காக 25 இலட்சம் ரூபா பெறுமதியான ஒரு சொத்தினை அதாவது காணி கட்டிடம் அல்லது கார் அல்லது தங்க ஆபரணம் அல்லது வங்கிவைப்பாக அமையலாம். இந்நிலையில் அவர் நிதிச்சுதந்திரம் பெற்றுவிட்டதாக ஒருபோதும் கருதமுடியாது.

உண்மையில் நிதிச் சுதந்திரம் என்பது எமது இருப்பினைக் கருதவில்லை மாறாக முயற்சி இன்றி உங்கள் வாழ்க்கைத் தரத்தினை உயர்வாகப் பேணக்கூடிய வகையில் நாளாந்த தேவைகள் அனைத்தையும் பூர்த்திசெய்யக்கூடிய நிலையானதும் நிலைத்திருக்கக்கூடியதுமான வருமானத்தினை நீங்கள் பெறுவீர்களேயானால் அதுதான் உண்மையில் உங்களுடைய நிதிச் சுதந்திரம். இது ஒரு இலகுவாக புரிந்து கொள்ள மற்றும் நடைமுறைப்படுத்தக்கூடிய எளிய பொறிமுறை ஆகும்.

உதாரணமாக ஒருவர் 2000 ஆண்டு தொடக்கம் வங்கியில் 10 இலட்சம் ரூபா பணத்தினை வைப்பாக வைத்து அதிலிருந்தான வட்டி வருமானத்தினைப் பயன்படுத்தி தனது வாழ்க்கைச் செலவினை ஈடுசெய்வாராக இருந்தால், அவரது வாழ்கைத் தரம் இன்றைய காலத்தில் எப்படியிருந்திருக்கும் என்பதனை விடுத்து, அவர் எவ்வளவு பணத்தினை சேமித்திருப்பார் என்பது எனது கேள்வி சேமிப்புக்கள் இன்றி குடும்பத்தின் பொருளாதார வளர்ச்சி சாத்தியமாகாதென்பதை நீங்கள் அறிவீர்கள்.

நிதிச் சுதந்திரத்தினை அடைந்து கொள்ளும் வகையில் எமது முதலீட்டுத் திட்டமிடல்கள் மற்றும் தீர்மானங்கள் அமையவேண்டும் என்பதற்கு பின்வருவனவற்றை நாம் குறிப்பிடலாம்.

1. எமது உடல் மற்றும் உள ரீதியான இயலுமை இயற்கையினால் வரையறுக்கப்பட்டுள்ளது. அதாவது பணம் உழைக்க வேண்டும் என்ற விருப்பம் அல்லது தேவையிருந்தும் எம்மால் ஓர் எல்லைக்கு அப்பால் முயற்சிசெய்ய இயலாமை.

2. நிச்சயமற்ற தன்மை. பல்




வேறு நிச்சயமற்ற சூழ்நிலைகளுக்கு மத்தியில் எமது வாழ்க்கைப் பயணத்தினைத் தொடர்கின்றோம். எல்லாம் நாம் எதிர்பார்ப்பதுபோல் அமைவதில்லை. இவ்வாறான நிலைமைகளைச் சமாளிக்க நாம் எம்மை தயார்ப்படுத்த வேண்டும்.

3. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பார்கள். எம்மைச் சார்ந்துள்ளவர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய கடமைப்பாடு எம்மில் பலருக்கு உண்டு.

4. நிரந்தரமான ஓய்வில் எமது வாழ்க்கையினை வசதியாகவும் கௌரவமாகவும் வாழவேண்டும் என்ற தன்னம்பிக்கை போன்ற சிலவற்றை குறிப்பிட முடியும்.

இவற்றினை அடைந்துகொள்ள நிதிச்சுதந்திரம் எமக்கு வேண்டுமல்லவா! எப்படி எம்மை நாம் தயார்ப்படுத்திக் கொள்வது? சிந்தியுங்கள் உங்கள் வருமானத்தினை எப்படி பெருக்கிக்கொள்ள முடியும்.

உங்கள் நடுத்தர வயதில் (25 - 45) வாழ்க்கையில் மிக உயர்ந்த வருமானத்தினைப் பெற்றுக்கொள்ளும் பொற்காலம். உங்கள் உடல் ரீதியான மற்றும் உள ரீதியான ஆற்றல்களைப் பயன்படுத்தி செயற்படு வருமானமான(Active income) கூலி அல்லது ஊதியம் அல்லது இலாபத்தினை பெறுகின்றீர்கள் அல்லவா? இவ் வருமானம் உங்கள் உடல் இயக்கத்துடன் சார்ந்ததாக உருவாக்கப்படுவதனை நீங்கள் அறிவீர்கள். எமது செயற்பாடு இன்றி இவ்வகையான செயற்படு வருமானங்களை நாம் பெற்றுக்கொள்ள முடியாது.

எனவே நாம் உழைக்கக்கூடிய அதாவது Active income பெற்றுக் கொள்ளும் காலத்தில் செயலற்ற வருமானத்திற்கான (Passive income) விதையினை விதைக்க வேண்டும். எமது முயற்சி இன்றி எமது முதலீட்டின் மூலமாக வருமானம் பிறப்பிக்கப்படுவதனால் அதனை நாம் செயலற்ற வருமானம எனலாம்.

உதாரணமாக நீங்கள் கட்டிடத் தொகுதி ஒன்றினை வாடகைக்கு விடுவதன் ஊடாகக் கிடைக்கும் வாடகைப்பணம் அல்லது பங்குச் சந்தையில் கம்பனியின் பங்குகளின் முதலீடுசெய்து கிடைக்கும் பங்கு லாபம் போன்ற வருமானங்கள் செயலற்ற வருமானமாக கருதலாம்.

முதலீட்டு ஆர்வலர்களே! நீங்கள் எத்துறைசார்ந்த முதலீட்டாளராக இருப்பினும் உங்கள் உழைப்பினால் கிடைக்கப்பெற்ற செயற்படு வருமானத்தின் சிறுதொகையினை நிலையானதும் நிலைத்திருக்கக் கூடியதுமான செயலற்ற வருமானத்தினை பிறப்பிக்கும் முதலீடுகளில் பன்முகப்படுத்தி முதலீடு செய்வதன் ஊடாக நிதிச் சுதந்திரத்தினை அடைந்து கொள்ள முடியும்.

ஓர் ஓய்வூதியரின் நிதிச்சுதந்திரம் என்பது தமது ஓய்வூதிய நிதியங்களை (Retirement Fund) தமது நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்ய நிதியத்தினைக் கரைக்காது தொடர்சியான வருமானத்தினைத் தரக்கூடியதும் சேமிக்கக் கூடியதுமான சிறந்த பன்முகப் படுத்தப்பட்ட ஓய்வூதிய முதலீட்டு நிதியமாக(Retirement Portfolio) மாற்றிப் பேணுதல் வேண்டும்.

மு.திலீபன்
– கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

உதாரணமாக ஒருவருக்கு ஓய்வூதிய நிதியாகக் கிடைக்கும் 25 இலட்சம் ரூபா பணத்தினை குறைந்தது மாதாந்தம் 35 ஆயிரம் ரூபா தரக்கூடிய முதலீட்டில் முதலீடு செய்து, தனது நாளாந்த வாழ்க்கைச் செலவுகள் போக குறைந்தது ஆயிரம் அல்லது இரண்டாயிரம் வரை தவணை முறையில் சேமிக்கும் திட்டத்தினை கடைப்பிடிக்க வேண்டும். இது பணவீக்கத்தினால் ஏற்படும் கொள்வனவு இழப்புக்களை ஓரளவுக்கு ஈடுசெய்ய உதவும்.

உங்கள் அன்றாட வாழ்க்கைச் செலவுகளை செயலற்ற வருமானத்தினைக் கொண்டு பூர்த்தி செய்யக் கூடிய சிறந்த முதலீட்டுத்திட்டத்தினை ஒங்வொரு குடும்பத்தவர்களும் உருவாக்கி, சேமிப்பைப் பெருக்கி வாழ்க்கையினை வளமாக்குவோம்.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 130.29 | 133.29 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 208.41 | 214.98 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 174.61 | 180.88 |
| சுவிஸ் பிராங் | 142.20 | 147.81 |
| கனேடிய டொலர் | 125.64 | 130.30 |
| அவுஸ்திரேலிய டொலர் | 120.89 | 125.80 |
| சிங்கப்பூர் டொலர் | 103.25 | 106.94 |
| ஜப்பான் யென் | 1.31 | 1.36 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.12 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.92 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# நில அதிகாரம் பறிப்பு: அதிர்ச்சியூட்டும் தீர்ப்பு

இலங்கை இனப்பிரச்சினைக்கு மாற்றுத் தீர்வை காண்பதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பாமக நிறுவுநர் ராமதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது, இலங்கை அரசியல் சட்டத்தில் செய்யப்பட்ட 13 ஆவது திருத்தத்தின்படி, நிலங்களை நிர்வகிக்கும் அதிகாரம் ஜனாதிபதி தலைமையிலான தேசிய அரசுக்கு மட்டுமே உண்டு என்றும், மாகாண அரசுகளுக்கு இல்லை என்றும் அந்நாட்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. ஈழத் தமிழர்களுக்கு குறைந்தபட்ச அதிகாரங்களையாவது பெற்றுத் தரும் முயற்சிகளுக்கு இது பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது.

## இந்தியா தலையிட வேண்டும் என்கிறார் ராமதாஸ்

இலங்கை வடக்கு மாகாணத்திற்கு அண்மையில் நடைபெற்ற தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு மிகப்பெரிய வெற்றியை பெற்று ஆட்சியைக் கைப்பற்றி யது. தமிழர்களுக்கு ஓரளவாவது அதிகாரங்களைப் பெற்றுத் தருவதற்கு இது நல்ல தொடக்கமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நேரத்தில் தான் மாகாண அரசுகளுக்கு நில அதிகாரம் கிடையாது என்ற அதிர்ச்சியூட்டும் தீர்ப்பு வெளியாகியிருக்கிறது. நில நிர்வாகம் தொடர்பாக இதற்கு முன் இலங்கை உச்ச நீதிமன்றம் அளித்த இரு தீர்ப்புகளில் மாகாண அரசுகளுக்கே அந்த அதிகாரம் இருப்பதாக தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், வடக்கு மாகாண தேர்தலில் தமிழ் தேசிய கூட்ட மைப்பு வெற்றி பெற்ற நிலையில், மாகாண அரசுகளுக்கு நில அதிகாரம் இல்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டிருப்பது பல்வேறு ஐயங்களை எழுப்புகிறது.

வடக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு சொந்தமான பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சிறப்பு பொருளாதார மண்ட லங்கள், அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளன. வடக்கு மாகாண அரசுக்கு நில அதிகாரம் இருந்தால் மட்டுமே, ஆக்



கிரமிக்கப்பட்ட நிலங்களை மீட்டு உரியவர்களிடம் ஒப்படைப்பது சாத்தியமாகும். மாகாண அரசுகளுக்கு நில அதிகாரம் இல்லை என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதால், தமிழர்கள் தங்களின் நிலங்களை இழந்து சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழும் நிலை தான் ஏற்படும். வட மாகாணத்திற்கு நிலம் மற்றும் பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பது தான் ஈழத்தமிழர்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

ஆனால், மாகாணங்களுக்கு நில அதிகாரம் இல்லை என நீதிமன்றத்தின் மூலமாக மகிந்த அரசு கூறிவிட்டது. இதே அரசு தான் இந்திய - இலங்கை ஒப்பந்தப்படி மேற்கொள்ளப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களின் இணைப்பு செல்லாது என்று உச்சநீதிமன்றத்தின் மூலம் தீர்ப்பளிக்க வைத்தது. நில அதிகாரம் தொடர்பான உச்சநீதிமன்ற தீர்ப்பின் மூலம் 13 ஆவது அரசியல் சட்ட திருத்தத்தின் நோக்கமே சிதைக்கப்பட்டு விட்ட நிலையில், ஈழத் தமிழர்களுக்கு எத்தகைய அதிகாரத்தையும், அந்தஸ்தையும் இந்தியா பெற்றுத் தரும் என்பது தெரியவில்லை.

எனவே, 13 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் ஈழத் தமிழர்களுக்கு அதிகாரம் பெற்றுத் தருவோம் என்று கூறி, தன்னையும் ஏமாற்றிக்கொண்டு, ஈழத் தமிழர்களையும் ஏமாற்றும் முயற்சியில் இந்தியா ஈடுபட வேண்டாம்.

மாறாக, உல கம் முழுவதுமுள்ள ஈழத் தமிழர்களிடையே வாக்கெடுப்பு நடத்தி, அவர்களின் விருப்பப் படி, இலங்கை இனப் பிரச்சினைக்கு மாற்றுத் தீர்வை காண்பதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என அதில் தெரிவித்துள்ளார். (செ-2)

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)
வட்டாரம் :- 12, ஆதன இலக்கம்:-39, பிரசாத் வீதி, நவாலி.

வட்டாரம் 12, பிரசாத் வீதி, நவாலி ஆதன இலக்கம் 39 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம், யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்குப் பகுதி, மானிப்பாய் கோவில் பற்று, நவாலி இறை கறிசுட்ட விலாத்தி எனும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு நான்கு (4) குளி 12 இவ்வாதனமானது நவாலி தெற்கைச் சேர்ந்த சண்முகம் சிவனேசன் அவர்களால் நன்கொடை உறுதி மூலம் சிவனேசன் பெண் ஜெயசுதா ஆகிய இவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் இராமலிங்கம் சபேசன் முகதாவில் நிறைவேறி 3023 ஆம் இலக்க 14.03.2011 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். கறிசுட்ட விலாத்தி நிலப்பரப்பு நான்கு (4) குளி 12 உள்ள இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் சிவனேசன் பெண் ஜெயசுதா என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர், வலிதென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய். (4058)


சின்மயா மிஷன் – யாழ்ப்பாணம்
சின்மய யுவகேந்திரா
நடாத்தும்



## நம்மால் முடியும்

(இளைஞர் ஆன்மிக வதிவிட முகாம்)

இடம்: யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
காலம்: 17-10-2013 பி.ப 4.00 மணி தொடக்கம்
20-10-2013 பி.ப 4.00 மணி வரை

நடாத்துபவர்கள் : பிரம்மச்சாரி தர்சன் சைதன்யா
பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா
துறைசார் நிபுணர்கள்

நிகழ்வுகள் : கருத்துரைகள், தியானம், யோகா,
பயிற்சிப் பட்டறைகள், விளையாட்டுக்கள்,
பஜனை, கலை நிகழ்வுகள், முகாம் தீ.

வயதெல்லை : 16 முதல் 24 வரை (இருபாலாரும்)

பதிவுக் கட்டணம் : 450/=

முடிவுத்திகதி : 10-10-2013

குறிப்பு : சான்றிதழ், முகாம் கையேடு, உணவு,தங்குமிடம் ஆகியன வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
சின்மயா மிஷன் இல. 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 3447, 0774939785
மின்னஞ்சல் : jaffnachyks@gmail.com (இ)



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: மகம் 2<br>உயரம்: 5'6" கி.பா:38<br>தகைமை/தொழில்: A/L,UK Not PR<br>தொ.இ:B2127 | பிறப்பு: 1977 NRC(V)<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா : 46 செ 8<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ:G2209 |
| பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>உயரம்: 5'7" கி.பா:10.75செவ்4<br>தகைமை/தொழில்: O/L<br>சாரதிதனியார்<br>தொ.இ:B2129 | பிறப்பு: 1983 இந்து(V)<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா : 36<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA<br>கணக்காளர்<br>UK Work Permit<br>தொ.இ:G2210 |
| பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்திரம் 2<br>கி.பா : 12.25<br>தகைமை/தொழில்: A/L, College Heavy Duty Mechanicகனடா Citizen<br>தொ.இ:B2131 | பிறப்பு: 1979 இந்து (KO)<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>கி.பா : 51 செ 12<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ:G2211 |
| பிறப்பு: 1988 இந்து(V)<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 5'6" கி.பா:40.25செவ் 2<br>தகைமை/தொழில்: A/L, IBSL வங்கி உத்தியோகத்தர்Junior Executive<br>தொ.இ:B2130 | பிறப்பு: 1984 இந்து(V)<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா : 12<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்: Following BA, CBF,DBF<br>வங்கி உத்தியோகத்தர்<br>தொ.இ:G2213 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

# பாலியல் குற்றங்களுக்கு பிரம்படி தண்டனை

## அமைச்சர் திஸ்ஸ கரலியத்த யோசனை



இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதை காணமுடிவதாக அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

முன்னர் பல சந்தர்ப்பங்களில் இந்த போக்கை தடுத்து நிறுத்த கடுமையான சட்டங்களை அமுல்படுத்தும் யோசனைகள் முனவைக்கப்பட்டன. ஆனால் சில பிரச்சினைகள் கார ணமாக அவற்றை கொண்டு வர முடியாது போனது.

(கொழும்பு)

**இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வல்லுறவு சம்பவங்கள் அதிகரித்துள்ளதால் இந்தக் குற்றச் செயல்களுக்கு பொதுமக்கள் முன் பிரம்படி தண்டனை வழங்குவது தொடர்பான யோசனையை முன்வைக்க எண்ணியுள்ளதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.**

பாலியல் வல்லுறவுச் சம்பவங்களில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்குவது பற்றிய யோசனைகள் முன்மொழியப்பட்டன.

மரண தண்டனையை அமுல்படுத்துவது உணர்வு பூர்வமான பிரச்சினை என்பதால், இந்த குற்றங்களுக்கு பொதுமக்கள் முன்னிலையில் பிரம்படி தண்டனை வழங்கும் யோசனை முன்மொழியப்பட உள்ளது.

இந்த யோசனை நாடாளுமன்றத்திற்கும், நீதியமைச்சுக்கும் வழங்கப்படும். அதே வேளை பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் தொடர்பான செய்திகளை வெளியிடுவது தொடர்பில் ஊடகங்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கும் யோசனை ஒன்றையும் முன்வைக்க உள்ளேன். ஊடகங்கள் இந்த சம்பவங்கள் தொடர்பில் வரம்பை மீறி செய்திகளை வெளியிடுகி ன்றன. அவற்றை தடுக்கும் நோக்கங்கள் புதிய சட்டத்தில் உள்ளடக்கப்படும் என்றார். (செ-2)

# வர்ணம் தீட்டுதல் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சங்கானை butterfly international பாடசாலை பண்டத்தரிப்பு blooming buds day care centre ஆகிய ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலைகளில் இன்று திங்கட்கிழமை வர்ணம் தீட்டல் போட்டி நடைபெறவுள்ளது. இப்போட்டிகளில் பாடசாலையின் சகல மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (செ-7)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேசத்தில் சட்டவிரோத மின்சாரம் பெற்ற 5 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸாரும் இலங்கை மின்சார சபையும் இணைந்து நேற்று முன்தினம் நடத்திய தேடுதலின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மல்லாகம் நீதவான் முன்னிலையில் நேற்றைய தினம் ஆஜர்படுத்தியபோது ஐவரையும் சரீரப் பிணையில் செல்ல நீதவான் அனுமதித்ததுடன் இன்று திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். (2-7)

# 75 ஆயிரம் கோடி கடனில் இலங்.அரசு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் தற்போது 75 ஆயிரம் கோடி ரூபா கடனில் உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயா கமகே தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தேசிய சேமிப்பு வங்கி நூற்றுக்கு ஒன்பது வீத வட்டிப்படி 750 மில்லியன் டொலர்களை கடனாக பெற்றுள்ளதாகவும் கொழும்பில் நேற்று இடம்பெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டணி ஊடகவியலாளர் மாநாட்டின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாய மாநாட்டுக்காக 500 கோடி செலவு செய்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள், அம் மாநாடு முடிந்ததன் பின்னர் அமைச்சர்களின் உறவினர்களுக்கு வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மாகாணசபைத் தேர்தல்கள் சுமுகமாக நடைபெற்றதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்திருந்த போதும் வாக்குச்சீட்டுகள் மீட்கப்பட்டது சுமுகமான தேர்தலை அடையாளப்படுத்தவில்லை எனவும் அவர் கூறினார். (2)

# ‘ஜெ’ சொத்து குவிப்பு வழக்கு ஒத்திவைப்பு

(சென்னை)

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணையை எதிர்வரும் ஒக்டோபர் 3 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்து பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

நீதிபதி பாலகிருஷ்ணா முன்னிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை விசாரணைக்கு வந்தது. ஜெயலலிதா, சசிகலா ஆகியோர் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர்கள் மணி சங்கர் அசோகன் , செந்தில் ஆகியோர் இந்த வழக்கு தொடர்பான விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது எனவும் அதன் மீதான தீர்ப்பு எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை (இன்று) வெளியாகவுள்ள நிலையில் வழக்கின் அடுத்த கட்ட விசாரணையை அன்றைய தினத்துக்கே ஒத்தி வைக்க வேண்டும் என்றனர்.

இதையடுத்து வழக்கின் விசாரணையை ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்து நீதிபதி உத்தரவிட்டார். (செ-2)

# மாட்டிறைச்சிக் கடையை கொள்வனவு செய்த பிக்கு

இலங்கையில் முதன்முறையாக மாட்டிறைச்சி கடையொன்றுக்கான கேள்விப்பத்திரத்தை பௌத்த பிக்கு ஒருவர் கேள்விப்பத்திர நடைமுறைகளை பின்பற்றி கொள்வனவு செய்துள்ளார்.

காலி தல்கஸ்வல பிரதேசத்தை சேர்ந்த வெலிவெ சுஜாத என்ற தேரரே இதனைக் கொள்வனவு செய்துள்ளார்.

நாகொட பிரதேச சபைக்குட்பட்ட தல்கஸ்வல பிரதேசத்தில் கடந்த 10 வருடங்களாக இயங்கி வரும் மாட்டிறைச்சி கடைக்கு 2014 ஆம் ஆண்டுக்கான அனுமதியை வழங்க விலைமனு கோரப்பட்டிருந்தது .

அவரால் மூன்று இலட்சத்து 20ஆயிரம்ரூபா விலை கோரப்பட்டிருந்ததால் அந்தக் கடையை அதனை கோரியிருந்த பிக்குவிற்கு வழங்கியதாக பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த கடையை கொள்வனவு செய்துள்ள பிக்கு, தமது விகாரைக்கு சில மீற்றர் தொலைவில் இருக்கும் இறைச்சி கடையை மூட நடவடிக்கை எடுக்குமாறு தாம் கோரி வந்ததாகவும் எவரும் அதனை பொருட்படுத்தவில்லை என்பதால் தான் அதனை கொள்வனவு செய்ததாகவும் இனி அதனை மூடி விடப் போவதாகவும் அவர் கூறினார். (செ-2)

# புத்தளத்தில் மீண்டும் வாக்குச் சீட்டுக்கள் மீட்பு

(கொழும்பு)

புத்தளம் சென். அன்ருஸ் மத்திய மகா வித்தியாலயத்தின் மண்டபம் ஒன்றிலிருந்து மீண்டும் வாக்குச்சீட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான ஆப்டீன் யஹியா தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

புத்தளம் சென். அன்ருஸ் மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து கடந்த 24 ஆம் திகதி ஒரு தொகை வாக்குச் சீட்டுகள் கண்டெடுக்கப்பட்டன. இவ் வாக்குச் சீட்டுக்கள் புத்தளம் நீதிமன்றின் பொறுப்பிலுள்ளன.

இந்நிலையில் அதற்கு மறுநாள் 25 ஆம் திகதி மீண்டும் அந்த பாடசாலையின் மண்டபம் ஒன்றில் இருந்து மேலும் வாக்குச் சீட்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் அந்த பாடசாலையின் அதிபர் ஊடாக புத்தளம் தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (செ-2)



சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு சம்பத் வங்கி சுன்னாகக் கிளையில் சேமிப்பு கணக்கினைப் பேணி வரும் சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவச மருத்துவ பரிசோதனைக்கான சான்றிதழ்கள் கடந்த வெள்ளிக்கிழமை கிளை முகாமையாளரினால் வழங்கி வைக்கப்பட்ட போது....

# குற்றச்சாட்டு நிருபணமானால் நிர்வாணமாகச் செல்வேன்

## மின்வலு பிரதியமைச்சர் சவால்

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் நிர்வாணமாக வீதியில் உலவ தயார் என மின்வலு பிரதியமைச்சர் பிரேமலால் ஜயசேகர சவால் விடுத்துள்ளார்.

நிக்கவரெட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் கூறுகையில்,

தோட்ட நிறுவனத்திற்கு சொந்தமான காணியில் ஒரு அங்குலத்தையேனும் நான் அபகரித்திருப்பதாக நிரூபிக்கப்பட்டால் இரத்தினபுரி நகரில் நிர்வாணமாக செல்வேன்.

தேயிலைத் தோட்டமொன்றின் மூன்று ஏக்கரை அபகரித்துள்ளதாக என்மீதுபோலிக் குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது.

பரம்பரைச் சொத்தைப் பயன்படுத்தியே நான் அரசியல் நடத்துகின்றேன். எனக்கு எதிராக பொய்ப் பிரசாரம் செய்வோருக்கு இறைவனால் இடி விழ வேண்டுமென அமைச்சர் தெரிவித்துள்ளார். (செ-2)

# உப்புநீர் பரிகரணம் மூலம் தரமான விதை நெல்லைப்பெறல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் கால போகத்தில் சராசரியாக 11 ஆயிரத்து 900 ஹெக்ரேயரில் நெல் மானாவாரியாக செய்கை பண்ணப்பட உத்தேசித்துள்ளதாக யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் விரிவாக்கல் அலுவலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ச.கி.நி.கமலராஜன் தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பரந்த நெற்செய்கைக்கு 70 ஆயி ரத்து 800 புசல் விதை நெல் தேவைப்படுவதாக குறிப்பிட்டுள்ள இவர், இக் கால போகத்தில் விவசாயிகள் தரமான விதை நெல்லை தெரிந்தெடுப்பதற்கு உப்புநீரில் பரிகரணம் செய்யும் முறையை கையாள்வது உகந்தது என தெரிவித்துள்ளார்.

மேற்படி தரமான நெல்லை பிரித்தெடுப்பதற்கான உப்பு நீரில் பரிகரணத்தை கையாளும் முறையையும் குறிப்பிட்டுள்ளார்.

இப் பரிகரண முறைமூலம் அரை வயிறன், சப்பி, பீடைத்தாக்கத்திற்குட்பட்ட, பௌதீக தாக்கத்திற்குட்பட்ட சேதமாகிய நெல் போன்றவற்றை அகற்றி சுத்தமான விதை நெல்லைப் பெறமுடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இப் பரிகரண முறையின் போது, 40 லீற்றர் கொள்ளளவுடைய பரல் அல்லது வாளியினுள் 15 லீற்றர் சுத்தமான நீரை விட்டு நீரினுள் பழுதடையாத முட்டை ஒன்றை இட்டால் அம் முட்டை நீரினுள் அமிழ்ந்து போகும். பின்னர் முட்டையின் நான்கிலொரு பகுதி நீரின் மேல் மிதந்துவரும் வரையில் கறி உப்பை இட்டு கரைத்தல் வேண்டும்.

பொதுவாக இச் செயன்முறையின் போது 15 லீற்றர் நீருக்கு ஒரு கிலோ உப்பு போதுமானதாகும்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட உப்பு நீரில் விதைப்பதற்கு தயார் நிலையில் உள்ள விதை நெல்லை இடும்போது அவற்றில் உள்ள அரைவயிறன், சப்பி,பீடை மற்றும் பௌதீக தாக்கத்திற்குள்ளான நெல் போன்றவை உப்புக் கரைசலின் மீது மிதந்து காணப்பட விதை நெல் மட்டும் கரைசலினுள் அமிழ்ந்து விடும்.

இதையடுத்து விதை நெல்லை வடித்து எடுக்க முடியும். இவ்வாறு வடித்தெடுக்கப்பட்ட விதை நெல்லிலுள்ள உப்புத் தன்மை நீங்கும் வரையில் சுத்தமான நீரில் கழுவியபின் நிழலான இடத்தில் வைத்து உலர்த்தி வயல்களில் விதைக்க முடியும்.

முதலில் பயன்படுத்திய உப்புக் கரைசலை மீளவும் பயன்படுத்த முடியும்.

இப் பரிகரண முறை செலவு குறைந்ததாக உள்ளதோடு குறைந்த பரப்பளவில் நெற்செய்கையை மேற்கொள்ள முடியும் எனவும் இதன் மூலம் தரமான நெல்லை தேர்வு செய்து வீரியமான பயிரை உருவாக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-5)

# 3 வாகன விபத்துகளில் சிறுமி உட்பட மூவர் பலி

வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற மூன்று வாகன விபத்துக்களில் மூன்றரை வயது சிறுமி ஒருவரும் இரண்டு இளைஞர்களும் பலியாகியுள்ளனர். கெபிதிகொல்லாவ பொலிஸ் பிரிவின் கெபிதிகொல்லாவ கஹட்டகஸ்திகிலிய பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத் தில் மூன்றரை வயது சிறுமி ஒருவர் உயிரி ழந்துள்ளார்.

கிவுலேகட கிராமத்தில் இருந்து கஹட்டகஸ்திகிலிய நோக்கி நேற்றுமுன்தினம் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் அதன் பின்னால் வந்த கெப் வாகனம் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பய ணித்த, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் அவர்களது மூன்றரை வயது மகளும் படுகாயமடைந்த நிலையில் கெபிதிகொல்லாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது சிறுமி உயிரிழந்துள்ளார். அத்துடன் கெப் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை ராகம பொலிஸ் பிரிவில் இருவேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் இரண்டு இளைஞர்கள் பலியாகியுள்ளனர்.

ராகம கொரகஹக சந்தியில், கடவனயில் இருந்து கனேமுல்ல நோக்கி பயணித்த வான் ஒன்று, கனேமுல்லவில் இருந்து கடவன நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் உயிரிழந்துள்ளார்.

இவர் அலவ்வ பகுதியைச் சேர்ந்த 28 வயதான இளைஞர் எனத் தெரியவந்துள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை ராகம வல்பொல பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று மூவர் விபத் துக்குள்ளாகியுள்ளனர். மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி அருகில் இருந்த கொங்கிறீட் தூணுடன் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் கண்டியைச் சேர்ந்த 21 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, ஏனைய இருவரும் படுகாயமடைந்து ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (செ-2)

# பலம்மிக்க இன்றைய அரசுடன் பக்குவமாக நடக்க வேண்டும்

## *ஹரீஸ் எம்.பி. தெரிவிப்பு*

அரசாங்கத்தை விமர்சிப்பதன் மூலமோ அல்லது எதிர்க்கட்சியில் அமர்வதன் மூலமோ முஸ்லிம் சமூகம் எதனையும் சாதித்து விட முடியாது .இலங்கை வரலாற்றில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மிகப் பலமாகவுள்ளது. அதனால் பலம் மிக்க இன்றைய அரசாங்கத்துடன் சிறுபான்மையினமான நாங்கள் பக்குவமாகவே நடந்துகொள்ள வேண்டும் என்று திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வடக்கில் இருந்து கிழக்கை பிரித்து கிழக்கு மாகாணத்தை ஆளுகின்ற பொறுப்பை முஸ்லிம் ஒருவருக்கு வழங்கி அதனை நாம் அழகு பார்க்க வைத்தவர் எமது ஜனாதிபதியே ஆவார்.

இதன்மூலம் கிழக்கில் உள்ள முஸ்லிம் சமூகத்தவராகிய நாம் இன்று சகலவிதமான வளங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

ஒரு காலத்தில் ஆயுதங்களை நம்பியிருந்த வட பகுதி தமிழ் மக்கள் இன்று அபிவிருத்திக்கு அடித்தளமிட்டுள்ளனர். இந்த அடித்தளத்தை இடுவதற்கு தமிழ் தலைவர்களும் பொது மக்களும் புத்திஜீவிகளுமாக பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பறிபோயுள்ளன.

இந்த இழப்புக்களை தவிர்ப்பதற்கான வியூகத்தை மறைந்த மாபெரும் தலைவர் அஷ்ரப் அன்று நன்கு திட்டமிட்டு வகுத்து முஸ்லிம் இளைஞர்களை ஆயுதம் ஏந்தாமல் தடுத்து பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பாதுகாத்தார்.

அண்மையில் தேர்தல் பிரசாரத்துக்கு வட பகுதிக்கு சென்ற போது அங்கு வாழுகின்ற மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களை நேரில் கண்ட போது எமது தலைவர் மர்ஹூம் அஷ்ரப் எம்மை சரியான வழியில் நடத்தியுள்ளார் என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

இந்த நாட்டின் வரலாற்றில் பலமான அரசு ஆட்சி செய்கின்ற போது அதன் மூலம் பல உதவிகளையும் பெற்று சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக குரல் கொடுக்கும் வல்லமையையும் நாம் பெற்றிருக்கின்றோம் என்றார். (செ-2)

# ஏனைய மாகாணங்கள் போன்று வடக்கிற்கும் நிதி ஒதுக்கப்படுமா?

## மஹிந்தவிடம் பான் கீ மூன் கேள்வி

(கொழும்பு)

ஏனைய மாகாணங்களுக்கு நிதி ஒதுக்கப்படுவதைப் போன்று புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள வடக்கு மாகாண சபைக்கு உரிய முறையில் நிதி ஒதுக்கீடு செய்யப் படுமா என ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் வினவியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 68 ஆவது பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்க நியூயோர்க் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட அரச தூதுக்குழுவினருடன், கடந்த செவ்வாய்க்கிழமை ஐ.நா. தலைமையகத்தில் இடம்பெற்ற உத்தியோகபூர்வ சந்திப்பின் போதே பான் கீ மூன் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளதாக அறிய முடிகிறது.

ஐ.நா. செயலாளரின் கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, போர் முடிவடைந்த 4 வருட காலப்பகுதிக்குள் வட மாகாண அபிவிருத்திக்காக 300 கோடி அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன எனச் சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் அறிய முடிகின்றது.

இதற்கமைய எதிர்காலத்தில் ஏனைய மாகாணங்களுக்கு நிதி ஒதுக்கப்படுவதைப் போன்றே வடக்கு மாகாணத்துக்கும் ஒதுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் எனத் தெரிய வருகின்றது.

இலங்கையின் ஜனாதிபதி என்ற வகையில் தான், அனைத்து மாகாண சபைகளுக்கும் சம அளவிலான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் ஐ.நா. செயலாளர் பான் கீ மூனிடம், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகிறது. (செ-2)




திருநெல்வேலிகலைமகள் முன்பள்ளியின் 13 ஆவது விளையாட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் சிறார்களின் உடற் பயிற்சி நிகழ்வு இடம் பெறுவதையும் ஜோதிர் வித்யா ரத்னா, வி.ஏ.சிவராசா பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்- அல்லைப் பிட்டி செய்தியாளர்)




# கஞ்சனுக்குக் கிடைத்த பரிசு



...ராய்தாஸ் அந்த தங்க நாணயங்களை பீர்பாலிடமிருந்து பெற்றுக்கொண்டு, அவன்து நண்பன் மாயாதாசைக் காணச் சென்றான். மாயாதாசிடம் பீர்பால் சொன்ன அனைத்தையும் கூறி அந்தத் தங்க நாணயங்களைக் கொடுத்தான்.

"இதனை வைத்துக்கொண்டு ஒரு ஆடம்பரமான விருந்துக்கு ஏற்பாடு செய். அச்செல்வந்தனை விருந்துக்கு அழைக்க மறந்துவிடாதே" என்றான் ராய்தாஸ்.

மாயாதாஸ் விருந்துக்குத் தேவையான பொருட்களை வாங்கினான். பிறகு செல்வந்தன் வீட்டுக்குச்சென்றான்.

"நான் வரும் பௌர்ணமி இரவில் ஒரு ஆடம்பர விருந்து கொடுக்கப்போகிறேன். நீங்களும் அதற்கு வரவேண்டும். எனது விருந்தாளிகளுக்கு நான் தங்கத்தட்டில் விருந்தளித்து பிறகு அத்தட்டினை அவர்களுக்கே பரிசாகத் தர எண்ணியுள்ளேன்" என்றான் மாயாதாஸ்.

அந்த செல்வந்தன் பேராசையுடன் அவ்வழைப்பை ஏற்றுக் கொண்டான். அவன் பௌர்ணமி இரவுக்காக ஆவலோடு காத்திருந்தான். உயர்ந்த ஆடை அணிகளை அணிந்து கொண்டான்.

செல்வந்தன் மாயாதாசின் வீட்டிற்குள் நுழைந்தான். அங்கு மாயாதாசையும் ராய்தாஸையும் தவிர யாரும் இல்லாததைக் கண்டான்.

அவனை வரவேற்று அவ்விருவரும் அவனோடு பேசிக் கொண்டிருந்தனர்.

வெகுநேரம் இருவரும் செல்வந்தனோடு பேசிக்கொண்டிருந்தனர்.

அவர்கள் செல்வந்தன் வருவதற்கு முன்னரே தங்கள் உணவை உண்டிருந்தனர். அதனால் அவர்களுக்குப் பசிக்கவில்லை.

நேரம் கடந்தது. செல்வந்தனுக்கு பசி எடுத்தது. அவன் விருந்தில் நன்கு உண்ண வேண்டும் என்ற காரணத்தால் குறைவாகவே சாப்பிட்டிருந்தான். நள்ளிரவை நெருங்கும் போது அவன் பொறுமையிழந்தான்.

"எனக்குப் பசிக்கிறது. எப்பொழுது விருந்து தொடங்கும்?" என்று கேட்டான்.

"விருந்தா? என்ன விருந்து?" மாயாதாஸ் கேட்டான்.

"நீ என்னை இன்றிரவு விருந்துக்கு அழைத்தாய் அல்லவா?" என செல்வந்தன் முறையிட்டான்.

"உன்னிடம் ஆதாரம் உள்ளதா?" எனக் கேட்டான் ராய்தாஸ். ஆனால் செல்வந்தனிடமிருந்து எந்த பதிலும் இல்லை.

"நாங்கள் உன்னை விருந்துக்கு அழைத்திருந்தாலும் அது உன்னை பூரிப்படையச் செய்யவேயாகும். எங்களுக்கு மற்றவர்களைப் புண்படுத்தத் தெரியாது" மாயாதாஸ் நண்பனோடு சேர்ந்து கொண்டான்.

அப்பொழுது பீர்பால் அங்கு வந்தார்.

"நினைவிருக்கிறதா இதைத் தான் ராய்தாஸ் கவிதைகள் படித்துக் காட்டியபோது அவனிடம் நீ கூறினாய்" என்றார் பீர்பால்.

"எனது அற்பத்தனமான நடத்தைக்கு நான் மன்னிப்புக் கோருகிறேன்.

ராய்தாஸ் நீ ஒரு நல்ல கவிஞன். உனக்கு நான் இந்த முத்து மாலையைப் பரிசளிக்கிறேன்" என்று கூறியவாறு செல்வந்தன் தனது கழுத்திலிருந்த முத்துமாலையைப் பரிசளித்தான்.




கவிதை சார்ந்த தீர்ப்பு நடந்ததைக் கண்டு பீர்பால் மகிழ்ந்தார்.

(முற்றும்)




- ❖1840 - நெப்போலியன் பொனபார்ட்டின் எஞ்சிய உடல் பகுதி பிரான்சுக்கு எடுத்து வரப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.
- ❖ 1860 - பிரித்தானியாவின் முதலாவது அமிழ் தண்டூர்தி சேவை ஆரம்பமானது
- ❖1867 - ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவின் அதிகாரத்தைக் கைப்பற்றியது.
- ❖1882 - உலகின் முதலாவது நீர்மின் திறன் ஐக்கிய அமெரிக்காவின் விஸ்கொன்சின் மாநிலத்தில் அமைக்கப்பட்டது.
- ❖1895 - மடகஸ்கார் பிரெஞ்சு பாதுகாக்கப்பட்ட அரசாக அறிவிக்கப்பட்டது.
- ❖ 1901 - ஹியூபேர்ட் செசில் பூத் தூசுறிஞ்சிக்கான காப்புரிமம் பெற்றார்
- ❖1935 - அரிசோனா, நெவாடா மாநிலங்களிடையே ஊவர் அணை திறக்கப்பட்டது.
- ❖1938- பொதுமக்களின் இருப்பிடங்கள் மீது வேண்டுமென்றே குண்டுத்தாக்குதல் நடத்தப்படுவது நாடுகளின் அணியினால் தடைசெய்யப்பட்டது.
- ❖1947 - பாகிஸ்தான் ஜேர்மன் ஐ.நாவில் இணைந்தது.
- ❖1949 - சோவியத்தினரின் தரைவழித் தடையை அடுத்து மேற்கு ஜேர்மனிக்கு 2.3 மில்லியன் தொன் உணவுப் பொருட்கள் வான்வெளி மூலமாக அனுப்பப்படுவது முடிவுக்கு வந்தது.
- ❖1965- இந்தோனேசியாவில் இடம்பெற்ற கம்யூனிஸ்டுகளின் புரட்சியை ஜெனரல் சுகார்ட்டோ முறியடித்து சுமார் ஒரு மில்லியன் கம்யூனிஸ்டுகளைக் கொன்று குவித்தார்.
- ❖1966 - பெக்குவானாலாந்து பிரித்தானியாவிடம் இருந்து விடுதலையை அறிவித்து பொட்சுவானாக் குடியரசு ஆகியது.
- ❖1967- இலங்கை வானொலி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என பெயர் மாற்றப்பட்டது.
- ❖2001 - இந்தியக் காங்கிரசின் மூத்த தலைவர்களில் ஒருவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான மாதவராவ் சிந்தியா விமான விபத்தில் கொல்லப்பட்டார்.
- ❖ 2007 - இந்திய சதுரங்க வீரர் விஸ்வநாதன் ஆனந்த் மெக்சிக்கோவில் இடம்பெற்ற உலக சதுரங்கப் போட்டிகளில் வெற்றி பெற்று புதிய உலகச் சாம்பியன் ஆனார்.

### விசுவநாதன் ஆனந்த்



இந்திய சதுரங்க விளையாட்டில் விஸ்வநாதன் ஆனந்த் குறிப்பிடத்தக்கவர். 14 வயதில் 1983 இல் இந்திய சதுரங்க சாம்பியன் ஆக 9/9 புள்ளிகள் பெற்றார். 15 வயதில் 1984 இல் அனைத்துலக மாஸ்டர் விருதினைப்பெற்றார். 16 வயதில் தேசிய வெற்றிவீரராக மேலும் இருதடவை விருதினைப் பெற்றார். இவர் ஆட்டங்களை வேகமாக ஆடி மின்னல் பையன் என்ன பட்டப்பெயரையும் பெற்றார். உலக இளநிலை வாகையாளர் என்ற பெருமையை அடைந்த முதல் இந்தியரும் ஆனந்தே யாவார்.

இவர் முன்னாள் உலக வெற்றிவீரர் விளாடிமிர் கிராம்னிக்குடன் 2008 அக்டோபரில் நடந்த போட்டியில் வெற்றிபெற்று உலக வெற்றவீரர் பட்டத்தை தக்கவைத்துக்கொண்டார்.

2000 ஆம் ஆண்டில் தெகரானில் அலெக்சி சிறோவ் என்ன எசுப்பானிய வீரரை 3.5-0.5 என்ற புள்ளிக்கணக்கில் தோற்கடித்ததன் மூலம் உலக சதுரங்கப்போட்டியில் வெற்றிபெற்ற முதல் இந்தியன் என்ற பெருமையைப் பெற்றார். செப்டெம்பர் 29, 2007 இல் இம்பெற்ற இறுதிப் போட்டிகளில் 9.14 புள்ளிகள் பெற்று மறுப்பிற்கிடமில்லாத உலக சதுரங்க வாகையாளர் ஆனார்.

அக்டோபர் 2003 இல் FIDE ஊடாக அதிவேக சதுரங்க வெற்றிவீரர் பட்டத்தை வென்றார்.

இதுவரை 6 சதுரங்க பதக்கங்களையும் 7 விருதுகளையும் ஆனந்த் பெற்றுள்ளார்.

# குண்டலி சக்தி என்றால் என்ன?



ஆன்மீகம் 129

...நான் பல்வேறு விதமான காட்சிகளைக் காணத் தொடங்கினேன். அக்காட்சிகளில் விதவிதமான பறவைகள், மிருகங்கள், பூக்கள், பூந்தோட்டங்கள் ஆகியன காணப்பட்டன. சினிமாப்படம் பார்ப்பதுபோல் இருந்தது. நான் தொடர்ந்து புருவ மத்தியை நோக்கினேன். என் மனதில் ஒரு ஏக்கம், துன்பம் ஏற்பட்டது. நான் ஏன் பிறந்தேன்? என் மனம் நெகிழ்ந்தது. நான் அழத்தொடங்கினேன். ஒரு அரைமணி நேரமாவது அழுதிருப்பேன். என் கண்களிலும் நாசியிலும் நீர் பெருகி ஓடத் தொடங்கியது. என் மனது இலகுவானதுபோல் உணர்ந்தேன். தொடர்ந்து புருவ மத்தியை நோக்கியபோது என் மனது அண்டத்தில் பிரயானம் செய்யத் தொடங்கியது. இதுபோல் தொடர்ந்து 3 மணித்தியாலங்கள் இருந்த எனக்கு ஏற்பட்ட இனிய தெய்வீக அனுபவத்தை சொல்லுவதற்கு வார்த்தைகள் போதாது.

மறுநாள் சித்தர்பெருமான் எனக்கு அந்த மூலிகைப் பொடியைத் தந்தபோது பத்மாசனத்தில் அமர்ந்து நான் தியான நிலைக்கு சென்றேன். இதற்கு முன்னர் தியானம் செய்யவோ பத்மாசனம் போடவோ எனக்கு தெரிந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனது புருவமத்தியில்



சித்தர்பெருமானைக் கண்டேன். அவர் நீ குண்டலி சக்தியை அனுபவிக்க வேண்டுமா? அதற்கு நீ 14 வருடங்கள் காத்திருக்கத் தேவையில்லை. இப்போதே குண்டலி சக்தியை எழுப்புகிறேன். உனது தலையை நேராக நிமிர்த்தி இரு என்றார்.

நான் நிமிர்ந்து உட்கார்ந்தேன். அதன்பிறகு எனது முதுகெலும்பை மட்டுமே உணர்ந்தேன். எனது முள்ளந்தண்டு பாம்புபோல் வளைந்து சென்றது. அதன்பிறகு எனது நரம்புத் தொகுதி கழன்றதாக உணர்ந்தேன். நான் ஒரு பாம்பைப் போல ஊர்ந்து செல்லத் தொடங்கினேன். நான் எனது புருவ மத்தியில் ஒரு நாகம் சீறுவதைக் கண்டேன். அந்த நாகத்தைப் போல் நானும் சீறி, வளைந்து ஊர்ந்து செல்லத் தொடங்கினேன். இந்த அனுபவம் ஒரு மணித்தியாலத்திற்கு தொடர்ந்தது. இந்த குண்டலி சக்தி அனுபவத்தை பலமுறை நான் பெற்றதுடன் இப்போது இச்சக்தி என்னுள் அடங்கி ஒரு கட்டுப்பாட்டில் உள்ளது.

எனது தெய்வீக குழந்தைகளே! தயவுசெய்து இதை உணருங்கள்: உங்களது குண்டலிசக்தி விழிப்படையும் போது உங்களுக்கு வழி காட்ட ஞானம் பெற்ற ஒரு குரு அவசியம் தேவை.

தற்காலத்தில் யோகா ஆசிரியர்கள் குண்டலிசக்தி எழும்ப யோகாசனம் படிப்பிப்பதாகக் கூறிகிறார்கள். அது நிச்சயமாக நடைபெற முடியாத ஒன்றாகும்.

தகுந்த குரு இல்லாமல் குண்டலி சக்தி எழுப்பப்பட்டால் கடும் சிக்கல்கள் ஏற்படலாம்.

தமது குண்டலி சக்தியை விழிப்பிக்க விரும்புபவர்கள் 30 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். நான் முதல் முதலாக இவ்வனுபவத்தைப் பெற்றபோது எனக்கு வயது 24 ஆகும்.

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

(தொடரும்)

# "கூட்டணி வைத்து இந்திய நாடாளுமன்றத் தேர்தலை சந்திப்பேன்" - விஜயகாந்த்

தமிழகத்தின் தென்கோடி மாவட்டமான தூத்துக்குடியில் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தி தன் கட்சியினரை திரட்டியிருக்கிறார் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் தலைவர் விஜயகாந்த்.

அக்கட்சி தொடங்கிய ஒன்பதாவது வருடத்தின் தொடக்கவிழாப் பொதுக் கூட்டம் இது.

கூட்ட மேடைக்குப் பின் 2016 நம் லட்சியம். அதை அடைவது நிச்சயம் என்ற அக்கட்சியின் அடிப்படை நோக்கம் தாரக மந்திரம் போல் எழுதப்பட்டு அதன் முன்பு நின்றுகொண்டு தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் பேசினார்.

இந்த ஒன்பது வருடங்களில் இரு உள்ளாட்சி தேர்தல்கள், இரு சட்டமன்றத் தேர்தல்கள், ஒரு நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றை சந்தித்துள்ளார்.

இவற்றுள் 2011 சட்டமன்றத் தேர்தலை மட்டும் தான் அ.தி.மு.க.வுடன் கூட்டணியாகச் சந்தித்தார். வெற்றியும் பெற்று தமிழகத்தின் பிரதான எதிர்க் கட்சித் தலைவரானார்.

இனி 2014 நாடாளுமன்றத் தேர்தலை சந்திக்கப்போகிறார்.

அதற்கான வியூகம் என்ன என்பதை இந்தக் கூட்டத்தில் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இந்தப் பொதுக்கூட்டத்திலும் அதற்கு சஸ்பென்ஸ் வைத்துவிட்டு மேடையை விட்டு இறங்கிச் சென்றுவிட்டார்.

ஆனால், அவர் பேச்சில் அ.தி.மு.கவை தோற்கடிக்க வேண்டும் என்ற உறுதி மட்டும் தெரிகிறது. அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக்கொள்ள விரும்பும் அக்கட்சியின் தொண்டர்களின் மனிநிலையை தனக்கு ஏற்ற ஒரு கூட்டணி அமைக்க தயார் செய்வதுபோல் இருந்தது விஜயகாந்தின் மேடைப்பேச்சு.

பொதுக் கூட்டத்தில் பேசிய விஜயகாந்த் அ.தி.மு.க, தி.மு.க., பா.ஜ.க., காங்கிரஸ் என்று அனைத்துக் கட்சிகளையுமே அட்டாக் பண்ணித்தான் பேசினார்.

ஆனால், தன்மீது 34 அவதூறு வழக்குகளைப் போட்ட அ.மு.தி.க. மீது மட்டும் அவர், மேடையில் வெறுப்பைக் கக்கியதைப் பார்க்க முடிந்தது.

அக்கூட்டத்தில் வியூகம் அமைப்பது சுலபம், இப்போதுகூட எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்தால் இவுங்க என்ன ஆவாங்க? வரப்போகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் அவுங்களா நம்மலா பார்த்து விடுவோம் என்று ஆற்றிய உரைகள் எல்லாம் யாருடனும் கூட்டணி இல்லை என்று சொல்லிக் கொண்டே ஏதாவது ஒரு கட்சியுடன் அ.தி.மு.கவை தோற்கடிக்க கூட்டணி வைக்க வேண்டும் என்ற விஜயகாந்தின் ஆசையை வெளிப்படுத்தும் விதத்தில் இருந்தது.

அது மட்டுமல்ல, அக்கூட்டத்திலேயே ஒரு சபதமும் எடுத்தார். அது இன்னைக்குச்சொல்லுகிறேன்.


அ.தி.மு.க ஜெயிக்கவும் கூடாது. ஜெயிக்க விடவும் கூடாது என்று பகிரங்கமாக அறிவித்துவிட்டு உங்களுக்கு அந்த மனசு இல்லையா? மனசில் கைவச்சு சொல்லுங்க என்று மேடைக்கு எதிரே அமர்ந்திருந்த தொண்டர்களைப் பார்த்து விஜயகாந்த் கேள்வி எழுப்பினார்.

விஜயகாந்திற்கு கூட்டணி வைக்க வேண்டும் என்ற எண்ணமில்லை என்றால் இப்படியெல்லாம் ஒரு சபதத்தை அதுவும் பொதுக்கூட்ட மேடையில் எடுக்கமாட்டார். அதிலும் குறிப்பாக அ.தி.மு.க.வை ஜெயிக்க விடக் கூடாது என்று விஜயகாந்த் சொல்வதில் ஆயிரம் அர்த்தங்கள் இருக்கின்றன.

அவர் மட்டும் தனியாக நின்று தமிழக நாடாளுமன்றத் தேர்தலை சந்தித்தால் அது நடக்காது. அவரும் காங்கிரசும் சேர்ந்து நின்றால்கூட அந்த இலக்கை எட்ட முடியாது.

அவரும் பா.ஜ.கவும் நின்றால் கூட தேர்தலில் அ.தி.மு.கவை ஜெயிக்க விடாமல் செய்ய முடியாது. அவருக்கு இருக்கின்ற ஒருவழி தி.மு.கவுடன் கூட்டணி வைத்து காங்கிரசையோ அல்லது பா.ஜ.கவையோ தன்னுடன் வைத்துக்கொண்டுதான் அ.தி.மு.கவை ஜெயிக்கவேவிடாமல் செய்ய முடியும். இதில் ஏதாவது ஓர் இலக்கை அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் விஜயகாந்த் தூத்துக்குடி கூட்டத்தில் அப்படி பேசியிருக்கிறார்.

இதை முன்னெடுத்துச் செல்லவே நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கும் நேரத்தில் ஒரு மாநாடு போடவிருக்கிறார். இந்தக் கூட்டத்திலேயே அவர், நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு மாநாடு போடுவேன். அதற்காக நூறு ஏக்கர் பரப்பளவு உள்ள ஒருபகுதியை தேடிக் கொண்டிருக்கிறேன். அந்த மாநாட்டிற்கு நீங்கள்



எல்லாம் வரவேண்டும். உங்கள் கருத்தைக் கேட்ட பிறகு, உங்கள் உத்தரவுப்படி கூட்டணி பற்றி முடிவு எடுப்பேன் என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்.

கூட்டணி பற்றி இவ்வளவு உறுதியாக இருக்கும் விஜயகாந்த் ஏன் இப்போதே தி.மு.கவுடனோ, காங்கிரசுடனோ அல்லது பா.ஜ.க.வுடனோ நெருங்கிச் செல்லவில்லை என்று கேட்கலாம். அதற்கு காலம் கனிந்து வரட்டும் என்று காத்திருக்கிறார் என்பதே இதன் உட்பொருள். கூட்டணி என்பது அந்த நேரத்தில் எடுக்கப்படும் முடிவு. அதே மாதிரி அந்தக் கூட்டணியில் தொகுதி பங்கீடு என்பதும் அந்த நேரத்தில் எடுக்கப்பட வேண்டிய முடிவுதான்.

-எம்.காசிநாதன்-

# துப்புரவின்றிய காணிகளால் அயல் குடியிருப்பாளர்கள் கவலை

## கவனத்தில் எடுக்கிறது சாவ. நகரசபை


(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பல வெற்றுக் காணிகள் துப்புரவுசெய்யப் படாது பற்றைகள் நிறைந்து காணப்படுவதாக அயல் குடியிருப்பாளர்கள் கவலை தெரிவித் துள்ளனர்.

காணிகள் பற்றைக் காடாக இருப்பதனால் நுளம்பு பெருக்கத்தினால் டெங்கு நோய் ஏற் படக் கூடிய அபாய நிலை தோன்றியுள்ளதாக அயல் குடியிருப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப் பிரச்சினை தொடர்பில் சாவகச்சேரி நகரசபையின் சுகாதார குழுத்தலைவர் த.சுதர் சனிடம் வின்விய போது, பொது சுகாதாரப் பரி சோதகர்களால் இனங்காணப்பட்ட காணி களினை துப்புரவு செய்ய உரிமையாளர்களு க்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்படவுள் ளதாகவும் இது தொடர்பான அறிவித்தல் படி வங்கள் ஒட்டப்படவுள்ளன என்றும் தெரிவித்தார்.

மேலும் குறித்த கால அவகாசத்தினுள் துப் புரவு செய்யப்படாத காணிகளை நகரசபை யினர் பொறுப்பிலெடுத்து துப்புரவு செய்த பின் னர் அதற்கான செலவீனங்களை காணி உரிமை யாளர்களிடம் அறவிட திட்டமிடப்பட்டுள்ளதாக வும் தெரிவித்தார். (செ-9-29)




# வேலணை சாட்டிக் கடற்கரையில் தொடரும் கலாசார சீரழிவுகள்

## தடுத்து நிறுத்துவது யார்?

(யாழ்ப்பாணம்)

வேலணை சாட்டிக் கடற்கரையில் கலா சார சீரழிவுச் சம்பவங்கள் தொடர்ந்த வண் ணம் உள்ளதாக அப்பகுதி மக்கள் பெரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான கலாசார சீரழிவு சார்ந்த சம்பவங்ளுக்கு எதிராக பிரதேச சபையோ ஊர்காவற்றுறை பொலிஸாரோ எவ்வித நட வடிக்கைகளையும் எடுப்பதில்லை எனவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

கலாசார சீரழிவுகளைத் தடுக்க வேண்டி யவர்கள் கண்டு கொள்ளாதிருப்பதனால் அப்பகுதியில் கலாசாரத்துக்கு புறம்பான சம்பவங்கள் தினமும் அரங்கேறி வருகின் றன எனவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

வேலணை சாட்டிக் கடற்கரையில் மதிய வேளைகளில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்று வருவதாகவும் இதனை எவரும் கண்டு கொள்ளாமையினால் மிக மோசமான நிலை க்கு அப்பகுதி செல்கின்றது எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சாட்டி கடற்கரைப் பகுதியில் மதுபானப் போத்தல்கள் மற்றும் பாலியலுக்கு பயன்படுத் தப்படும் பொருட்கள் பரவலாக வீசப்பட்டு காணப்படுவதாக சுட்டிக் காட் டப்படுகின்றது.



தனியார் கல்வி நிலை யங்களில் கல்வி கற்கும் பாட சாலை மாணவர்கள் பாட சாலை விடுமுறை தினங்க ளில் கைகளில் பயிற்சிக் கொப்பிகள், புத்தகங்களு டன் அங்கு சுற்றித் திரிவதா கவும் நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது விடயங்களைத் தட் டிக் கேட்க அப்பகுதியினர் அஞ்சுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் அண் மையில் நடைபெற்ற கலாசாரத்துக்கு புறம் பான சம்பவத்தைத் தட்டிக் கேட்ட ஊடகவியலா ளர்கள் கத்தி முனையில் அச்சுறுத்தப்பட்டிருந் தமை பத்திரிகை வாயிலாக அறிந்து உண் மையே.

இக் கோட்டை சம்பவங்கள் குறித்தும் யாழ்ப் பாண பொலிஸாருக்கு தெரிவுபடுத்திய போதி லும், பொலிஸார் இதுவரையில் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. மாறாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கோட்டைப் பகுதியில் தொடர்ந்து கலாசாரத்துக்கு புறம்பான செயற் பாடுகள் நாளாந்தம் அரங்கேறிய வண்ணமே உள்ளன.

கலாசாரம், பாதுகாப்பு என்ற விடயத்தில் யாரும் நடவடிக்கை எடுக்க முன்வராத நிலை யில் சமூக பொறுப்புள்ள இளைஞர்கள் இது தொடர்பில் கண்டுகொள்ள வேண்டும் என கோரப்படுகின்றது. (செ-4)

# சிறுவர் தினம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை சமூக விஞ்ஞான மன்றம் நடத்தும் சிறுவர் தினம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி க்கு கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் சமூக விஞ்ஞான மன்றத் தலைவர் த.சற்குணராஜா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முல் லைத்தீவு மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது. (செ-2)

# யாழ். வைத்தியர்கள் இடமாற்றத்தை மீள் பரிசீலனை செய்யுங்கள்

## சுரேஷ் எம். பி. கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வைத்தி யர் இடமாற்றம் தொடர்பில் அரசு மீள் பரி சீலனை செய்ய வேண்டுமென தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் ஒரே




துறையைச் சேர்ந்த வைத்தியர்கள் ஒரே தடவையில் இடமாற்றம் செய்யப்படுவதனால் வைத்தியத்துறை முடங்கும் அபாயமுள்ளதா கவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் வைத்தியர்கள் இடமாற்ற சர்ச்சை தொடர்பில் கருத்து வெளி யிட்ட சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரி விக்கையில்,

யாழ். போதனா வைத்தியசாலைக்கு 412 வைத்தியர்கள் தற்சமயம் தேவையாகவுள் ளனர். ஆனால் தற்போது 322 வைத்தியர்களே கடமையில் உள்ளனர். இந்நிலையில் ஒரே முறையில் 87 பேர் இடமாற்றம் பெறுவது வைத்தியசாலைப் பணிகளினை முடக்கி விடும்.

முன்னதாக வைத்தியர்கள் இடமாற்றப் பட்டுள்ள போதிலும் இதுவரை பதில் வைத் தியர்கள் நியமிக்கப்படவுமில்லை. வடக்கு மாகாணத்தின் பிரதான வைத்தியசாலையாக யாழ். போதனா வைத்திய சாலையே உள்ளது. ஏற்கனவே இங்கு தாதியர் பற்றாக்குறையும் உள்ள நிலையில் வைத்தியர்களின் இடமாற் றம் மேலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

சுகாதார அமைச்சும் அரசும் இவ்விடயம் குறித்து மீள் பரிசீலனை செய்து இடமாற் றத்தை இரத்துச் செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ் இடமாற்றம் தொடர்பில் யாழ். மருத் துவ சங்கத் தலைவர் வைத்திய நிபுணர் நிம லன் குறிப்பிடுகையில்,

இவ் இடமாற்றங்கள் வைத்தியர்களின் விருப்பத்துடனேயே மேற்கொள்ளப்பட்டுள் ளன. இடமாற்றத்தினால் பிரதேச வைத்திய சாலைகளும் பயன்பெறுவதோடு அங்குள்ள மக்களும் பயனடைவர்.

85 வைத்தியர்களும் படிப்படியாகவே இடமாற்றம் செய்யப்படுவர். அதற்கு பதிலீட்டு வைத்தியர்களும் உடனடியாக நியமிக்கப்படு வர். இவ் இடமாற்ற சர்ச்சையினால் தனக்கு சக வைத்தியர்களால் உயிர் அச்சுறுத்தல் விடுக் கப்பட்டுள்ளதாகவும் அவர் தெவித்தார். (செ-4)

# பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு ஊர்வலம் நடத்த ஏற்பாடு

பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் ஊர்வலம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ் ஊர்வலம் பொதுநலவாயத்தின் கொள் கைகளை வலியுறுத்தி நாளை செவ்வாய்க் கிழமை பருத்தித்துறை வெளிச்ச வீட்டிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை முழுவதும் இவ் ஊர்வலம் வாக னம் மூலமாக இடம்பெறவுள்ளதுடன் ஆரம்ப நாள் நிகழ்வில் இளைஞர் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி டலித் பெரேரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சுமார் ஒருமாத காலம் வரை இடம்பெற வுள்ள வாகன ஊர்வலம் பொதுநலவாய மாநாடு நடைபெறும் தினத்தில் முடிவடை யவுள்ளது. (செ-9-37)

# போக்குவரத்து தடையை கவனத்தில் எடுங்கள்

கரவெட்டி பிரதேச சபைக்கு உட்பட வீதிகள் அகலிக்கப்பட்ட போதிலும் அவ்வீதிகளில் நாட்டப்பட்டுள்ள கம்பங்கள் , தொலைபேசிக் கம்பங்கள் என்பன அகற்றப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட விபுலானந்தா வீதி, நவிண்டில் வீதி, திருமகள்வீதி ஆகிய வீதிகளில் கம்பங்கள் அகற்றப்படாது வீதியுடன் மருவியவாறு இருப்பதனால் அவ் வீதிகளில் பயணிப்போர் அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன் இரவு நேரங்களில் இம் மின் கம்பங்களுடன் வாகனங்கள் மோதி விபத்துக்களும் இடம்பெறுகின்றன. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவற்றைக் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-7-60)

# புலிகளை அழித்தது போல் கூட்டமைப்பையும் அழியுங்கள்

## சீறிப்பாய்கிறார் உதய கம்மன்பில

**(கொழும்பு) — அரசாங்கம் விடுதலைப் புலிகள் அமை ப்பை முள்ளிவாய்க்காலில் வைத்து அழித்தது போன்று அதன் அரசியல் பிரிவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அழிக்க வேண்டுமென ஜாதிக ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகரும் மேல் மாகாண அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

ஆயுதப் போராட்டத்தில் அடைய முடியாத நோக்கத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் இராஜதந்திர ரீதியாக அடைய முயற்சித்து வருகின்றது. இதன் முடிபுகள் நாட்டை நெருக்கடியான நிலைமைக்குள் கொண்டு செல்லும் என அவர் தெரிவித்துள்ளார்.

தான் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டாம். அதற்கான காலம் இன்னமும் வரவில்லை என்று ஆறு மாதத்திற்கு முன்னர் தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றால் என்ன? அது விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு. அந்தக் காலத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கிளிநொச்சி வருமாறு உத்தரவிடுவார். இந்த பூனைக் குட்டிகள் அங்கு செல்லும்.

தமிழ்ச்செல்வன் தலைமை நாற்காலியில் அமர்ந்திருப்பார். சம்பந்தன், மாவை சேனாதிராஜா போன்றவர்கள் பக்கத்தில் பூனைக் குட்டிகளை போல் அமர்ந்திருப்பர். தமிழ்ச் செல்வன் உத்தரவுகளைக் கொடுத்த பின்னர், அதனை இவர்கள் அமுல்படுத்துவர் என்றும் தெரிவித்தார்.

இராணுவம் விடுதலைப் புலிகள் அமைப்பை யுத்த ரீதியாகத் தோற்கடித்தது. யுத்த ரீதியாக ஒரு பிரிவைத் தோற்கடித்த பின்பு அதன் அரசியல் பிரிவையும் தடை செய்வது உலகம் முழுவதும் நடந்துள்ளது என்று குறிப்பிட்ட அவர், 1945 ஆம் ஆண்டு ஹிட்லர் தோற்கடிக்கப்பட்ட பின்னர், இன்றுவரை அவரது நாஜி கட்சி ஜேர்மனியில் தடை செய்யப்பட்டுள்ளது.

இத்தாலியின் முசோலினி அதே ஆண்டில் தோற்கடிக்கப்பட்டதுடன் அவரது கட்சியும் தடைசெய்யப்பட்டது எனவும் சுட்டிக்காட்டியுள்ளதுடன் அதேபோல் தலிபான் தோற்கடிக்கப்பட்டதும் ஆப்கானிஸ்தானில் தலிபான் அமைப்பு தடை செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

2003 ஆம் ஆண்டு ஈராக்கில் சதாம் உசேனின் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது. இன்றும் ஈராக்கில் அவரது பாத் கட்சி தடை செய்யப்பட்ட கட்சியாகவேயுள்ளது.

லிபியாவில் முஹம்மர் கடாபியின் கட்சி தடை செய்யப்பட்டுள்ளது. ஆயுத சக்தி அல்லது சர்வாதிகார சக்தியைத் தோற்கடித்த பின்னர் அதன் அரசியல் பிரிவை அழிக்க வேண்டியது அத்தியாவசியமான ஒன்றாகும் எனவும் தெரிவித்தார்.

அந்தக் காலத்தில் இதனைச் செய்யுமாறு கூறியதாகவும் புலிக்குட்டியை விட்டு வைக்க வேண்டாம் என ஆலோசனை தெரிவித்ததாகவும் தெரிவித்த அவர் புலிக்குட்டி வளர்ந்ததும் உறுமவும் கடிக்கவும் ஆரம்பிக்கும் என்றும் தற்பொழுது பிரச்சினை ஆரம்பமாகி விட்டது என்றும் தெரிவித்தார். (செ-2)

# தங்கம் மற்றும் யூரோக்களை கடத்த முயன்ற இருவர் கைது

சுமார் 25 இலட்சம் பெறுமதியான 106 கிராம் தங்க கட்டியொன்றையும் 10 ஆயிரம் யூரோ நாணயத் தாள்களையும் உடலின் பின்புறம் மறைத்து இந்தியாவுக்கு கொண்டு செல்ல முயற்சித்த இரு இந்தியப் பிரஜைகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று அதிகாலை 5.30 அளவில் 9 டபிள்யூ 255 என்ற விமானத்தில் கட்டுநாயக்கவில் இருந்து சென்னைக்கு புறப்பட்டுச் செல்லவிருந்தனர்.

இவர்களின் நடத்தையில் சந்தேகம் கொண்ட சுங்க அதிகாரிகள் அவர்களை கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் ஒருவர் மறைத்து வைத்திருந்த தங்கமும் மற்றைய நபர் மறைத்து வைத்திருந்த யூரோ நாணயத்தாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்துடன் சேர்த்து இந்த மாதத்தில் மட்டும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து தங்கத்தை இவ்வாறு உடலில் மறைத்து வைத்து கடத்திச் செல்ல முயற்சித்த 9 சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக சுங்க திணைக்களம் தெரிவித்துள்ளது. (செ-2)

# ஐ. தே. கவின் தோல்விக்கு ரணிலே காரணம்-மைத்திரி

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியுற்றமையானது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை மக்கள் நிராகரித்துள்ளமையை புலப்படுத்துவதாக அந்த கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரத்ன தெரிவித்தார். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமது கட்சியின் தலைவரை மாற்றுமாறு கோரி எதிர்வரும் 5 ஆம் திகதி தெவிநுவரவிலிருந்து கொழும்பு வரை பாத யாத்திரை ஒன்றை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மக்களால் நிராகரிக்கப்பட்ட தலைவருக்கு பாதுகாப்பளித்து ஒப்பந்தத்தில் வைத்திருக்க வேண்டாம் என இச் சந்தர்ப்பத்தில் மைத்திரி குணரத்ன , மங்கள சமரவீரவிடம் கோரிக்கை ஒன்றையும் விடுக்கவுள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வியை அந்தக் கட்சியின் அப்பாவித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் மீது சுமத்துவதாக தேசிய விடுதலை முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நாட்டை அபிவிருத்தி செய்த அரசின் முன்னால் அந்தப் அப்பாவி மனிதரால் என்னதான் செய்ய முடியும் என விமல் வீரவன்ச கேள்வியும் எழுப்பியுள்ளார். (செ-2)

# வடக்கு அதிகாரங்களை பறித்தால் பாரிய பிரச்சினைகள் ஏற்படும்

## ஹசன் அலி எச்சரிக்கை

வட மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அபார வெற்றியைப் பெற்றுள்ள நிலையில், வடக்கிற்கு உரிய ஆட்சி அதிகாரங்களை அரசாங்கம் வழங்காவிடின், சர்வதேச ரீதியாக இலங்கை பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் எம். ரி. ஹஸன் அலி எச்சரித்துள்ளார்.

அதுமட்டுமின்றி, அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனீவா ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்விலும் கடுமையான விமர்சனங்களையும், பிரேரணைகளையும் இலங்கை அரசு எதிர்நோக்க வேண்டி வரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தில் தமிழ்மக்கள் ஆயுத அடக்கு முறைக்குள் வாழ்ந்து அவர்களின் விருப்பம் போல் செயற்பட்டார்கள் எனக் கூறுவோர் இன்றைய யதார்த்த நிலைமைகளையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று புலிகள் இல்லை. அப்படி இருந்தும் அவர்கள் தங்களைத் தாங்களே ஆளக் கூடியதான ஒரு கட்டமைப்பினையே இன்றும் வேண்டி நிற்கின்றனர்.

இதனை அவர்கள் தங்களது ஜனநாயக ரீதியிலான வாக்குப் பலத்தின் ஊடாக சர்வதேசத்துக்கு வெளிக்காட்டி விட்டனர்.

தங்களது பிராந்தியத்துக்கு பிராந்திய ரீதியிலான அதிகாரம் தேவை என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக உள்ளனர் என்பது தெளிவான அவர்களது ஆணை மூலம் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகவே, இவற்றையெல்லாம் இலங்கை அரசாங்கம் புரிந்து கொண்டு சட்ட ரீதியான அதிகாரங்களை வடமாகாண சபைக்கு வழங்குவதுடன் புரிந்துணர்வுடன் செயற்படவும் வேண்டும். இதனை விட இனி எந்த வழியும் இல்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும், முஸ்லிம்களையும் ஏமாற்ற நினைப்பது போன்று தமிழர்களை இனியும் அரசாங்கம் ஏமாற்ற முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. அது இன்று சர்வதேச ரீதியாகப் பேசப்படும் ஒன்றாக அமைந்துள்ளது.

கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு தமிழ் மக்கள் இன்று அதிகபடியான ஆணையை வழங்கியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (செ-2)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஆறுதல் நிறுவனத்தின் முன்பள்ளி டிப்ளோமாவை நிறைவு செய்து இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் பட்டத்தினை பெற்றுக்கொண்ட நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்கசபை முன்பள்ளியின் ஆசிரியர்களை மனமுவந்து பாராட்டி மென்மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

- மாணவர்கள்



# இனிமேலாவது உண்மையை உணர்ந்து, வாழ்வுரிமையை மதிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் முன்வரவேண்டும்



இலங்கையின் வடக்கு மாநிலத்தில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் ஈழத்" தமிழர்கள் சிங்களக் கட்சிகளை அடியோடு புறந்தள்ளியுள்ளார்கள்.

மாகாணசபையில் உள்ள 36 இடங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 28 பேர் பெருவெற்றி பெற்றிருக்கிறார்கள். இதன் காரணமாக மேலும் இருவரை உறுப்பினர்களாக நியமனம் செய்து கொள்ளும் உரிமையும் கிடைத்திருக்கிறது.

மகிந்த ராஜபக்சவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக்கு ஏழு இடங்களும் இலங்கை முஸ்லிம் காங்கிரசுக்கு ஒரு இடமும் கிடைத்திருக்கின்றது.

இலங்கையில் தமிழர் பகுதியில் ஏற்கனவே குடியேற்றப்பட்ட சிங்களவர்களைத் தவிர, கடந்த நான்கு ஆண்டுகாலத்தில் மேலும் ஏராளமான சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர்.

சொந்த வீடுகளில் இருந்தும் ஊர்களில் இருந்தும் தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்டனர். ஏராளமானவர்கள் நாட்டை விட்டே வெளியேறிவிட்டனர்.

தமிழர் பகுதிகள் முழுவதிலும் சிங்கள இராணுவ முகாம்கள், மக்களை அச்சுறுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. வந்தேறிய சிங்களவர்கள் இராணுவ பக்கபலத்துடன் தமிழர்களைத் தாக்கியும் மிரட்டியும் வந்தனர். குறிப்பாக போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்கள் குறி வைத்துத் தாக்கப்பட்டனர்.

## ஈழத் தமிழ் மக்கள் உலகிற்கு அளித்திருக்கும் செய்தி...

தேர்தலுக்கு முதல் நாள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பைச் சேர்ந்த அனந்தி எழிலன் என்னும் வேட்பாளரின் வீட்டிற்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் மட்டுமல்ல, இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து தமிழர் பகுதியில் நடைபெற்ற தேர்தல்களில் சிங்களக் கட்சிகள் போட்டியிட்டதில்லை. சில தமிழர்களையே தங்களின் வேட்பாளர்களாக சில தொகுதிகளில் நிறுத்தி படுதோல்வியைச் சந்தித்தார்கள்.

ஆனால், இம்முறை வடக்கு மாகாண சபைத் தொகுதிகள் அனைத்திலும் மகிந்த ராஜபக்ச தனது வேட்பாளர்களை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி என்ற பெயரில் நிறுத்தினர். எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியும் பல இடங்களில் போட்டியிட்டது.

பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டமைக்கு காரணமாக இருந்த முன்னாள் இராணுவ தலைமைத் தளபதி சரத் பொன்சேகாவின் ஜனநாயக கட்சியும் போட்டியிட்டது.

மொத்தம் பதிவான 4,50,574 வாக்குகளில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 3,53,595 வாக்குகளைப் பெற்றது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி 82,838 வாக்குகளையும், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் 6,761 வாக்குகளையும் ஐக்கிய தேசியக் கட்சி 3,062 வாக்குகளையும், பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி 170 வாக்குகளையும் பெற்றன.

பதிவான வாக்குகளில் தமிழ்த் தேசியக் கூட்டணி 78.48 சதவீத வாக்குகளையும், முஸ்லிம் காங்கிரஸ் 1.5 சதவீத வாக்குகளையும், பெற்றுள்ளன. மகிந்த ராஜபக்சவின் கூட்டணி உட்பட அனைத்து சிங்களக் கட்சிகளும் இணைந்து 20.02 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளன.

தமிழர் பகுதியில் தடம் பதிக்க முயன்ற சிங்களக் கட்சிகளை வாக்குரிமை என்னும் ஆயுதத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் விரட்டியடித்துள்ளனர்.

உலக நாடுகளை ஏமாற்றுவதற்காக, வடக்கு மாகாண சபைக்கு தேர்தலை நடத்த இலங்கை அரசு முன்வந்தார்.

இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் மூச்சுத்திணறிக்கொண்டிருக்கக்கூடிய தமிழ்மக்கள், வாக்குச் சாவடிகளுக்கு வருவதற்கே அஞ்சுவார்கள். எனவே, தனது வேட்பாளர்கள் வெற்றி பெறுவார்கள். அதைக் காட்டி உலக நாடுகளைத் திசை திருப்பலாமென மகிந்த அரசு திட்டமிட்டிருந்தது.

திட்டமிட்டு இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்ட தமிழர்களின் அரசியல் உரிமைகள், அவர்களின் பிரதேச ஒருமைப்பாடு, மனித உரிமைகள் பறிப்பு, போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்துதல் ஆகியவற்றை பின்னுக்குத் தள்ளிவிட்டு அவர்களுக்கு ஜனநாயக உரிமைகள் அளிக்கப்பட்டுவிட்டதாக தம்பட்டம் அடிக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச திட்டமிட்டிருந்தார்.

குறிப்பாக இந்த தேர்தலில் தன்னுடைய சிங்களக் கூட்டணி வெற்றிபெறுமானால் அதைக் காட்டி தமிழ்நாட்டில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக உருவாக்கியுள்ள எழுச்சியையும் அதற்கு மதிப்பளிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் இந்திய அரசின் சூழ்நிலையையும் மாற்றி விடலாம் என அவர் கருதினார்.

ஆனால், அவரது நோக்கங்கள் யாவற்றையும் தமிழ் மக்கள் தங்களின் தீர்ப்பின் மூலம் முறியடித்துள்ளனர். மகிந்த அரசுடன் எல்லா வகையிலும் இணக்கமுடன் அரசியல் நடத்தியாக வேண்டும் என்ற நிர்பந்தம் அடியோடு தகர்க்கப்பட்டு அவருக்கு எதிரான அரசியல் முன்னிறுத்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் அளித்த இந்த தெளிவான தீர்ப்பு இலங்கை அரசுக்கு எதிரானது மட்டுமல்ல, இந்திய அரசுக்கும் உலக நாடுகளுக்கும் ஓர் உண்மையான செய்தியைத் தெரிவித்துள்ளது. கடந்த நான்கு ஆண்டு காலத்தில் தமிழ் மக்கள் சந்தித்த இனப்படுகொலை, மனித உரிமைகள் பறிப்பு, பாரம்பரிய நிலங்கள் இழப்பு, சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்ட அவலம், அடிமைகளாக வாழவேண்டிய பரிதாபம் போன்ற கொடுமைகளிலிருந்து அந்த மக்களை விடுவிக்க வேண்டிய ஐ.நா. அமைப்போ அல்லது சர்வதேச மனித உரிமை அமைப்புகளோ எதுவும் செய்ய முன்வராமல் கைகளைப் பிசைந்து கொண்டு நின்றன.

பாஞ்சாலியின் கூந்தலைப் பிடித்து இழுத்து அவளை அரச அவைக்கு துச்சாதனன் கொண்டு வரும் வழிநெடுக நின்ற மக்கள் எப்படியிருந்தார்கள் என்பதை பாரதி தனது பாஞ்சாலி சபதத்தில் பாடுகிறார்.

என்ன கொடுமை
ஊரவர்தங் கீழ்மை உரைக்குந் தரமாமோ?
வீரமிலா நாய்கள், விலங்காம் இளவரசன்
தன்னை மிதைத்துத் தராதலத்திற் போக்கியே,
பொன்னையவள் அந்தப் புரத்திரனிலே சேர்க்காமல்,
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்,
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?

சபைநடுவே தான் துகிலுரியப்பட்ட போது அதைத் தடுத்து நிறுத்தி தன்மானத்தைக் காக்க யாரும் முன்வராத நிலையில் பாஞ்சாலி, சபதம் ஒன்றை மேற்கொண்டாள்.

துச்சாதனன் மற்றும் துரியோதனன் ஆகிய இருவரின் இரத்தத்தைக் கலந்து பூசி அதன் பின்பே தனது கூந்தலை முடிக்கப் போவதாக சூளுரைத்தாள். பாரதப்போரின் முடிவில் அதை நிறைவேற்றினாள் என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

அதைப்போல தமிழ் மக்களுக்கு இழைத்த, இழைக்கப்படுகின்ற அநீதிகளையும் அட்டூழியங்களையும் தடுத்து நிறுத்தவோ, கண்டிக்கவோ அல்லது தண்டிக்கவோ, முன்வராமல் உலக சமுதாயம் வேடிக்கை பார்த்து நின்ற போது, ஈழத்தமிழ் மக்கள் ஒன்று திரண்டு மாகாண சபை தேர்தலில் அளித்த தீர்ப்பு இலங்கை அரசுக்கு எதிரானது மட்டுமல்ல, உலக நாடுகளின் விழிகளைத் திறக்க வைத்த தீர்ப்புமாகும்.

இது வெறும் மாகாண சபைத் தேர்தல் முடிவல்ல. அந்த மக்களிடையே நடத்தப்பட்ட பொதுவாக்கெடுப்பின் தீர்ப்பாகவும் இது கருதப்படவேண்டும்.

காஷ்மீர் தனக்கே உரியது என பாகிஸ்தான் உரிமை கொண்டாடியபோது அன்றைக்கு பிரதமராக இருந்த நேரு காஷ்மீரில் பொதுவாக்கெடுப்பு நடத்தி முடிவு காணலாம் என ஐ.நா. பேரவையில் உறுதி கூறினார்.

ஆனால், காஷ்மீர் சட்டமன்றத்திற்கு நடத்தப்பட்ட தேர்தலில் ஷேக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சி பெருவெற்றி பெற்றது.

காஷ்மீரிகள் அளித்த இந்தத் தீர்ப்பையே பொதுவாக்கெடுப்பின் தீர்ப்பாக கருத வேண்டுமென நேரு உலக நாடுகளுக்குக் கூறினார்.

கிழக்கு பாகிஸ்தான் என்றழைக்கப்பட்ட கிழக்கு வங்கத்தில் பாகிஸ்தான் இராணுவ கெடுபிடிகளுக்கு இடையே நடத்தப்பட்ட சட்டமன்றத் தேர்தலில் முஜிபுர் ரகுமானின் அவாமி லீக் மாபெரும் வெற்றிபெற்றது.

இந்தத் தீர்ப்பை வங்க மக்களிடம் நடத்தப்பட்ட பொதுவாக்கெடுப்பாகக் கருத வேண்டுமென அன்றைய பிரதமர் இந்திரா காந்தி சர்வதேச நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

அதை ஏற்றுக்கொண்டு செயற்பட சர்வதேச சமுதாயம் தவறிய சூழ்நிலையில் இந்திய இராணுவத்தை அனுப்பி அந்தமக்களின் விடுதலைக்கு துணை புரிந்தார்.

1977 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் தமிழர் பகுதிகளில் நடத்தப்பட்ட அனைத்து தேர்தல்களிலும் தமிழர்கள் தங்களின் விருப்பம் என்ன என்பதைத் தெளிவாக அறிவித்துள்ளனர்.

இந்த மாகாணசபை தேர்தலிலும் அதே தீர்ப்பை அவர்கள் அளித்திருக்கிறார்கள். உலக சமுதாயம் இனிமேலாவது உண்மைன்ய உணர்ந்து அவர்களின் வாழ்வுரிமையை மதிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் முன்வரவேண்டும். இதுவே இத்தேர்தலில் ஈழத்தமிழ் மக்கள் உலகிற்கு அளித்திருக்கும் செய்தியாகும்.

(பழநெடுமாறன்)

# வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றினால் நாமும் பக்கபலமாக இருப்போம்- சந்திரகுமார்

(கொழும்பு)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வடக்கு மாகாண சபை தேர்தலில் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற போது நாமும் அவர்களுக்கு பக்கபலமாக இருப்போம் என ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

யுத்தத்தின் பின்னர் எமது மக்கள் எதிர் நோக்கிய உடனடி மனிதாபிமான பணிகள் முதல் துயரத்தின் விளிம்பில் நின்ற அவர்களின் வாழ்வை மீள் நிலைநிறுத்துவதற்கான அனைத்து அடிப்படைத் தளங்களையும் நாம் கடந்த நான்கு வருடங்களுக்குள் ஏற்படுத்தியிருக்கின்றோம்.

முற்றாக அழிந்து போய்க் கிடந்த அனைத்து துறைகளையும் மீள உருவாக்கியிருக்கின்றோம். தற்போது மக்கள் அந்த செயற்பாடுகளின் பலன்களைப் பெற்றுக் கொள்கின்ற காலத்தில் தடம்பதித்துள்ளனர்.

எனினும் மக்களின் தேவைகள் அனைத்தையும் முற்றாக நிறைவு செய்வதாயின் மேலும் சில காலங்கள் பொறுத்திருக்க வேண்டி இருக்கும்.

இந்நிலையில் தற்போது வடமாகாண சபையின் அதிகாரங்களை ஏற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும் முன்வர வேண்டும். அவ்வாறு முன்வருகின்ற சந்தர்ப்பத்தில் அவர்களின் செயற்பாடுகளுக்கு நாம் பக்கபலமாக செயற்படத் தயாராகவுள்ளோம் எனவும் தெரிவித்தார். (2)

## ஜே/101 கிராம சேவகர் பிரிவில் சிறுவர், முதியோர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜே/101 கிராம சேவகர் பிரிவில் சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல உதவியாளர், கிராம உத்தியோகத்தர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து நடத்தும் சர்வதேச முதியோர், சிறுவர் கௌரவிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு நீராவியடி சைவ பரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஈ.ஞான ஜோதி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கலந்துகொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (அ-5)

## முதலமைச்சர்கள் பதவிப்பிரமாணம்

வடமேல் மற்றும் மத்திய மாகாண முதலமைச்சர்கள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி பதவிப்பிரமாணம் செய்து கொள்வார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடு திரும்பியதன் பின்னர் குறித்த பதவிப்பிரமாண நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாண நிகழ்வு நடைபெறவுள்ளது.

மாகாண முதலமைச்சர்கள் மற்றும் அமைச்சர்கள் தொடர்பில் ஏற்கனவே சில பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

வடமேல் மாகாணத்தில் கூடுதல் விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்ட தயாசிறி ஜயசேகர, மத்திய மாகாணத்தில் கூடுதல் விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்ட பிரதமரின் மகன் அனுராத ஜயரட்ன, முன்னாள் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகியோரின் பெயர்கள் முதலமைச்சர் பதவிக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

இதுவிடயமாக ஜனாதிபதி நாடு திரும்பியதும் இறுதித் தீர்மானம் எடுப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (2)

## மஹிந்தவுடனான சந்திப்பை தவிர்த்த மன்மோகன் சிங்

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றிருந்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பை தவிர்த்துக் கொண்டார்.

கடந்த 27 ஆம் திகதி ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்ற மஹிந்த ராஜபக்ஷ இலங்கை திரும்புவதற்கு முன்னதாக மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசலாம் என்று அவரது வருகைக்காக நியூயோர்க்கில் காத்திருந்தார்.

ஆனால் வோஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை சந்தித்து விட்டு நியூயோர்க் புறப்பட்ட பிரதமர் மன்மோகன் சிங் குறிப்பிட்ட நேரத்துக்கு 3 மணி நேரம் தாமதமாக வந்தமையால் வேறு வழியில்லாது மன் மோகன் சிங்கை சந்திக்காமலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கை புறப்பட்டுச் சென்று விட்டார்.

பிரதமர் மன்மோகன் சிங் அதிகாரபூர்வமற்ற முறையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திக்க விரும்பவில்லை என்றும் அதன் காரணமாகவே அவர் வோஷிங்டனிலிருந்து சில மணிநேரம் தாமதமாக நியூயோர்க் சென்றிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. (2)



சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் மற்றும் பிரமுகர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் கோவலன் கண்ணகி நாட்டிய நாடகத்தின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அல்லைப்பிட்டி செய்தியாளர்)

## இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் அகதிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் அகதிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தியாவுக்கு அகதிகளாக சென்ற பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நாடு திரும்ப நாட்டம் காட்டுவதில்லை என அது தெரிவித்துள்ளது.

ஒரு இலட்சத்து 2 ஆயிரம் இலங்கை அகதிகள் இந்தியாவில் தங்கியிருப்பதாகவும் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நாடு திரும்புவதற்கும் விருப்பம் கொள்ளவில்லை எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள 110 முகாம்களில் 67 ஆயிரத்து 435 இலங்கைக் குடும்பங்களும் உறவினர் வீடுகளில் 34 ஆயிரத்து 757 குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றனர். அதிகமான இலங்கை அகதிகள் இருபது ஆண்டுகளுக்கு முன்னதாகவே யுத்தம் இடம் பெற்ற காலத்தில் இந்தியாவுக்கு சென்றவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டரை ஆண்டு காலப் பகுதியில் 3 ஆயிரத்து 476 இலங்கை அகதிக் குடும்பங்களே ஐக்கிய நாடுகள் அமைப்பின் உதவியுடன் இலங்கை திரும்பியுள்ளன. (2)

## பொய்ப்பரப்புரைகளில் அரசியல்வாதிகள்

பிரதமர் பதவி மற்றும் மத்திய மாகாண முதலமைச்சர் பதவிகளை எதிர்பார்த்துள்ள சில அரசியல்வாதிகள் அவர்களின் நலனுக்காக பல பொய்களைப் பரப்பி வருவதாக பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் பதவி மற்றும் மத்திய மாகாண முதலமைச்சர் பதவி தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே இறுதி தீர்மானத்தை எடுப்பார்.

கட்சியும் ஜனாதிபதியும் எடுக்கும் தீர்மானத்தை நான் ஏற்றுக் கொள்வேன். அதிகமான விருப்பு வாக்குகளை பெற்றவருக்கே முதலமைச்சர் பதவி வழங்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆரம்பத்திலேயே முடிவு செய்திருந்தது.

அந்தத் தீர்மானத்தில் இதுவரை எந்த மாற்றங்களும் இல்லை. ஜனாதிபதியோ கட்சியிலுள்ள வேறு எந்தத் தலைவர்களோ இதுபற்றி அதுவரை என்னிடம் பேசவுமில்லை.

சில அரசியல்வாதிகள் என்ன கூறினாலும் ஊடகங்கள் எதனை எழுதினாலும் இறுதியாக இந்த விடயம் சம்பந்தமாக இறுதி முடிவு எடுப்பது ஜனாதிபதியின் கையிலேயே தங்கியுள்ளது என்றார். (செ-2)

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் ஒக்.4 இல்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னாக வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது. ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்காக சிங்கள மற்றும் தமிழ்மொழி மூலம் மூன்று இலட்சத்து இருபத்து ஒன்பதாயிரம் மாணவ, மாணவியர் தோற்றியிருந்தனர்.

பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படும் அதே தினத்தில் இணையத்திலும் பெறுபேறுகளைப் பார்வையிடலாம். இதன்பிரகாரம் www.doenets.lk என்ற இணைய முகவரியின் ஊடாக பெறுபேறுகளை பார்வையிட முடியும். (2)

## தேசிய மட்டப் போட்டிகள்

பாடசாலை மாணவர்களுக்கான தேசியமட்ட மெய்வன்மை போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை முதல் 6 ஆம் திகதி வரை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் தென்மராட்சி வலயத்திலிருந்து 11 மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர். அம்மாணவர்களைத் தயார் நிலைப்படுத்துமாறு தென்மராட்சி பாடசாலை அதிபர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (அ-9-29)

# தேர்தல் முடிவை கவனித்து பேச்சுவார்த்தைக்கு வாருங்கள்

## அரசுக்கு கூட்டமைப்பு அழைப்பு

(கொழும்பு)

**வடக்கு மாகாண சபைத்தேர்தல் முடிவை கவனத்திற்கொண்டு அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவதற்கு முன்வரவேண்டும். அதன்மூலம் தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய நிரந்தரத் தீர்வு காணப்படல் வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார்.**

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

வடமாகாண தேர்தல் முடிவை சர்வதேசம் மிக உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தது. இந்த நிலையில் வடக்கு வாழ் மக்கள் சர்வதேச சமூகத்திற்கும் தெளிவான ஒரு கருத்தை முன்வைத்துள்ளதோடு அபிவிருத்தியை விட அர்சியல் தீர்வுதான் மிக முக்கியம் என்பதை தெளிவுபடுத்தியுள்ளனர்.

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அமோக வெற்றி கிடைத்துள்ளது. வடக்கு மக்களை அரசு அடக்குமுறைக்கு உட்படுத்தி அடிமைகளாக வைத்திருந்தது.

இந்த தேர்தலை நடத்த வேண்டாம் என்று தென்னிலங்கை பேரினவாதக் கட்சிகள் போர்க்கொடி தூக்கின.

மாகாண சபையை மீளப் பெற இக் கட்சிகள் முழு முயற்சி செய்தன. மாகாண சபைகளுக்குரிய காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்கி விட்டாவது தேர்தலை நடத்துவதற்கு பகீரதப்பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் சர்வதேச சமூகம் அதற்கு செவி சாய்க்கவில்லை. மாறாக தேர்தலை நடத்துமாறு அச்சமூகம் அழுத்தம் கொடுத்தது. இத்தேர்தலில் வடக்கு மக்கள் தமது வாக்குகளை சரியான முறையில் பயன்படுத்தியுள்ளனர்.

அதன்மூலம் கிடைத்துள்ள வெற்றி பாரிய எழுச்சியாகும். இது கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மத்தியிலும் உணர்ச்சியை ஊட்டியுள்ளது.

எமது அடுத்த கட்டம் வடக்கு, கிழக்கு இணைப்பாகும். அதற்கு வடக்கு மக்களுடன் இணைந்து பூரண ஆதரவை கிழக்கு மக்களும் தர வேண்டும். இக்கனவு பலிக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினை தீர்வுக்கான ஒரு திட்டமாக மாகாண சபை முறையை ஒரு போதும் கருதவில்லை. அப்படி கருதியிருந்தால் கிழக்கு மாகாண சபைக்குரிய முதலாவது தேர்தலில் நாம் போட்டியிட்டிருப்போம்.

2ஆவது தேர்தலில் போட்டியிட்டோம். அந்தத் தேர்தலில் வெற்றியீட்டிய தமிழர்களில் ஒருவரைத் தவிர ஏனைய அனைவரும் எமது கட்சியினராவர். வடக்கில் வெற்றியீட்டியுள்ள 14 பேரும் எமது கட்சியைச் சேர்ந்தவர்களேயாவர்.

இந்த முடிவு தமிழர்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் என்பதை புடம்போட்டுக் காட்டியது என்றார். (செ-2)

# வருமானக் குறைவால் அரசுக்கு நெருக்கடி

(கொழும்பு)

இலங்கையில் அரசாங்கத்தின் வருமானம் குறைந்துள்ளமை அரசாங்கத்தின் நிதித்துறை சம்பந்தமாக பெரும் சவாலை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இதனால் அரசாங்கத்திற்கு கிடைக்கும் வரி வருமானம் குறையாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நிதியம் வலியுறுத்தியுள்ளது.

வரி செலுத்தும் நபர்கள் மற்றும் நிறுவனங்களில் எண்ணிக்கை அதிகரிப்பது, வரி வருமான நிர்வாகம் மற்றும் அதனை வலுப்படுத்துவதன் மூலம் வரி வருமானம் குறைவதை தடுக்க முடியும் எனவும் நாணய நிதியம் ஆலோசனை வழங்கியுள்ளது. (செ-2)

# மாணிக்கக்கல் தேடிய இருவர் கைது

(கொழும்பு)

அவிசாவளை, சீதாவக்க கங்கையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இருவர் அவிசாவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவிசாவள்ள பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் மேற் கொண்ட சுற்றிவளைப்பின் போது இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து ஒக்சிசன் சிலிண்டர், 3 ஒட்சிசன் குழாய்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அவிசாவளை பொலிஸார் இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (செ-2)

# விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அதிகாலை உயிரிழந்துள்ளார்.

மேற்படி சம்பவத்தில் கிளிநொச்சி விசுவமடுவைச் சேர்ந்த தேவதாஸ் இந்திரதாஸ் (வயது 28) என்பவரே உயிரிழந்தவராவார்.

கிளிநொச்சி விசுவமடுப் பகுதியில் கடந்த 16 ஆம் திகதி இவர் வீதியை துவிச்சக்கர வண்டியில் கடக்க முற்பட்ட வேளை சிறிய ரககன்ர் வாகனம் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் தர்மபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு சிகிச்சைப் பலனின்றி அங்கு உயிரிழந்துள்ளார். (செ-6)

# காணி சுவீகரிப்பு விபரங்கள் கோரல்

(தும்பளை)

2010 ஆம் ஆண்டு ஜனவரி முதல் யாழ். மாவட்டத்தில் சில காணிகள் அரசியல் வாதிகளாலும் அரசியல் ரீதியாக தொடர்புபட்ட சில அலுவலர்களாலும் பறிமுதல் செய்யப்பட்டமை தொடர்பாக ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க அண்மையில் பாராளுமன்றில் கேள்வி எழுப்பியிருந்தார்.

விடுதலைப் புலிகளின் உடைமையாக இருந்த காணிகளை சுத்திகரித்தல் என்ற பெயரில் யாழ். மாவட்ட கடற்கரைக் காணிகளைச் சட்ட ரீதியாக உடைமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயமாக சுவீகரித்தல் உண்மையானதா? என ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளிப்பதற்காக குறித்த அமைச்சு சகல பிரதேச செயலகங்களிலுமிருந்து இது தொடர்பான விபரங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளது. (செ-7-19)

# வங்கி பணமோசடிக்கு முயற்சித்த மருத்துவர் உட்பட அறுவர் கைது

(கொழும்பு)

தனியார் வங்கியில் பண மோசடி செய்ய முயற்சித்த மருத்துவர் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனியார் வங்கியொன்றில் 53 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்ய முயற்சித்த கொழும்பிலுள்ள பிரதான பாடசாலையில் பயின்ற இருவர், வர்த்தகர், கலாநிதி பட்டம் பெற்ற பெண், கண் வைத்திய நிபுணர் உட்பட 6 பேர் கொஹுவல பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மின்னஞ்சல் மூலம் குறித்த வங்கியில் இருந்து பணத்தை மோசடி செய்ய முயற்சித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் இந்த பண மோசடி திட்டத்திற்கு இந்தியாவின் மும்பாய் நகரிலுள்ள ஒருவரிடம் உதவியைப் பெற்றுள்ளதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு மின்னஞ்சலை அனுப்பி, அவர்களின் மின்னஞ்சல் தகவல்களை பெற்றுள்ளனர்.

இதன் மூலம் கொஹுவல பிரதேசத்திலுள்ள வங்கிக் கிளையில் பணத்தை வைப்புச் செய்யவும் சந்தேக நபர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

தமது மின்னஞ்சல் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை அறிந்து கொண்ட வங்கியின் நிர்வாகம் அது பற்றி பொலிஸில் முறைப்பாடு செய்தது.

இதனடிப்படையில் விசாரணைகளை நடத்திய பொலிஸார் சந்தேக நபர்களை கைதுசெய்தனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து போலியாக தயாரிக்கப்பட்டிருந்த காசோலை புத்தகம் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் இந்திய பிரஜை ஒருவர் சம்பந்தப்பட்டுள்ளதால் மேலதிக விசாரணைகள் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (செ-2)




தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட இவ்வாண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான தொழில் உலகை அறிவோம். வாழ்வை இனிமையாக்குவோம் எனும் தொனிப்பொருளிலான கருத்தரங்கொன்று சாவ. இந்துக் கல்லூரியிலும் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியிலும் அண்மையில் இடம்பெற்றது. வேல்ட் விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக பௌதீகவியல்த் துறைத் தலைவர் பேராசிரியர் கே.கந்தசாமி மங்கல விளக்கேற்றுவதையம் கலந்து கொண்ட மாணவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் :- சாவகச்சேரி செய்தியாளர்)

# டெங்கு கட்டுப்பாடு தொடர்பான கூட்டம்

(தும்பளை)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையான தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு மாவட்ட டெங்கு கட்டுப்பாட்டு குழுக் கூட்டம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (செ-7-19)

# பயங்கரவாதத்திற்கு துணைபோக வேண்டாம் பாகிஸ்தானுக்கு மன்மோகன் எச்சரிக்கை



ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்களின்படி காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்ற பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் கோரிக்கையை ஒருபோதும் ஏற்கமுடியாது என்று அவர் திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீர் பிரச்சினை உட்பட பாகிஸ்தானுடனான அனைத்துப் பிரச்சினைகளையும் சிம்லா உடன்பாட்டின்படி, பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க இந்தியா உறுதி பூண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிடுள்ளார்.

(டில்லி)

**பயங்கரவாதத்துக்கு துணைபோவதை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும்; இல்லையெனில் அதற்கான கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று பிரதமர் மன்மோகன் சிங் எச்சரித்துள்ளார்.**

பிரதமர் மன்மோகன் சிங், நியூயோர்க் நகரில், ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்று நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அப்போது அவர் கூறியதாவது,

பயங்கரவாதம் என்பது எல்லா இடங்களிலும் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்குப் பெரிய அச்சுறுத்தலாக தொடர்கிறது. இது உலகெங்கிலும் பெரிய அளவில் அப்பாவி மக்களின் உயிர்களைப் பறிக்கிறது. ஆபிரிக்காவில் இருந்து ஆசியா வரை, பயங்கரவாத அச்சுறுத்தலின் கோர முகத்தை கடந்த சில நாட்களிலேயே நாம் கண்டோம்.

பாகிஸ்தான் அரசு ஆதரவு பெற்ற எல்லை தாண்டிய பயங்கரவாதம் இந்தியாவுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாகவுள்ளது.

ஜம்மு காஷ்மீர் உட்பட எல்லாப் பிரச்சினைகளுக்கும் இருதரப்பு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண நாங்கள் தயார். எனினும், இதில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதிகளுக்கு துணைபோவதை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும். தங்கள் மண்ணிலிருந்து பயங்கரவாதிகள் செயற்பட ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. பயங்கரவாதிகளுக்கு பயிற்சி அளிப்பதையும், அவர்களுக்கு புகலிடம் அளிப்பதையும் பாகிஸ்தான் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

ஜம்மு காஷ்மீர் என்பது இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்பதையும், இந்தியாவின் ஒற்றுமை மற்றும் பிரதேச ஒருமைப்பாட்டில் எப்போதும் சமரசம் செய்து கொள்ளப்படாது என்பதை பாகிஸ்தான் உட்பட அனைவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

பயங்கரவாதத்துக்கு எதிராக உலகளாவிய நடவடிக்கை என்ற விவகாரத்தில் நாம் உறுதிபூண்டுள்ளதைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டியது அவசியம். பயங்கரவாதிகளுக்குப் புகலிடம், பயிற்சி, நிதி, ஆயுதங்கள் ஆகியவற்றை வழங்கும் நாடுகளை யாரும் சகித்துக் கொள்ளக் கூடாது. பயங்கரவாதிகளும் அரசு சாரா நபர்களும் அணு ஆயுதங்கள் மற்றும் அவற்றின் தொழில்நுட்பத்தைப் பெறுவதை நாம் தடுக்க வேண்டும்.

பன்னாட்டு நிதி அமைப்புகள் தங்களின் முடிவு எடுக்கும் நடைமுறைகளில் வளரும் நாடுகளின் குரலைச் செவிமடுக்க முன்வர வேண்டும். இந்த அமைப்புகளிலும் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும்.

அதை இந்த இடத்தில் இருநதே (ஐ.நா. சபை) தொடங்க வேண்டும். இப்போதையை அரசியல் யதார்த்த நிலைமையைப் பிரதிபலிப்பதற்காக, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தங்கள் செய்து, அதை மாற்றியமைக்க வேண்டும். பல்வேறு வளர்ந்து வரும் நாடுகளும் அதில் நிரந்தர மற்றும் தற்காலிக உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட வேண்டும்.

**ஏழ்மை ஒழிப்புக்கு முக்கியத்துவம்**

உலகம் முழுவதும் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வறுமையில் வாடுகின்றனர். ஏழ்மை ஒழிப்புக்கு மிக உயர் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியது அவசியம என்றாா.(2)

## பாரதச் செய்தி



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஐ.நா.பொதுச்சபை கூட்டத்தில் கலந்து கொள்ள சென்ற நேபாள நாட்டின் அமைச்சர் சபை தலைவர் கில் ராஜ் ரெக்மியிடம் பிரதமர் மன்மோகன் சிங் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# தனித்தெலுங்கானா மாநில மசோதாவை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும்

## சுஷ்மா சுவராஜ் எச்சரிக்கை



பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரின் போது மத்திய அரசு தனித்தெலுங்கானா மாநிலம் அமைப்பதற்கான மசோதாவை நிறைவேற்ற வேண்டும்.

அவ்விதம் நிறைவேற்ற தவறினால் தனித்தெலுங்கானா கோரிக்கையை முன்வைத்து பா.ஜ.க. தனது இரண்டாம் கட்ட போராட்டத்தில் குதிக்க நேரிடும் என சுஷ்மா சுவராஜ் எச்சரித்துள்ளார்.

ஆந்திர தலைநகர் ஐதராபாத்திலுள்ள மஹ்பூப் நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தெலுங்கானா மற்றும் ராயல சீமா பகுதிகளை உள்ளடக்கிய சீமந்த்ரா பகுதி மக்களிடையே மத்திய அரசு இன்னும் இரண்டு மாதங்களுக்குள் மத்திய அரசு பேச்சுவார்த்தை மூலம் சமரச தீர்வு காண முன்வர வேண்டும்.

எதிர்வரும் குளிர்கால கூட்டத் தொடரின்போது தனித் தெலுங்கானா மசோதாவை நிறைவேற்றி மாநிலத்தைத் பிரித்து தர வேண்டும்.

ஐதராபாத்தை தலைநகராக கொண்டு 10 மாவட்டங்கள் உள்ளடங்கிய தனித்தெலுங்கானா மாநிலம் அமைக்கப்பட வேண்டும்.

அவ்வாறு தனித்தெலுங்கானா மாநிலம் உருவாக்கப்படும் பட்சத்தில் அந்த வெற்றி விழாவில் உங்களை மீண்டும் சந்திக்க நான் இங்கு வருவேன்.

மத்திய அரசின் முடிவுக்கு எதிராக ஆந்திராவை ஆளும் காங்கிரஸ் கட்சியின் முதல் மந்திரியே பேசி வரும் சூழ்நிலையில், குளிர்கால கூட்டத்தொடரின் போது தனித்தெலுங்கானா மசோதாவை நிறைவேற்ற தவறினால் பா.ஜ.க. சார்பில் தனித் தெலுங்கானா கோரிக்கைக்கான இரண்டாம் கட்ட போராட்டத்தில் பங்கேற்க நான் மீண்டும் இங்கு வருவேன் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தி பிரதமருக்கு மீண்டும் "ஜெ" கடிதம்

(சென்னை)

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் ஒன்றை மீண்டும் எழுதி அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.



இலங்கை மற்றும் தமிழக மீனவர்கள் சங்கத்தினரிடையே பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடுகள் செய்ய கோரிக்கைவிடுக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கைவிடுக்கப்பட்ட 2 நாட்களிலேயே வங்கக் கடலில் மீன்பிடித்து கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 20 பேரை, 5 படகுகளுடன் இலங்கை படையினர் சிறைபிடித்துச் சென்றுள்ள சம்பவம் மீனவர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ளது.

கைது செய்யப்பட்ட 20 மீனவர்களும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.


ஏற்கனவே சிறைபிடிக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் 19 பேர் இன் னமும் விடுவிக்கப்படவில்லை.

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலையும், சிறை பிடித்துச் செல்லும் இலங்கை படையினரின் நடவடிக்.கைகளையும் தடுக்க மத்திய அரசு விரைந்து நட வடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் அதில் வலியுறுத்தியுள்ளார். (2)

# சிரியாவில் இரசாயன ஆயுதங்களை அழிக்க ஐ.நா.கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றம்

(டமாஸ்கஸ்)

**சிரியாவிலுள்ள இரசாயன ஆயுதங்களைக் கண்டு பிடித்து, அவற்றை அழிப்பதற்கான தீர்மானம் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் ஏகமனதாக நிறை வேற்றப் பட்டது.**



இத்தீர்மானம் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

சிரியாவில் நடந்த உள்நாட்டு கலவரத்தின்போது, கிளர்ச்சியாளர்களை ஒடுக்க இராணுவத்தினர் இரசாயன குண்டுகளை வீசியதாக, குற்றச்சாட்டு எழுந்தது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 21ஆம் திகதி அங்குள்ள டமாஸ்கஸ் புற நகர் பகுதியில் இரசாயன குண்டு கள் வீசப்பட்டதில் ஆயிரத்து500 பேர் வரை உயிரிழந்தனர். இதற்கு உலகம் முழுவதும்கடும்கண்டனம்எழுந்தது.

இதையடுத்து, சிரியா மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா நடவடிக்கை எடுத்தது சிரியாவுக்கு ஆதரவாக ரஷ்யா களம் இறங்கியது. சிரியா மீதான எந்தத் தாக்குதலையும் எதிர்ப்போம் என அதன் ஜனாதிபதி புடின் பகிரங்க்மாக அறிவித்தார். இதற்கு, ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தன.

"தாக்குதலை தவிர்க்க சிரியா, தன்னிடம் உள்ள இரசாயன ஆயுதங்களை, சர்வதேச நாடுகளிடம் ஒப்படைக்க வேண்டும்" என, அமெரிக்கா வலியுறுத்தியது.

இது தொடர்பாக, அமெரிக்கா ரஷ்யா நாடுகளுக்கு இடையே பேச்சுவார்த்தை நடந்தது. இதன் படி, சிரியா, தன்னிடம் உள்ள இரசாயன ஆயுதங்களை, சர்வதேச நாடுகளிடம் ஒப்படைக்க தயார் என அறிவித்தது.

இதையடுத்து, சிரியாவில் உள்ள இரசாயன ஆயுதங்களை கண்டுபிடித்து, அவற்றை அழிப்பதற்கான தீர்மானம், ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில், ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதுகுறித்து ஐ.நா., பொதுச் செயலர், பான் கீமூன் கூறுகையில்,

நீண்ட நாட்களுக்கு பின்னர் சிரியா தொடர்பான முதல் நம்பிக்கைச் செய்தி இது.

"வரலாற்று சிறப்புமிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம், அமைதியை விரும்பும், சர்வதேச சமுதாயத்துக்கு, நம்பிக்கையூட்டும் வகையிலான நல்ல செய்தி கிடைத்துள் ளது, அரபு நாடுகளில் ஒன்றான சிரியாவில் மீண்டும் அமைதியைக் கொண்டு வருவது தொடர்பான மாநாடு எதிர் வரும் நவம்பர் மாதம் மத்தியில் நடைபெறும் என்று நம்புகின்றேன் என்றார். (2)



கனடா நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஜப்பான் பிரதமர் சின்ஷோ அபே ஒட்டவா நகரில் அந்நாட்டின் பிரதமர் ஸ்டீபன் ஹார்பரை சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# பெண் கல்விக்காக போராடிய மலாலாவுக்கு மனிதநேய விருது

பெண்பிள்ளைகளின் கல்விக்காக போராடிய மலாலாவுக்கு ஹார்வர்டு பல்கலைக்கழகம் இந்த ஆண்டுக்கான மனிதநேய விருது வழங்கி கௌரவித துள்ளது.

பாகிஸ்தானில் பெண் கல்விக்காக குரல் கொடுத்த மலாலா, தலிபான் தீவிரவாதிகளால் சுடப்பட்டார்.

இதனையடுத்து தீவிர சிகிச்சைக்கு பின் உயிர் பிழைத்தவர், உலகம் முழுவதும் பெண் கல்வியை வலியுறுத்தி சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் இவரது சேவையை பாராட்டி ஹார்வர்டு பல்கலைக்கழகம் 2013 ஆம் ஆண்டுக்கான "பீட்டர் ஜெ ஹோம்ஸ் மனிதநேய விருது" வழங்கி கௌரவித்தது.

இந்த விருது வழங்கும் விழா கடந்த 27 ஆம் திகதி நடைபெற்றது. ஹார்வர்டு பவுண்டேஷன் இயக்குநரும், ஹார்வர்டு மருத்துவ கல்லூரி பேராசிரியருமான டாக்டர் எஸ்.ஆலென் கவுன்டர் விருதை வழங்கினார்.

விருதைப் பெற்றுக் கொண்ட மலாலா கூறுகையில், மருத்துவராகி நோயாளிகளுக்குச் சேவை செய்வதை விட அரசியலுக்கு வரவே விரும்புகிறேன். அதன் மூலம் பொதுமக்களுக்கு நேரிடையாக தொண்டாற்ற முடியும்.

பாகிஸ்தானில் பெண்களும் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும், அவர்களும் சிறப்பு மிக்க ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் பயில வேண்டுமென விரும்புகிறேன். எனது வாழ்க்கைப் பயணத்தில் என்றாவது ஒரு நாள் பாகிஸ்தானுக்கு திரும்பச் செல்வேன்.

அப்போது அங்கு ஹார்வர்டு போன்று உயரிய பல்கலைக்கழகத்தை உருவாக்க முயல்வேன் என்றும் தெரிவித்துள்ளார். (2)

# பொலிஸ் நிலையம் அருகே கார் குண்டுத் தாக்குதல்

## 10 பேர் பலி; 40 பேர் காயம்



(பெஷாவர்)

பாகிஸ்தான் பொலிஸ் நிலையம் அருகே கார் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டதில் 10 பேர் பலியாகினர்;40பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானில் தீவிரவாதிகள் அட்டூழியம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அத்துடன் வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில் நேற்று பெஷாவர் நகரில் பொலிஸ் நிலையம் அருகே தீவிரவாதிகள் கார் குண்டு தாக்குதல் நடத்தினார்கள்.

அதில் 10 பேர் பலியாகினர். 40 பேர் காயம் அடைந்தனர். அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (2)




# ஆயுதங்களை கீழே போடமுடியாது; பாகிஸ்தான் தலிபான்கள் திட்டவட்டம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அரசுடன் சமாதான பேச்சுவார்த்தைக்கு தலிபான்கள் விரும்பினால் ஆயுதங்களை தூர எறிந்து விட்டு பாகிஸ்தானின் அரசியலமைப்பு சட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதாக அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று பிரதமர் நவாஸ் ஷெரீப் சமீபத்தில் கூறியிருந்தார்.

இந்த கருத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ள பாகிஸ்தான் தெஹ்ரிக்-இ-தலிபான் இயக்கம் நாங்கள் அரசியலமைப்பு சட்டத்துக்கும் கட்டுப்பட மாட்டோம். ஆயுதங்களையும் கீழேபோட முடியாது என்று அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அவ்வியக்கத்தின் செய்தி தொடர்பாளர் ஷஹிதுல்லா ஷஹித் அளித்த பேட்டியில்



கூறியுள்ளதாவது,

எங்களது நிலைப்பாட்டை நாங்கள் ஏற்கனவே விளக்கி விட்டோம். எங்களோடு பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் அரசுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. அந்த அதிகாரம் இராணுவத்திடமும் அமெரிக்காவிடமும் மட்டும்தான் உள்ளது.

எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் அதிகாரம் தங்களுக்கு உண்டு என்று அரசு நிரூபித்தால் அதன்பின்னர் அரசுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்குவது தொடர்பாக நாங்கள் பரிசீலனை செய்வோம்.

அந்த அதிகாரம் தன்னிடம் இல்லை என்பதை நவாஸ் ஷெரீப் நிரூபித்துள்ளார்.

பாகிஸ்தானில் இருக்கும்போது அவர் ஒருமாதிரியாக பேசுகிறார். தற்போது, அமெரிக்காவில் இருந்து கொண்டு பேச்சுவார்த்தைக்கு முன்நிபந்தனை விதித்து பேசுகிறார்.

ஆயுதங்களை கீழேபோட்டு விட்டு அரசியலமைப்பு சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என இப்போது அவர் கூறுகிறார். இதற்கு நாங்கள் ஒப்புக்கொண்ட பின்னர் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான அவசியமே இல்லை. இவ்வாறு அந்த பேட்டியில் அவர் கூறியுள்ளார். (2)

# சந்தைக் கட்டடத்தில் குண்டுவெடிப்பு

## 33 பேர் பலி; 70 பேர் காயம்

பாகிஸ்தானில் இடம்பெற்றுள்ள குண்டு வெடிப்பில் குறைந்தபட்சம் 33 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 70 பேர் காயமடைந்துள்ளனர்.

வட - மேற்குப் பாகிஸ்தான் நகரின் பெஷாவர் பகுதியில் அமைந்துள்ள கிஸ்ஸாக்வானி சந்தையில் நேற்று இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

அங்கிருந்த கடைகளும் வாகனங்களுமஇக் குண்டு வெடிப்பில் தீப்பிடித்துள்ளதாக அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



பாகிஸ்தானிலுள்ள தேவாலயம் ஒன்றில் இடம்பெற்றிருந்த இரட்டைக் குண்டு வெடிப்பில் 80 பேர் கொல்லப்பட்டுள்ள சம்பவத்தை தொடர்ந்து ஒரு வாரத்திற்கு பின்னர் இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது ஒரு கார் குண்டுத் தாக்குதலாக இருககலாம் என பொலிஸார் சந்தேகிப்பதாக அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2)

உன் நோக்கத்தை வாளால் அறுத்துக் கொல்வதைவிட நகை முகத்தால் சாதித்துக் கொள்வதே சாலச் சிறந்தது.
– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# முதல்வர் விக்னேஸ்வரனிடம் முழு அதிகாரத்தையும் கொடுங்கள்

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் மக்கள் உணர்வு பூர்வமாக வாக்களித்தனர். யாருமே எதிர்பாராத வகையில், வாக்களித்ததன் மூலம் தமிழ்ப் பற்றில், தமிழ்த் தேசியத்தில் அவர்கள் உறுதியாக இருப்பதை உலகிற்கு உணர்த்தியுள்ளனர்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவ்வாறல்ல. கூட்டமைப்பில் இருக்கக் கூடிய ஒரு சிலரைத் தவிர வேறு எவரும் விடுதலைப் போராட்டத்திற்கு இம்மியும் பங்களிப்புச் செய்யாதவர்கள்.

அதிலும் வடக்கு மாகாணசபைத் தேர்தலில் நிறுத்தப்பட்ட வேட்பாளர்களிலும் ஒரு சிலரைத் தவிர ஏனையவர்களும் அவ்வாறே. இதை நாம் கூறினால், விமர்சனங்கள் எழும்.

ஆனால், விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் நேரில் வந்தால் ஓய்வு பெற்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் உள்ளிட்ட ஒருசிலரைத் தவிர மற்றைய அத்தனைபேருக்கும் வெடிவிழும் என்பதை சத்தியம் செய்து எம்மால் கூறமுடியும்.

என்ன செய்வது! போராட்டத்திற்காக உயிர் விட்டவர்கள், போரில் வதைபட்டவர்கள், ஒன்றல்ல இரண்டல்ல மூன்று நான்கு எனத் தங்கள் பிள்ளைகளை மாவீரர் ஆக்கி இன்று அவர்களின் நிழல் படங்களுக்கு முன்னால் குந்தியிருந்து அழுகின்றவர்கள் என இன்னும் எத்தனையோ வகையில் விடுதலைப் போராட்டத்துக்காகத் தங்களை அர்ப்பணித்தவர்கள் மௌனிகளாக இருக்க, இங்கோ வடக்கு மாகாண சபையில் அமைச்சுப் பதவிக்கு அடிபாடு நடக்கிறதாம். எப்படியிருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழ்த் தேசிய உணர்வு?

வடக்கு மாகாண சபைத் தேர்தல் வெற்றியின் உச்சம் என்பது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்று ஏற்பாடு இல்லாமையாலும், முகவரி தெரியாவிட்டாலும் – அவரை நேரில் காணாவிட்டாலும் – ஓய்வு பெற்ற நீதியரசர் சி. வி . விக்னேஸ்வரன் முதல் அமைச்சர் வேட்பாளர் என்பதாலுமே தமிழ் மக்கள் வரலாறு காணாத அளவில் வாக்களித்தனர்.

எனவே வடக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மாகாண சபை உறுப்பினர்கள் எவரும் தங்கள் சொந்தச் செல்வாக்கில் வெற்றிபெற்றவர்கள் அல்லர்.

வெற்றிபெற்றவர்களுக்குப் பதிலாக ஒரு பூவரசந்தடியை வைத்திருந்தால் அதற்கு இன்னும் அதிக வாக்குகள் விழுந்திருக்கும்.

இந்த உண்மைகளை மறந்து அமைச்சுப் பதவிகளுக்குப் போட்டியிடுவது எங்ஙனம் நியாயமானது? முள்ளிவாய்க்காலில் இரு கைகளையும் பறிகொடுத்தவர் தன் வாயினால் வீட்டுச் சின்னத்திற்குப் புள்ளடி போட,

இங்கு பதவியாசையால் பொறுக்கித்தனங்கள் நடக்கின்றன. இதற்கெல்லாம் முழுக்காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையே.

சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள் முதலமைச்சர் என்றால், அவரே அமைச்சர்களைத் தெரிவு செய்ய வேண்டும். அந்த அதிகாரத்தை அவருக்கே வழங்க வேண்டும். இதை விடுத்து எல்லோரும் கூடியிருந்து அமைச்சுப் பதவிக்குச் சண்டை போடுகிறீர்களே! உங்களுக்கு ரோசம், மானம், வெட்கம் என்ற நரம்புகளே இல்லையா?

விடுதலைப்புலிகளை நீங்கள் சந்தித்த காலத்திலேனும் இவை உங்களுக்கு ஏற்பட்டதில்லையா? சாதாரண தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் சிந்தித்து உள்ளத்தால் நேசித்து வாக்களிக்க, நீங்கள் சீ... உங்களை விட சிங்கள மக்கள் எவ்வளவோ மேல்.

# நல்லூர்ப் பிரதேச சபை ஊழியர்கள் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை ஊழியர்கள் மூவர் மீது இனந்தெரியாத நபர்கள்சிலர்தாக்குதல்நடத்தியுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இருபாலை ஆணித் தொழிற்சாலைக்கு அருகில் இடம் பெற்றுள்ளது.

கோண்டாவில் சுடலைப்பகுதியில் சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களை கொட்டுவதற்காக நல்லூர் பிரதேச சபைப் பணியாளர்கள் மூவர் பிரதேச சபை ரக்டரில் பயணித்துள்ளனர்.

இருபாலை ஆணித்தொழிற்சாலைக்கு அண்மையில் சென்று கொண்டிருந்த போது ஆட்டோ மற் றும் மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத சிலர் அவர்களை மறித்து கடுமையாக கொட்டன்களால் தாக்கியுள்ளனர்.

இதில் நல்லூர் பிரதேச சபைப் பணியாளர்கள் கே. குணசேகரன் (வயது 55), கே. விகுந்தன் (வயது 55), எஸ். ஜெயதீஸ்வரன் ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-8-4)

# சடலம் மீட்பு

(கொழும்பு)

மறைந்த திரைப்படத் தயாரிப்பாளர் திஸ்ஸ அபயசேகரவினுடைய மாமியாரின் சடலம் பொலிஸாரினால் நேற்று ஞாயிற்றுக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

88 வயதான இவர் மர்மமான முறையில் உயிரிழந்திருக்கலாம் என விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இராஜகிரிய, மொரகஸ்முல்ல பகுதியில் தனது மகளின் வீட்டில் ஓய்வு பெற்ற தாதி உத்தயோகத்தரான இவர் வசித்துவந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-11)

# அதிகாரம் எதுவுமற்றவர் இலங்கை தேர்தல் ஆணையாளர்

## இந்திய முன்னாள் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

இலங்கையின் தேர்தல் ஆணையாளர் அதிகாரம் அற்றவர் என்று இந்தியாவின் முன்னாள் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் இடம்பெற்ற வடக்கு மாகாணசபை தேர்தலை கண்காணிக்க என இலங்கை வந்த இந்தியாவின் முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் என். கோபாலசுவாமியே இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

தேர்தல் ஒன்றை முன்னெடுப்பதற்கான அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் தேர்தல்கள் ஆணையாளர் அதிகாரத்தை கொண்டிருக்க வேண்டும்.

தேர்தல் வன்முறையாளர்களை கட்டுப்படுத்தும் அதிகாரமும் அவருக்கு இருக்கவேண்டும். எனினும் இலங்கையின் தேர்தல்கள் ஆணையாளரிடம் எந்த அதிகாரங்களும் இல்லை என்று இந்திய முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் மிகவும் தூரத்தைக் கடந்துவந்து தேர்தலில் வாக்களிக்க வேண்டியிருந்தது. இதன் போது இலங்கையின் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களுக்கு வாகன வசதிகளை செய்து கொடுக்கவில்லை.

எனவே தமது வாக்குகளை அளிப்பதற்காக அவர்கள் அதிக பணத்தை செலவழிக்க வேண்டியிருந்தது. தேர்தல் வாக்களிப்பை குழப்பும் வகையில் சில தொலைக்காட்சிகள் செயற்பட்டன.

எனினும் அதனை கட்டுப்படுத்த இலங்கையின் தேர்தல்கள் ஆணையாளரால் முடியவில்லை. பெரும்பாலாக புதிதாக அரச சேவையில் இணைந்த பணியாளர்கள் அரசாங்கத்தின் தேர்தல் பிரசாரங்களுக்கு பயன்படுத்தப்பட்டனர்.

வாக்களிக்கின் போது வாக்காளர்கள் பயமுறுத்தப்பட்டனர். எனினும் பொலிஸார் இதற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுத்தமையை தாம் அவதானிக்கவில்லை என்றும் கோபாலசுவாமி சுட்டிக்காட்டியுள்ளார். (எ-8)

# மாகாணசபை உறுப்பினர்களுக்கு வாகன அனுமதிப் பத்திரமில்லை !

(கொழும்பு)

மாகாணசபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த வாகன அனுமதிப் பத்திர முறைமை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் இரண்டரை ஆண்டு காலத்திற்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கு வரி விலக்குடன் கூடிய வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 145 மாகாணசபை உறுப்பினர்களுக்கும் எதிர்வரும் இரண்டரை ஆண்டு காலப்பகுதிக்கு வாகன அனுமதிப்பத்திரம் கிடைக்காது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. வெற்றியீட்டிய சில மாகாணசபை உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே வாகன அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

மாகாண சபை உறுப்பினருக்கு 45 ஆயிரம் டொலர் பெறுமதியான வாகனமும், முதலமைச்சர்களுக்கு 55 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனமும் இறக்குமதி செய்ய இந்த அனுமதிப்பத்திரத்தின் ஊடாக சந்தர்ப்பம் கிட்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-2)

# இலங்கையின் சதித்திட்டத்தை மத்திய அரசு தடுத்து நிறுத்தவேண்டும்

## சரத்குமார் கோரிக்கை

(கொழும்பு)

தமிழக மீனவர்களின் படகுகளை கைப்பற்றும் இலங்கையின் சதித்திட்டத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் சரத்குமார் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை கைது செய்து சித்திரவதைக்கு உட்படுத்தி விடுவித்து விட்டு, நம் மீனவர்களின் படகுகளை மட்டும் அவர்களே கைப்பற்றிக் கொள்ளும் ஒரு முடிவை எடுத்திருப்பது மிகப்பெரிய கண்டனத்திற்கு உரியதாகும்.

இப்படிப்பட்ட தீர்ப்புகளை நீதிமன்றங்கள் தரும்படியான சூழ்நிலையை உருவாக்கி தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தையே அழித்துவிடும் சதித்திட்டத்தை இலங்கை தீட்டியுள்ளது.

படகுகளைக் கைப்பற்றிக் கொண்டால் மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்க வரமாட்டார்கள் என்ற குரூர புத்தியுடன் இலங்கை செயல்படுகிறது.

தமிழக மீனவர்கள் பல நூறு பேர் கொல்லப்பட்ட நிலையிலும், நமது மீனவர்களின் உடைமைகள் சூறையாடப்பட்ட போதிலும், வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் மத்திய அரசின் நிலையை உணர்ந்துதான் இலங்கை மேலும் தவறுகளை செய்து கொண்டிருக்கிறது.

தமிழக மீனவர்களின் மீன்பிடி படகுகளை இலங்கையின் தேசிய சொத்து என அறிவித்திருப்பது மிகப்பெரிய மோசடியாகும். இதை ஒருபோதும் நாம் அனுமதிக்கக்கூடாது. மத்திய அரசு இதுபோன்ற நிலையை உருவாக்க விடாமல் தடுத்து நிறுத்த வேண்டும் என் தெரிவித்துள்ளார். (எ-8)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### கடவுளைக் காணலாம்



கடவுளைக் காணமுடியுமா என்றால் காணமுடியும். எந்தக் கண்களால் பார்க்க வேண்டுமோ, எந்த நோக்கத்தோடு பார்க்கவேண்டுமோ அப்படிப் பார்த்தால் காணலாம். ஒரு செயல் செய்கிறோம். எந்தச் செயல் செய்தாலும் ஒரு விளைவு இருக்கின்றதல்லவா? கையைத் தட்டினேன். சப்தம் வந்தது. கையைத் தட்டியவரைக்கும்தான் என்னுடைய முயற்சி. சப்தம் நான் செய்தேனா,ஒலியை நான் செய்தேனா நான் கொண்டு வந்தேனா– இல்லவே இல்லை. இருப்பில் இருந்து என்னுடைய செயலினால் குவிந்தது. காது கேட்கின்ற அளவுக்குக் குவிந்தது அவ்வளவுதான் சொல்லலாம்.

ஆகவே இறைவன் இல்லாத இடமே இல்லை. அதற்கு அடையாளம் என்ன? நீ எந்தச் செயலைச் செய்தாலும் அதற்கு விளைவாக வருபவனும் இறைவன்தான். அதுதான் இறைவனுடைய செயலே. அந்தச் செயல் அதனுடைய அனுபவத்தை வைத்துக்கொண்டு நல்ல செயலாக இருக்கவேண்டும் என்று சிந்தனையோடு திட்டமிட்டுச் செய்வோமானால் நலமே விளையும். இல்லை. புலனளவில் கவர்ச்சியாகி மயக்கத்திலே ஏதோ வேகத்திலே செய்கின்றபோது இன்பமும் வரலாம். துன்பமும் வரலாம். இன்பம் வேண்டும், அமைதி வேண்டும் என்றால் அதற்கு இறையுணர்வு, அறநெறி இரண்டும் வேண்டும்.

# வவுனியா பிரதேச ஆலயங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

## ஆலய விபரங்கள் வெளியிடப்படுள்ளன

(பூந்தோட்டம்)

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேச ஆலயங்களின் அபிவிருத்திக்கென தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என வவுனியா பிரதேச யெலாளர் கா. உதயராசா தெரிவித்துள்ளார்.

மீள்குடியமர்வு பிரதேச இந்து ஆலயங்களின் மீள்கட்டுமானத்திற்கு உதவுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணியாளரிடம் தாம் வேண்டுகோள் விடுத்திருந்ததன் படி 58 இந்து ஆலயங்களுக்கு இவ்வாறு தலா ஒரு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றுள்ள ஆலயங்களின் விபரம் வருமாறு,

குஞ்சுக்குளும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்,வாரியுடையூர் இலுப்பைக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், மருதோடை ஸ்ரீ கந்தசாமி ஆலயம், பாலமோட்டை புளியடி விநாயகர் ஆலயம், சேமமடு ஆட்காட்டி விநாயகர் ஆலயம், கூமாங்குளம் ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயம், மகிழங்குளம் சித்தி விநாயகர் ஆலயம், ஓமந்தை வீரகத்தி பிள்ளையார் ஆலயம், மகாறம்பைக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், ஆறுமுகத்தான் புதுக்குளம் ஸ்ரீ கந்தசாமி ஆலயம், நொச்சிக்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், பூவரசன் குளம் இயங்கராவூர் விக்னேஸ்வரா ஆலயம் பாலமோட்டை நவ்வி ஸ்ரீஞான சக்தி வேல்முருகன் ஆலயம்,மாதர் பணிக்கர் மகிழங்குளம் பத்திரகாளி அம்மன் ஆலயம், பண்டாரிக் குளம் அருள்மிகு மாடசாமி ஆலயம், கோயில்புளியங்குளம் ஸ்ரீமுத்து மாரி அம்மன் ஆலயம், கந்தபுர ஸ்ரீ முத்துமாரி அம்மன்ஆலயம், கல்நாட்டினகுளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், சாந்தசோலை ஸ்ரீ இராமர் ஆலயம், சாந்தசோலை துர்க்கை அம்மன் ஆலயம், ஈச்சம்குளம் ஸ்ரீ விநாயகர் ஆலயம், சாஸ்திரி கூழாங்குளம் ஸ்ரீ முருகன் ஆலயம், மதவுவைத்தகுளம் ஸ்ரீ காளியம்மன் ஆலயம், ஆறுமுகத்தான் புதுக்குளம் செங்காரத்தி மோட்டை ஆதி விநாயகர் ஆலயம், தோணிக் கல் ஸ்ரீ ஆதிசிவன் ஆலயம், சேமமடு ஸ்ரீ ஆதி விநாயகர் ஆலயம், சுந்தரபுரம் ஸ்ரீ சர்வசக்தி விநாயகர் ஆலயம், விநாயகபுரம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், எல்லப் பர் மருதங்குளம் ஸ்ரீ சித்தி விநாய கர்ஆலயம், சகாயமாதாபுரம் ஸ்ரீ துர்க்கை அம்மன்ஆலயம், நெளுக்குளம் சந்தி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம், வேலவர் சின்னக்குளம் ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம், பெரிய விளாத்திக் குளம் ஸ்ரீவீரசக்தி அம் பாள் குளம், மருக்காரம்பளை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், கட்டையர் குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், பணிக்கர் புளியங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், தவசிக்குளம் ஸ்ரீ ஆதி பிள்ளையார் ஆலயம், கற்பகபுரம் ஸ்ரீ பத்திர காளி அம்மன் ஆலயம், சுப்பரமணியர் வேலன்கு ளம் ஸ்ரீ முருகன் ஆலயம், வேலன்குளம் வீதி செக்கடிப்புலவு ஸ்ரீ முத்துமாரி அம்மன்ஆலயம், கந்தன் குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், நாவற்குளம் ஸ்ரீ வீரசக்தி அம்மன் ஆலயம், தவசிக்குளம் ஸ்ரீ விநாயகர் ஆலயம், புதுக்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், கோதண்டர்நொச்சிக்குளம் ஸ்ரீ கந்தசாமி ஆலயம், நொச்சிமோட்டை கருங்காலியடி பிள்ளையார் ஆலயம், நாம்பன் குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், கோவில் குளம் மருதமடு ஸ்ரீகந்தசாமி ஆலயம், அலை கல்லு போட்ட குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், சேமமடுஸ்ரீ நாகதம் பிரான் ஆலயம், பேயாடி கூழாங் குளம் ஸ்ரீ முனீஸ்வரர் ஆலயம், ஓமந்தை வேப்பங்குளம், ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் , பேயாடி கூழாங்குளம், ஸ்ரீ நாகபூசணி ஆலயம், காத்தர் சின்னக்குளம், ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், நெளுக் குளம் உச்சிப்பிள்ளையார் ஆலயம், மணிபுரம் மீனாட்சி அம்மன், ஆலயம், பாரதிபுரம், ஸ்ரீ முத்துமாரி அம் மன் ஆலயம், செல்வாநகர் செக் கட்டிப் புலவு ஸ்ரீ முத்துமாரி அம் மன் ஆலயம், ஆகியவற்றுக்கே நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்திருந்தார். (செ-5-266)

# வீதியை விரைந்து புனரமைக்க கோரிக்கை



வட்டக்கச்சி பெரிய சந்தைப் பகுதியிலிருந்து கல்மடு ஊடாக தர்மபுரம் பிரதேச வைத்தியசாலை வரை செல்லும் பிரதான வீதி 30 வருட காலமாக கவனிப்பாரற்ற நிலையில் எவ்வித புனரமைப்பும் மேற்கொள்ளப்படாத நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வீதியின் அவல நிலை தொடர்பிலும் இவ்வீதியின் புனரமைப்பின் முக்கியத்துவம் குறித்தும் பலமுறை பிரதேச மக்களால் எடுத்துக் கூறப்பட்டும் இதுவரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

30 வருட காலமாக இவ்வீதியை பரிபாலிக்க வேண்டியவர்களால் கைவிடப்பட்டுள்ள இவ் வீதி முழுமையாக சேதமடைந்துள்ளதுடன் பயணத்தின் போது பாரிய விபத்துக்கள் சம்பவிக்கக்கூடிய காரணிகளையும் உருவாகி கொண்டமைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

மேலும் வட்டக்கச்சி பெரிய சந்தை மற்றும் தர்மபுரம் பிரதேச வைத்தியசாலை போன்றவை அமைந்துள்ள இப் பிரதான வீதியை அநேகமானோர் பயன்படுத்தும் நிலையில் இவ் வீதியை புனரமைப்பதில் சம்பந்தப்பட்டவர்கள் பின்னிற்புதற்கான காரணம் என்னவென அப்பகுதி மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

மேலும் இவ்வீதியில் மின் இணைப்புக்கள் வழங்கப்படாத நிலையில் மாலையானதும் இவ் வீதி இருளில் மூழ்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமையில் இவ்வீதி குறி த்து பத்திரிகைகள் வாயிலாகவும் நேரடியாகவும் உரிய தரப்புகளுக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதிலும் இவை தொடர்பில் எவ்வித கரிசனையும் காட்டப்பட வில்லை என தெரிவித்துள்ள இம்மக்கள் இவ்வீதியின் புனரமைப்பு தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கைகள் சம்பந் தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளனர். (செ-5-269)




# அகளங்களுக்கு சாகித்திய விருது

வவுனியாவின் மூத்த கலைஞரும் பல்துறை சார்பானவருமான அகளங்கன் எனப்படும் நா.தர்மராஜாவுக்கு இம்முறை சாகித்திய விருது வழங்கப்படவுள்ளது.

கொழும்பில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள சாகித்திய விருது வழங்கும் நிகழ்விலேயே சிறுவர் இலக்கியத்துக்காக சின்னஞ்சிறிய சிறகுகள் எனும் சிறுவர் பாடல் நூலுக்காக சாகித்திய விருது கிடைக்கப்பெற்றுள்ளது.

இதேவேளை அகளங்கன் ஆன்மீக பேச்சு, வரலாற்று ஆய்வுகள், சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம், இலக்கிய ஆய்வுகள், நாடகத் துறை, கலைஞர் ஊக்குவிப்பு எனும் பல துறை களில் அறிமுகமானவர் என்று குறிப்பிடத்தக்கது. (செ-266)

# சில்லறைத் தட்டுப்பாடு முல்லைத்தீவில் அதிகரிப்பு

முல்லைத்தீவு பிரதேசத்தில் சில்லறை நாணயங்களுக்கான தட்டுப்பாடு அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இதன் காரணமாக வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் பணப்புழக்கத்தில் சில சவால்களை எதிர்நோக்கி வருவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை இங்கு பல்வேறு அரச, அரச சார்பற்ற வங்கிகள் செயற்படுத்தப்படுகின்ற போதிலும் இவ் வங்கிகள் மக்கள் எதிர்நோக்கியுள்ள சில்லறைத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முன்வரவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (செ-5-267)

# பல்வேறு குறைபாடுகளுடன் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

(முல்லைத்தீவு)

அளம்பில் பிரதேச பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வருவதாகவும் இதன் காரணமாக பொதுமக்கள் சில பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

இதன்படி ஏறத்தாழ 450 குடும்பங்கள் வரையில் இப் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் பயன்களைப் பெற்றுவரும் நிலையில் இச் சங்கம் மின் இணைப்பு உள்ளிட்ட பல குறைபாடுகளைக் கொண்டு இயங்குவதுடன், பூரணத்துவமான கட்டட அமைப்பையும் கொண்டிருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2 வருட காலமாக இயங்கி வரும் இக்கூட்டுறவு சங்கம் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்ட போதும் தொடந்து பல குறைபாடுகளுடன் இயங்குவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(செ-5-267)

# வவுனியா நகரசபையால் உள்ளூராட்சி வாரம் ஏற்பாடு

வவுனியா நகரசபையால் உள்ளூராட்சி வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக நகரசபையின் செயலாளர் கே. சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வருடாந்தம் வவுனியா நகர சபையினால் உள்ளூராட்சி வாரம் மிகச் சிறப்பாக பல்வேறு செயற்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் இம்முறை கோவில் குளம் பிரதேசத்தில் நடமாடும் சேவையை எதிர்வரும் 21 ஆம் திகதி நடத்தவுள்ளதுடன், இதன் போது கட்டட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல், ஆதன பெயர் மாற்றங்கள், துவிச்சக்கரவண்டி அனுமதிப் பத்திரங்கள், முச்சக்கரவண்டி பதிவுகள், தொற்று நோய் மருந்து சேவை, கால்நடை மருத்துவம் மற்றும் நாய்களுக்கான தடுப்பூசிகளும் ஏற்றப்படவுள்ளன.

இதேவேளை 22 ஆம் திகதி வருமான மேம்பாட்டுக்காக வாகனங்கள் மூலம் நடமாடும் வருமான சேகரிப்பும், 23 ஆம் திகதி சுகாதார துப்புரவேற்பாட்டு தினமாக பொது இடங்களில் சிரமதானங்களும் சிறந்த உணவகங்களை வகைப்படுத்தி பரிசில் வழங்கலும் எலிக் காய்ச்சல் பற்றி பாடசாலை மாணவர்களுக்கு அறிவூட்டல் நிகழ்வும் இடம் பெறவுள்ளதுடன் 24 ஆம் திகதி மக்கள் பயன்பாட்டு தினமாக தெருவிளக்குகள் பொருத்தும் செயற்பாடும் இடம் பெறவுள்ளது.

இத்துடன் 25 ஆம் திகதி சுற்றாடல் மற்றும் மரம் நாட்டம் தினத்தில் மரம் நாட்டம் நிகழ்வும் பாடசாலை மாணவர்களுக்கு சுற்றாடல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளும் வவுனியா மாவட்டத்தில் குடிநீர் முகாமைத்துவத்தில் எதிர்கால சவால்களும் அதனை நிவர்த்தி செய்யும் வழிமுறைகளும் எனும் செயற்பாடும் இடம்பெறவுள்ளதுடன் 27 ஆம் திகதி கல்வி மற்றும் நூலக அபிவிருத்தி தினத்தில் புதிய நூல்கள் காட்சிப்படுத்தலும் வாசகர்களுக்கிடையிலான போட்டிகளும் நடமாடும் நூலக சேவையும் இடம் பெறவுள்ளன.

இத்துடன் பார்வையற்றோருக்கான பாடல் போட்டியும் இடம் பெறவுள்ளதுடன் 28 ஆம் திகதி விளையாட்டு மற்றும் பரிசில்கள் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (செ-5-266)

# ஜெகோவாவின் சாட்சிகள் மாநாடு ஏற்பாடு

(பூந்தோட்டம்)

ஜெகோவாவின் சாட்சியங்களினால் நடத்தப்படும் "கடவுளுடைய வார்த்தையே சத்தியம்'' எனும் தலைப்பிலான மாநாடு எதிர்வரும் 11, 13 ஆம் திகதிகளில் முற்பகல் 9.20 மணிக்கு வவுனியா கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி மாநாடு கடந்த 27 ஆம் திகதியும் நேற்றைய தினமும் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டிருந்த போதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் இவ்வாறு திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-5-266)

# குளங்களை புனரமைப்பு செய்யக் கோரிக்கை

(பூநகரி)

பூநகரி பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய சிறு குளங்கள் பற்றி ஆய்வுகள் நடத்திய (SAO) உலக உணவு விவசாய நிறுவனம் கமக்கார அமைப்புக்களின் அனுசரணையுடன் இருபது குளங்களைப் புனரமைப்பதற்கான பெருந்தொகையான நிதியை நான்கு மாதங்களுக்கு முன் ஒதுக்கீடு செய்துள்ள போதிலும் இது வரை வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

நான்கு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் இவ் வேலைகள் ஆரம்பிக்கப்படாமை பற்றி பூநகரி கமநல சேவை நிலையத்தில் மாதாந்த கூட்டத்தின் போது கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் கருத்துக்களை முன்வைத்தனர்.

பருவ மழை ஆரம்பமாகியுள்ள நிலையில் குளங்களை ஆழமாக்கவோ அணைக்கட்டுக்களை அமைக்கவோ முடியாத நிலை தோன்றியுள்ளதாக கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

ஒதுக்கப்பட்ட நிதி யாவும் செலவிடப்படாது திருப்பி அனுப்பப்படும் நிலை தோன்றியுள்ளதாக கமக்கார அமைப்பினர் கவலை தெரிவித்துள்ளனர். (ம-84)

## தோனியால் ஓடிய விளம்பர நிறுவனம்



பெரிய தொகை கேட்டதால் விளம்பர நிறுவனம் ஒன்று தோனியை விட்டுவிட்டு வேறொரு நபரை ஒப்பந்தம் செய்துள்ளது.

பிரபல சூட் நிறுவனம் தங்கள் விளம்பரத்தில் நடிக்க பிராண்ட் அம்பாசிடராக இருக்குமாறு கேட்டு இந்திய கிரிக்கெட் அணியின் அணித் தலைவர் தோனியை அணுகியுள்ளது.

அவரோ ரூ.10 கோடி சம்பளம் கேட்கவே பெரிய தொகை எனக் கூறி அங்கிருந்து கிளம்பிவிட்டதாம்.

இதையடுத்து பாலிவுட் நடிகர் சைஃப் அலிகானை அணுகியபோது அவரோ தோனி கேட்டதில் மூன்றில் ஒரு பங்கு தொகையையே அதாவது 3 கோடி சம்பளமாகக் கேட்டுள்ளார்.

இதனால் மகிழ்ச்சி அடைந்த அந்த நிறுவனம் சைஃப் அலி கானை தங்கள் விளம்பரத் தூதராக நியமித்து ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டது.

விளம்பர படங்களின் மூலம் தோனி கோடிக்கணக்கில் வருமானம் ஈட்டி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பி.சி.சி.ஐ தலைவராக சீனிவாசன் மீண்டும் தெரிவு

## ஆனால் பொறுப்பேற்க முடியாது

இந்திய கிரிக்கெட் வாரியத்தின் தலைவராக தமிழ்நாட்டைச் சேர்ந்த என்.சீனிவாசன போட்டியின்றி மீண்டும் தேர்தெடுக்கப் பட்டுள்ளார்.

எனினும் அவர் பதவியேற்றுக் கொள்வதற்கு இந்திய உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இந்த ஆண்டு இந்தியன் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டிகளில் இடம்பெற்ற முறைகேடுகளில், சீனிவாசனின் மருமகனான குருநாத் மெய்யப்பனுக்கு தொடர்பு உள்ளது என்று பொலிஸார் குற்றஞ்சாட்டி அவர் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக உள்ளக விசாரணைக்கு ஏற்பாடு செய்த கிரிக்கெட் வாரியத்தின் குழு, சீனிவாசன் மற்றும் அவரது மருமகன் மீது தவறுகள் இல்லை எனக் கூறி முடிவெடுத்திருந்தது.

அந்தக் குழு அமைக்கப்பட்ட விதம் மற்றும் அதன் அறிக்கை ஆகியவற்றை எதிர்த்து பிஹார் கிரிக்கெட் சங்கம் உச்ச நீதிமன்றத்தை அணுகி, நேற்றுச் சென்னையில் நடைபெற்ற கிரிக்கெட் வாரியத்தின் தேர்வுக்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரியிருந்தது.

### உச்சநீதிமன்றம் கேள்வி

கடந்த வெள்ளிக்கிழமை இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஏ.கே.பட்நாயக் மற்றும் ஜே.எஸ். கேஹர் அடங்கிய அமர்வு, தேர்தலுக்கு தடை விதிக்க மறுத்தாலும், சீனிவாசன் தலைவராக தேர்தெடுக்கப்பட்டாலும் அவர் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு தடை விதித்து இடைக்கால உத்தரவு பிறப்பித்தனர்.

இந்த வழக்கு மீண்டும் இன்று 30 ஆம் தேதி உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவுள்ள நிலையில், நேற்று நடைபெற்றத் தேர்தலில் சீனிவாசன் போட்டியின்றி மீண்டும் தலைவராக ஓராண்டுக்கு தேர்தெடுக்கப்படடுள்ளார்.

உச்சநீதிமன்றத்தில் வழக்கு கடந்த வாரம் விசாரிக்கப்பட்டபோது, அவரது மருமகன் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மீண்டும் தேர்தலில் போட்டியிட சீனிவாசன் ஏன் ஆர்வமாக உள்ளார் என்றும், வழக்கு நீதிமன்றத்தின் முன்னர் இருக்கும்போது தேர்தலை நடத்த ஏன் கிரிக்கெட் வாரியம் முனைப்பாக உள்ளது என்றும் நீதிபதி பட்நாயக் கேள்வி எழுப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று நடைபெற்ற கிரிக்கெட் வாரியத்தின் உயர்மட்டக் கூட்டத்தில் சர்ச்சைகுரிய ஐ பி எல் போட்டிகளின் தலைவராக ஒடிஷா கிரிக்கெட் சங்கத்தின் ரஞ்சிப் பிஸ்வால் அறிவிக்கப்பட்டுள்ளார். அவர் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான இந்திய அணியின் முன்னாள் தலைவர்.

எனினும் சீனிவாசன் சிறிது காலம் தலைவர் பொறுப்பிலிருந்து ஒதுங்கியிருந்த போது, தற்காலிகமாக தலைவர் பொறுப்பை கவனித்துவந்த ஜக்மோகன் டால்மியாவுக்கு கிரிக்கெட் வாரியத்தில் முக்கிய பொறுப்புகள் ஏதும் கொடுக்கப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.



இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகளில் கிரிக்கெட் விளையாட்டின் முன்னேற்றம் குறித்த குழுவின் தலைவராக மட்டுமே டால்மியா நியமிக்கப்பட்டுள்ளார்.

கிரிக்கெட் வாரியத்தின் தலைவராக மேலும் ஓராண்டுக்கு சீனிவாசன் தேர்தெடுக்கப்பட்டாலும், அவரால் அந்தப் பதவியை தக்கவைத்துக் கொள்ள முடியுமா என்பது இன்று வழக்கு விசாரணையின் போது உச்ச நீதிமன்றம் என்ன கூறப் போகிறது என்பதைப் பொறுத்தே அமையும்.

# ராஜஸ்தான் வெற்றி




சம்பியன்ஸ் லீக் கிரிகெட் போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் மற்றும் பெர்த் ஸ்கோர்செர்ஸ் அணிகள் நேற்று விளையாடின.

ஜெய்ப்பூரில் நேற்று இரவு 8 மணிக்கு நடந்த போட்டியில் ராகுல் டிராவிட் தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும், காடிச் தலைமையிலான பெர்த் ஸ்கோசர்ஸ் (அவுஸ்திரேலியா) அணியும் மோதின.

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி தான் மோதிய 2 ஆட்டத்திலும் வெற்றி பெற்று உள்ளது. முதல் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸையும் இ 2-வது ஆட்டத்தில் லயன்ஸ் அணியையும் வீழ்த்தியது. நேற்றைய போட்டியிலும் வென்று ஹாட்ரிக் வெற்றி பெறும் ஆர்வத்தில் ராஜஸ்தான் அணி களமிறங்கியது.

முதலில் துடுப்பாட்டம் செய்த பெர்த் ஸ்கோர்செர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 10 விக்கெட் இழப்பிற்கு 120 ஓட்டங்களை எடுத்தது.

121 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய ராஜஸ்தான் ராயல்ஸ் அணி ஒரு விக்கெட் மட்டும் இழந்து 16.3 ஓவர்களில் 121 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் அதிகபட்சமாக ரஹானே 62 ரன்கள் எடுத்தார்.



இவ் வெற்றியின் மூலம் ராஜஸ்தான் அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

# சச்சின் ஓய்வுபெற சீனிவாசனே காரணம்



## பரபரப்புக் குற்றசாட்டு

சீனிவாசனின் வலியுறுத்தலை அடுத்து தான் சச்சின் டெண்டுல்கர் சர்வதேச ஒரு நாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றதாக பீகார் கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் ஆதித்யா வர்மா தெரிவித்துள்ளார்.

ஐபிஎல் சூதாட்டத்தில் பிசிசிஐ-ன் தலைவர் குருநாத் மெய்யப்பன் சிக்கியது தொடர்பாக பீகார் கிரிக்கெட் சங்கத்தின் ஆதித்யா வர்மா உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

அவரது மனுவை விசாரித்த நீதிமன்றம் சீனிவாசன் வாரியத் தேர்தலில் போட்டியிடலாம், ஆனால் வெற்றி பெற்றால் தாங்கள் தீர்ப்பு அளிக்கும் வரை பொறுப்பேற்கக் கூடாது என்றது.

இதையடுத்து ஆதித்யா வர்மா கூறுகையில், உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு மகிழ்ச்சி அளிக்கிறது.

இது என் சொந்த சண்டை அல்ல, கடந்த 13 ஆண்டுகளாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள பீகாருக்கான சண்டை.

சீனிவாசனின் வலியுறுத்தலால் தான் சிறந்த வீரரான சச்சின் டெண்டுல்கர் சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற வேண்டியதாகிவிட்டது.

தெரிவாளர்கள் சச்சினிடம் பேசினார்கள், அதன்பின்பே ஓய்வை அறிவித்தார்.

சீனிவாசன் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் பெயரை கெடுத்துவிட்டதாகவும், தான் நீதிக்காக போராடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

# பிரபா- ரணில் உடன்படிக்கை...

களை எடுத்திருக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார். எல்லாள மன்னருக்கும் துட்டகைமுனு மன்னனனுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையை விடவும் பிரபாகரன் - ரணிலுக்கு இடையில் செய்து கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கை வலுவானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரபாகரனினால் முன்வைக்கப் பட்டிருந்த 26 அம்ச சுயாட்சி நிர்வாக அலகு குறித்த யோசனையில் குறிப்பிடப்பட்ட சில விடயங்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் காணப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

பிரபாகரனின் சுயாட்சி நிர்வாக அதிகாரம் குறித்த ஆவணத்தை சிங்களத்தில் மொழிபெயர்ப்பு செய்யக்கூடிய அவகாசத்தை தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் விமல் வீரவன்ச போன்றவர்கள் வழங்கவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முயற்சிகளை விமல் வீரவன்ச, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் பலவீனப்படுத்தி நாட்டை மீளவும் யுத்தத்தில் ஆழ்த்தியதாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, பிரித்தானியா, இஸ்ரேல் போன்ற நாடுகளுடன் ஆயுதங்களைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்த நாடுகளிடம் சரணடைந்து விட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். யுத்தம் இடம்பெற்ற காலத்தில் ஆயிரக் கணக்கானவர்கள் காணாமல் போயுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

வடக்கில் தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளதாகவும் பிரபாகரன் அன்று சமர்ப்பித்த ஆவணத்திற்கு நிகரான ஆவணமொன்றையே தேர்தலில் வெற்றியீட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தற்போது சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# கிழக்கு மாகாண...

நிலையில் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய செயல்பாடுகள் இலலைஎன்பதைசபையின்ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஒப்புக்கொள்கிறார்கள்.

முன்னைய ஆட்சியுடன் ஒப்பிடுகையில் தற்போதைய ஆட்சியில் ஒருவித தேக்கநிலை தென்படுவதாக பொதுமக்களிடம் பேச்சு அடிபடுகிறது.

பொதுமக்களிடையே காணப்படும் இத்தகைய கருத்து தொடர்பாக மாகாண சபையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுபயினர்கள் தெரிவித்ததாவது,

பொதுவாக விமர்சனங்கள் உள்ளதை ஆளும் தரப்பை சேர்ந்த முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஒப்புக் கொணடார்.

மாகாணசபை அரசின் மூலமாக குறிப்பிட்டு சொல்லக்கூடிய அபிவிருததி நடவடிக்கைகளோ புதிய சட்ட ஒழுங்கு நடவடிக் கைகளோ இடம்பெறவில்லை என்றும் அவர் கூறினார்.

கிழக்கு மாகாண அமைச்சர்கள் வாரியத்தில் நான்கு முஸ்லிம்களும் சிங்களவர்ஒருவரும்அமைச்சர்களாக பதவி வகிக் கின்றார்கள். தமிழர்கள் எவரும் அமைச்சராக இல்லை.

சிற்றூழியர் நியமனம் தொடக்கம் அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகள் வரை தமிழர்களுக்கு அமைச்சர்களினால் பாரபட்சம் காட்டப்படுவதாக பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் இரா.துரை ரெத்தினம் குற்றஞ்சாட்டினார்.

கிழக்கு மாகாண சபையில் மத்தியில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைப்பதற்கு பெரும்பான்மை தேவைப்பட்டபோது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சி அமைக்க ஆதரவு வழங்கியது. அக்கட்சியை சேர்ந்த இருவர் அமைச்சர்களாகவும் தற்போது பதவி வகிக்கின்றார்கள்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பங்காளிக் கட்சியாக இருந்தாலும் அக்கட்சியை சேர்ந்த உறுப்பினரான ரம்ழான் அன்வர் தற்போதைய ஆட்சி தன்னைப் பொறுத்தவரை பொம்மை ஆட்சி என்கிறார்.

முஸ்லிம் ஒருவர் தற்போது முதலமைச்சர் பதவியிலிருந்தும் காணி பிரச்சினை உட்பட சமூகம் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற முடியாத நிலையில் அந்த பதவியிலும் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள் என அவர் சுட்டிக்காட்டினார்.

மாகாண சபையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எத்தகைய கருததுக்களை கொண்டிருந்தாலும் கிழக்கு வாழ் மூவினங்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய தமது செயல்பாடுகள்இருப்பதாக அமைச்சர்கள் வாரியத்தின் பேச்சாளரும் மாகாண வீதி அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நீர்ப்பாசன அமைச்சரான எம்.எஸ்.உதுமாலெப்பை கூறினார்.

தனது அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளில்இனரீதியானபாகுபாடுகள் இலலை என்றும் அவர் வாதிட்டார். (எ-8)

# இராணுவத்...

மாகாண சபையின மூலம்வட இலங்கையில் ஜனநாயக விழுமியங்களினை இனங்களுக்கிடையில் நல்லுறவினை ஏற்படுத்தும் நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இதனைப் பயன்படுத்தி அரசாங்கம் தனது நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதனைவிடுதது இனவாதம்பேசிக் கொண்டிருப்பதனால பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை.

இராணுவத்தில் உள்ள ஒருவர் மக்கள் பிரச்சினையை அறிய வாய்ப்பில்லை. ஆகையினால் சிவில் சமூகததினைச் சேர்ந்த ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும் என்றா முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். (எ-4)


# கரும்பு தின்ன கைக்கூலி...

## வெளிநாட்டு ஹோட்டல் & சொகுசு கப்பல் வேலைவாய்ப்புக்கள்

- UK, Australia, New Zealand, Singapore, Malaysia, China 3ஸ்டார் 5ஸ்டார் ஹொட்டேல்கள்
- உலகம் சுற்றிவரும் அமெரிக்க சொகுசுக் கப்பல்கள்



P&O CRUISES www.pocruises.com
Disney CRUISE LINE www.disneycruise.com
PRINCESS CRUISES escape completely www.princess.com

வெளிநாட்டுப் பிரதிநிதி Ryan Kok பங்கேற்கும்

விளக்கக் கருத்தரங்கு & உடனடி அனுமதி

காலை 10 மணிமுதல்
சிகரம் விரிவுரை மண்டபத்தில்

இன்று மட்டும்

சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டி
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(DAMRO வுக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11
நேரடி: 0773 616 798
(C-4961)



## ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின் தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை - 2014 வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

| யாழ்ப்பாணத்தில் | சாவகச்சேரியில் |
| --- | --- |
| அன்பொளி கல்வியகம், யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். | அன்பொளி கல்வி நிலையம், தபாற்கந்தோர் வீதி, பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி. |

அனுமதிகளை 28.09.2013 சனிக்கிழமையிலிருந்து 01.10.2013 செவ்வாய்க்கிழமை வரை முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு : பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

"சின்னவிழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்."

- இயக்குநர்கள் -

(சி-4944)


# ஆளுநருடன் இன்று...

வுள்ளனர் என தெரியவருகிறது.

அதற்கு முன்னராக யாழ். செயலகத்திலுள்ள தேர்தல்கள் திணைக்களத்திற்குச் சென்றும் கலந்துரையாடவுள்ளனர்.

வடமாகாண சபைத் தேர்தலில் கிடைத்த இரண்டு போனஸ் இடங்களில் ஒன்றை சுழற்சி முறையில் வழங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

வடமாகாண சபைக்குரிய போனஸ் இடங்களில் ஒன்றை பல்வேறுபட்ட சமூக நலன்களைக் கருத்திற் கொண்டு வருடாந்த சுழற்சி முறையில் அளிப்பது என்று கூட்டமைப்பு நேற்று அதிகார பூர்வமாக முடிவெடுத்துள்ளது.

அதன்படி, முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிட்ட மேரி கமலா குணசலன் என்பவருக்கு முதலாம் ஆண்டு அந்த இடத்தை வழங்க முடிவு செய்யப் பட்டுள்ளதாக கூட்டமைப்பின்பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இரண்டு போனஸ் இடங்களில் ஒன்று ஏற்கெனவே தீர்மானிக்கப் பட்டிருந்தபடி, மன்னார் மாவட்டத்தல போட்டியிட்ட அஸ்மின் அயூப்க்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசிய கட்சித் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் மாகாண அமைச்சர் களைத் தெரிவு செய்வது தொடர்பாக முடிவெடுக்கப் படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அது தொடர்பான முடிவுகள் பின்னர் எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-4,6,8)

# அரசுக்கு வெளிநாட...

மாற்றியுள்ளது. அபிவிருத்தியை கண்காட்சியாக்கி தேசத்திற்கு மகுடம் கண்காட்சி தற்போது கடனுக்கு மகுடமாக மாறியுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தேர்தல் நியாயமாக நடைபெற்றதாக கூறினாலும், வாக்குச்சீட்டுகள் அடங்கிய பொதிகள் மீட்கப்பட்டன. இதனால் அந்த தேர்தலை நியாயமான தேர்தலாக கருத முடியாது என்றார்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் இணைந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் திட்டமொன்றை ரணில் விக்கிரமசிங்க செயற்படுத்தி வருவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கல்கமுவ பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில். அவர் இதனை கூறினார்.

சந்திரிகா குமாரதுங்கவுடன் இணைந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரத்தை பெறும் திடமும் அவர்களுக்கு உள்ளது.

இவர்கள் ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு தாவிச் செல்லவே தருணம் பார்த்து காத்திருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-8)

# மாகாணசபை அதி...

இருப்பதாக ஏற்கெனவே மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியிருந்த தீர்ப்பை உயர்நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை இரத்துச் செய்தது.

இந்த விடயம் தற்பொழுது மிகவும் தெளிவாகியுள்ளது. அரசியல் அமைப்புச்சட்டத்தை மீறி அரசாங்கம் காணி அதிகாரங்களை பகிராது என்றார்.

இதேவேளை போர் நடைபெற்ற வடக்கு மாகாணத்திற்கு கடந்த 25 வருடங்களின் பின்னர் நடத்தப்பட்ட தேர்தலில் 36 ஆசனங்களில் தமிழ்த தேசியக் கூட்டமைப்பு 30 ஆசனங்களை கைப்பற்றியது.

1987 ஆம்ஆண்டு கொண்டுவரப்பட்ட 13-வது அரசியல் அமைபபுத திருத்தச் சட்டத்தை முழுமையான அமுல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி கூட்டமைப்பு பிரசாரத்தில் ஈடுபட்டு வந்தது.

1987 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கு அமைய மாகாண சபைகள ஏற்படுத்தப்பட்டன.

எவ்வாறாயினும், மாகாண சபைகளுக்கு தடைகளற்ற அதிகாரங்களை வழங்குவது சிறுபான்மை தமிழர்களின் கனவான நாட்டை பிரிப்பதற்கு அது வழிவகுக்கும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கூட்டணியில் உள்ள சிங்கள தேசியக கட்சிகள் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-8)


# Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம் (4028)

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
0212224040 / 0772931062



# வாகனம் வாடகைக்கு

A/C வசதியுள்ள சொகுசு கார் மற்றும் வான் சொந்தத் தேவைக்கும், மற்றும் திருமண வைபவங்களுக்கும் குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு வழங்கப்படும்.



சாரதியுடன் அல்லது சாரதி இல்லாமலும் வழங்கப்படும்.

தொடர்பு: 072778855, 0774717217, 0773246758
(4059)



## அதிபர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான கருத்தரங்கு

12ஆம், 13ஆம் திகதிகளில் இருக்கும் இப் பரீட்சைகளுக்கான கருத்தரங்கு யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் (யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்) நடைபெறவுள்ளது.

அடுத்த வகுப்பு : புதன் (02.10.2013) பி.ப. 4.30 மணி
T.P. : 0754164564
(C-4960)


# அமைச்சுத்...

வர்களுக்கிடையே முரண்பாடான கருத்துக்கல் நிலவியதால் இறுதி முடிபுகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

கட்சியின் கலந்துரையாடலின்பின் நடத்தப்படவிருந்த ஊடக சந்திப்பும் நடத்தப்படாமலேயே கூட்டம் முடிபுக்கு வந்தது.

தமிழ்மக்களின்ஆட்சிக்குரிய ஆணையை வடக்கின் பெரும்பான்மையாக பெற்ற தமிழ்த தேசியக் கூட்டமைப்பிற்குள் அமைச்சு பதவி தொடர்பில் முரண்பாடுகளும் இழுபறிகளும் நிலவி வருகின்றமை மக்களிடையே விசனத்தை உண்டு பண்ணியுள்ளது.

இதேவேளை எதிர்வரும் இரண்டாம் திகதி கூடவுள்ள கூட்டத்தில் தமிழ்த் தேசியக கூட்ட மைப்பின் அமைச்சர் தெரிவு குறித்து இறுதி முடிபு எடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (எ-8)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.